உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
விலை - 20
பக்கங்கள் - 28+IV
சுடர் 32 | கதிர் 133 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 26 சனிக்கிழமை 08.04.2017

## மாவாவுக்குத் தடை
விற்போருக்கு
ஒரு வருடச் சிறை

கொழும்பு, ஏப். 8
பாபுல், பீடா, மாவா, ஹான்ஸ், புகையிலைத் தூள், இறக்குமதி செய்யயப்படும் பாக்கு, இலத்திரனியல் சிகரெட் ஆகியவற்றைத் தடை செய்வதற்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.
இவற்றை விற்பனை செய்தால் ஒரு வருடச் சிறைத் தண்டனை >> 24

# 13 வயதுச் சிறுமியைக் கொன்ற காமக் கொடூரனுக்குத் தூக்கு
### யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8
நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திக் கொடூரமாகக் கொலை செய்த ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் கந்தசாமி ஜெகதீஸ்வரனுக்கு தூக்குத் தண்டனை விதித்து யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.
"குற்றவாளி மீதான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் அவருக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. 25 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அவர் செலுத்த வேண்டும். கொல்லப்பட்ட சிறுமியின் பெற்றோருக்கு 10 லட்சம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி வழங்க வேண்டும். >> 04

## பணம் சம்பாதிக்கவே இப்போது பலர் அரசியலுக்கு வருகின்றனர்
### ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் அனுதாபப் பிரேரணையில் மைத்திரி

கொழும்பு, ஏப். 8
மறைந்த முன்னாள் தலைமை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அரசியல் ஊடாக எதனையும் சம்பாதிக்கவில்லை. ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யாமலும் முன்னுதாரண புருஷராக அவர் திகழ்ந்தார். தற்போது அரசியலுக்கு வருகின்றவர்கள் பணம் சம்பாதிப்பவர்களாகவும், அரச சொத்துக்களைத் >> 24



# விமலுக்கு கிடைத்தது பிணை

கொழும்பு, ஏப். 8
அரச நிதியை மோசடி செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸவைக் கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுவித்துள்ளது. >> 24

## மோ. சைக்கிள் விபத்தில் குடும்பத்தலைவர் சாவு
### இயற்றாலையில் நேற்றிரவு சம்பவம்

தென்மராட்சி, ஏப். 8
வரணி, இயற்றாலைப் பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற சாலை விபத்தில் சிக்கி குடும்பத்தலைவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்றிரவு இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.
"தென்மராட்சி தாவளை, இயற்றாலைப் பகுதியிலுள்ள சாலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளாகி >> 24

## உளறணியில் 28 ஏக்கரை 27 வருடங்களின் பின்னர் விடுவித்தது இராணுவம்



யாழ்ப்பாணம், ஏப். 8
வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துக்குட்பட்டிருக்கும் ஊறணி மற்றும் மயிலிட்டித்துறை ஆகிய பகுதிகளில் சுமார் 28.1 ஏக்கர் நிலம் 27 வருடங்களின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டுப் பொதுமக்களிடம் >> 04

# சிரியா மீது அமெரிக்கா போர் முழக்கம்
### இரசாயனத் தாக்குதலில் அப்பாவிகள் கொல்லப்பட்டதையடுத்து

வொஷிங்டன், ஏப்ரல் 8
சிரியாவில் மக்களின் பகுதிக்குள் இரசாயனத் தாக்குதல் நடத்தி நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர். இதன் எதிரொலியாக சிரியா மீது போர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது அமெரிக்கா.
இரசாயனத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் சிரியாவின் முக்கிய வான்படைத் தளம் மீதும் >> 24


அமெ. போர்க் கப்பலில் இருந்து சீறிப் பாய்கிறது ஏவுகணை

## ஆவா குழுவைச் சேர்ந்த ஐவர் கைதடியில் கைது
### மறைந்திருந்தவேளையில் மடக்கினர் யாழ். பொலிஸார்

யாழ்ப்பாணம், ஏப். 8
ஆவா எனப்படும் வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 5 பேர் யாழ்ப்பாணம், கைதடியில் தலைமறைவாக இருந்தபோது கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர்கள் மறைந்திருப்பதாகப் பொலிஸாருக்கு இரகசியத் >> 24

## அல்வாயில் நேற்றிரவு சைக்கிளில் சென்றவரின் உயிரைப் பறித்தது மோ. சைக்கிள்

அல்வாய், ஏப். 8
"பருத்தித்துறையில் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு துவிச்சக்கர வண்டியில் பயணித்த குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளிலில் பயணித்த இளைஞரும் படுகாயமடைந்தார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பருத்தித்துறை, அல்வாய் பகுதியில் நேற்றிரவு 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கரவெட்டியை சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான பாலசிங்கம் இராசலிங்கம் (வயது 56) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தார்.
"வீடுகளுக்குச் சென்று காட்போட் பெட்டிகளை விலைக்கு வாங்கி >> 04

## போரில் அவயவமிழந்தோருக்கு 2016 இல் 1360 வீடுகள் அமைப்பு
### சபையில் கூறினார் சுவாமிநாதன்

கொழும்பு, ஏப். 8
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போரால் அவயவமிழந்தோருக்கு 2016ஆம் ஆண்டில் மாத்திரம் ஆயிரத்து 360 வீடுகளும், 953 கழிவறைகளும் அமைக்கப்பட்டுள்ளன என்று நேற்றுச் சபைக்கு அறிவித்த மீள்குடியேற்ற அமைச்சு, எதிர்காலத்தில் ஒன்றரை இலட்சம் ரூபா பெறுமதியான சிறப்புக் கழிவறைகளை அவயவமிழந்தோருக்கு நிர்மாணித்துக் கொடுப்பதற்கான திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது >> 24

## புதிய முறைமையில் இந்த வருடத்துக்குள் உள்ளூராட்சித் தேர்தல்
### மைத்திரி நம்பிக்கை



கொழும்பு, ஏப். 8
"உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு புதிய முறைமையை நடைமுறைப்படுத்தி இந்த வருடத்துக்குள் தேர்தலை நடத்த முடியும்"
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை தெரிவித்தார்.
தூய்மையான அரசியல் கலாசாரத்தை நோக்கி உருவாக்கப்பட்ட மார்ச் 12 இயக்கம் வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நாடு முழுவதும் ஆரம்பித்த அறிவூட்டல் செயற்றிட்டத்தின் நிறைவு நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க >> 24

## மன்னிப்புச் சபைக் கிளை இங்கு அமைக்கக்கூடாது
### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 8
பன்னாட்டு மன்னிப்புச் சபையின் கிளை இலங்கையில் அமைக்கப்படக்கூடாது என முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். >> 24

## கேப்பாபிலவுப் போராட்டத்துக்கு ஆதரவளித்தனர் தெற்கு மக்கள்



முல்லைத்தீவு, ஏப். 8
தமது பூர்வீக நிலத்தை விடுவிக்கக் கோரி நேற்று 38 ஆவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவித்து தென்னிலங்கையைச் சேர்ந்த 100 இற்கும் மேற்பட்ட மக்கள் போராட்டக்களத்துக்குச் சென்றனர். (விரிவு பக். 12)

# இராணுவம் வெளியேறினால் மட்டுமே தமிழரின் அகதி வாழ்வு முடிவுக்கு வரும்
### அகதிகளுக்கான ஐ.நா. பிரதிநிதியிடம் எடுத்துரைத்தார் வடக்கு முதலமைச்சர்

யாழ்ப்பாணம், ஏப். 8
வடக்கு மாகாணத்தில் உள்ள இராணுவத்தினர் மக்களின் காணிகளை விட்டு வெளியேறினால் மட்டுமே தமிழரின் அகதி வாழ்க்கை முடிவுக்கு வரும்.
இவ்வாறு தன்னைச் சந்தித்த அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் >> 24



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## ...த்தன்று புலமைப் பரிசில் பரீட்சை

*வேறொரு திகதிக்கு மாற்றுமாறு வடக்கு கல்வி அமைச்சு கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப். 8

இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரீட்சை நல்லூர்க் கந்தன் ஆலயத் தேர்த் திருவிழாவன்று வருவதால் பரீட்சையை வேறு ஒரு தினத்துக்கு மாற்றுவது தொடர்பில் ஆராயுமாறு பரீட்சைகள் திணைக்களத்திடம் கோரியுள்ளதாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இவ்வாண்டு தரம் 5 புலமைப் பரீட்சை நல்லூர்க் கந்தன் ஆலய தேர்த் திருவிழாவன்று வருவதாகப் பலராலும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனையடுத்துப் பரீட்சைத் திகதியை மாற்றுவது தொடர்பில் ஆராயுமாறு பரீட்சைகள் திணைக்களத்திடம் கோரியுள்ளோம்.

நல்லூர்க் கந்தன் ஆலயத் திருவிழாவுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மட்டுமன்றி நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வருவது வழமை. அதனைவிட குடாநாட்டில் நல்லூரை அண்டிய பகுதிகளில் வாகன நெரிசல்களும் காணப்படும். இவற்றை பரீட்சைகள் திணைக் களத்துக்குச் சுட்டிக் காட்டியுள்ளோம். இது தொடர்பில் ஆராய்ந்து அடுத்த வாரம் பதிலளிப்பதாக எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. சாதகமான பதில் வரக்கூடும் என எதிர்பார்க்கின்றோம் என்றார். (த-101)

## அரச தலைவர்களாக சிறுபான்மையினரும் தெரிவாக வேண்டும்

*மகிந்த தரப்பு எம்.பி. கோரிக்கை*

கொழும்பு, ஏப். 8

சிறுபான்மை இனங்களில் இருந்தும் இனி அரச தலைவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும். அதற்கு ஏற்ப சிங்கள மக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று மகிந்த தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக இருப்பது இந்த நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதாகும். நாம் அனைவரும் இலங்கையர் என ஒரு செய்தியை இது தருகின்றது. ஆரம்பத்தில் அவர்கள் ஈழம் கொள்கையில் இருந்தவர்கள். இப்போது மாற்றமடைந்து அரசுடன் இணங்கிச் செயற்படுகின்றனர். ஒரு பிரதான எதிர்க்கட்சி அரசுடன் இணங்கி செயற்படுவது நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு பொருந்தாத ஒன்றாக உள்ளபோதிலும், நாட்டுக்கு நல்லதாகும். அரச தலைவர் இப்போது தமிழ் முஸ்லிம் மக்களுடன் அதிகம் இணைந்து செயற்படுகின்றார். இது நாட்டுக்குத் தேவையான செயற்பாடு. இப்படியான ஒரு செயற்பாடு இல்லாமல் போனதால்தான் 50 வருடங்களாக எமது நாடு பெரும் துன்பத்தை அனுபவித்தது.

அதுமாத்திரமன்றி, சிறுபான்மை இன மக்களில் இருந்து அரச தலைவர்களும் தெரிவு செய்யப்பட வேண்டும். அமெரிக்காவில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒபாமா அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட முடியும் என்றால் ஏன் இலங்கையில் முடியாது?

இவ்வாறு நடந்தால் எமது நாடு எங்கோ சென்றுவிடும். இந்த நிலைமையை அடைவதற்கு எமக்கு நீண்ட காலம் எடுக்கும். இப்போதிலிருந்தே அதற்கான வியூகம் வகுக்கப்பட வேண்டும். பெரும்பான்மை இன மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும். என்றார். (த-3)

## கிளிநொச்சி வர்த்தகர் சி.ஐ.டியினரால் கைது

கிளிநொச்சி விஸ்வமடுப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கொழும்பில் இருந்து வந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

12 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி மோசடியில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டே குறித்த வர்த்தகர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட வர்த்தகர் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்றுக் காலை வரை கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் நேற்றுக் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த மன்று சந்தேக நபரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது. (த-6-35)



## வர்த்தகக் கண்காட்சியில் கவனத்தை ஈர்த்த புறாக்கள்

யாழ்ப்பாணம், ஏப். 8

மாவட்டச் சமுர்த்தி அலுவலகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று ஆரம்பமான வர்த்தகக் கண்காட்சியில் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தன கோப்பாய் பிரதேச வாசியின் புறாக்கள்.

சமுர்த்திப் பயனாளிகள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தியிருந்தனர். இதில் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட குருகுலசேகரம் இராஜசேகரன் என்பவரின் புறாக்கள் அழகான தோற்றத்தையும், வித்தியாசமான வடிவமைப்பையும் கொண்டவையாகக் காணப்பட்டன. அத்துடன் அவை வெளிநாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டவையாகவும் காணப்பட்டன. இதனால் இவற்றை அதிகளவான மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். பல்வேறு வகையான புறாக்கள் அங்கு காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. ஒரு சோடி புறாவின் குறைந்த விலை 20 ஆயிரம் ரூபாவாகவும், கூடிய விலை 50 ஆயிரம் ரூபாவாகவும் காணப்பட்டது. (த-ரி)

## தேசியப் பட்டியல் தருவதாகக் கூறி 2004 இல் அப்பாவை ஏமாற்றினர்

*ரட்ணசிறிக்கு எதிரான அரசியல் சதிகளை சபையில் எடுத்துரைத்தார் மகன்*

கொழும்பு, ஏப். 8

முன்னாள் தலைமை அமைச்சர் அமரர். ரட்ணசிறி விக்ரமநாயக்கவுக்கு எதிராக அரசியல் ரீதியாக விரிக்கப்பட்ட சதிவலைகள் குறித்தும், அவருக்கு எதிரான பழிவாங்கல்கள் தொடர்பிலும் சபையில் நேற்று பட்டியலிட்டுக்காட்டிப் பேசினார் அவது மகனான நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்ரமநாயக்க.

முன்னாள் தலைமை அமைச்சர் அமரர். ரட்ணசிறி விக்மரநாயக்கவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று இரண்டாவது முறையாகவும் இடம்பெற்றது. இதில் கலந்தகொண்டு உரையாற்றுகையிலேயே தனது தந்தையின் அரசியல் வரலாறு குறித்த முக்கிய பல தகவல்களை விதுர வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

யானை வைத்திருந்த எனது தந்தைக்கு யானை திருடியதாக குற்றம் சுமத்தினர். எம்மிடமிருந்த யானையொன்று வேறு ஒரு தரப்புக்குச் சென்ற போது அதனை மீட்பதற்கு நடவடிக்கை எடுத்தபோது யானைத் திருடன் எனப் பட்டம் சூட்டினர். ஆனால், எனது தந்தை ஊழல், மோசடி, துஷ்பிரயோகம் செய்யாதவர். தனது அதிகாரத்தைத் தவறான முறையில் பயன்படுத்தி இந்த விடயத்தை அவர் முடக்க முற்படவில்லை.

தந்தை தலைமை அமைச்சரான போது சிலர் அதனைப் பயன்படுத்தி சலுகைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறினர். ஆனால், அவர் அதற்கு என்ன பதில் அளிப்பார் என்பது எனக்குத் தெரியும். எனவே, நான் பஸ் வண்டியிலேயே பிரயாணம் செய்தேன்.

2004ஆம் ஆண்டு தேசியப் பட்டியல் வழங்குவதாகக் கூறி ஏமாற்றப்பட்டார். 2001இல் எதிர்க்கட்சித்தலைவராக இருந்தபோது தந்தைக்கு எதிராக ஹொரணையில் இருந்தே சதிகளை முடுக்கி விட்டனர். ஜே.ஆர். ஜெயவர்தன காலத்தில் நக்சலைட் தீவிரவாதி எனக்கூறி தந்தையைக் கைது செய்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முதுகெலும்பை உடைக்கச் சதித் திட்டம் தீட்டினர்.

இதுபோன்ற சதிகளையும் பழிவாங்கல்களையும் சு.க. உறுப்பினர்கள் பலர் எதிர் கொண்டனர். மற்றுமொரு சந்தர்ப்பத்தில் இனம் தெரியாதோரால் கடத்தப்பட்டார். எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் சில நாள்கள் கழித்து தந்தையை மோதரையில் உள்ள றொக் ஹவுஸ் எனும் முகாமில் அடைத்து வைத்திருப்பதாகத் தகவல் கிடைத்தது. எனது தாயார் அங்கு சென்று தந்தையைப் பார்ப்பதற்கு மன்றாடினார். எனினும், அது மறுக்கப்பட்டதால் தாய் அவ்விடத்திலேயே சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்தினார். இறுதியில் தந்தையைக் காண்பித்தனர்.

இவ்வாறான சதிகளுக்கும், பழிவாங்கல்களுக்கும் ரட்ணசிறி உள்ளாகினாலும் தனது கொள்கையை விட்டுகொடுக்கவில்லை. கட்சித் தலைமைத்துவத்துடன் முரண்பாடுகள் எதிர்ப்புகள் இருக்க முடியும். ஆனால், அவரை எதிர்க்கவில்லை. வேறு விதத்தில் தலைமைக்கு அதனை உணர்த்தினார். 1983இல் சு.க. பொதுச்செயலாளர் பதவியில் இருந்து விருப்பமின்றி விலகினார். அதனால், பதவி விலகல் கடிதத்தை சிறிமாவோவின் வாசல் காவலாளியின் கையில் கொடுத்துவிட்டு வந்தார். ரத்னசிறி விக்ரமநாயக்க சிங்கள பௌத்தன். ஆனால், அதனைப் பாவித்து ஏனைய மதத்தவர்களுக்கு துன்பம் இழைக்கவில்லை. அவர் இலங்கையர் என்ற அடிப்படையிலேயே சிந்தித்தார். அதனாலேயே பயங்கரவாதம் என்பது வடக்கில் என்றாலும் தெற்கில் என்றாலும் சரி அதனை ஆரம்பத்திலேயே முறியடிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார் - என்றார். (த-4)

## பொலிஸார் கேட்காமலேயே இலஞ்சம் கொடுக்கிறார்கள் யாழ்ப்பாணச் சாரதிகள்

*மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணத்தில் சில பொலிஸார் இலஞ்சப் பணத்தைக் கேட்பதற்கு முன்னரே சாரதிகள் தாமாக முன்வந்து இலஞ்சம் கொடுக்க முயல்கிறார்கள். ஆயினும் பொலிஸார் இலஞ்சம் வாங்கும் செயலில் ஈடுபடக்கூடாது என யாழ்ப்பாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரனிஸ்லஸ் தெரிவித்தார்.

போக்குவரத்துப் பொலிஸாரினால் விதிக்கப்படும் தண்டப் பணத்தின் வெகுமதித் தொகையை வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இங்குள்ள சாரதிகளை நான் நன்கு அறிவேன். சட்ட மீறலுக்காகத் தண்டப் பணத்தை அறவிட முற்படும்வேளையில் பொலிஸார் கேட்காமலேயே சாரதிகள் பணத்தை இலஞ்சமாகக் கொடுக்கும் நிலமை காணப்படுகின்றது. பொலிஸார் இலஞ்சம் என்ற விடயத்துக்குள் போகக்கூடாது. இலஞ்சம் மூலம் பணம் சம்பாதிப்பீர்களாயின் உங்கள் குடும்பத்தை இழக்க நேரிடும். உங்கள் வாழ்க்கையை இழந்து சந்தோசங்களை இழந்து சிறைக்குச் செல்ல நேரிடும்.

இலஞ்சம் வாங்கிப் பெரிய வீடுகள் கட்டிய சில உத்தியோகத்தர்களை நான் அவதானித்துப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் தங்களின் வீடுகள், குடும்பங்கள் எல்லாவற்றையும் இழந்து பதவியையும் இழந்து இருக்கின்றமையைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே உங்களுக்கு வழங்கப்படும் மாதாந்தச் சம்பளப் பணத்துடன் உங்கள் குடும்ப வாழ்க்கையை நடத்துங்கள். அவ்வாறு செய்வீர்கள் ஆயின் உங்கள் வாழ்க்கை சந்தோசமான வாழ்க்கையாக அமையும். போக்குவரத்து விதி மீறல்கள் இடம்பெறும்போது அந்த இடத்திலேயே தண்டப் பணத்தை அறவிடுங்கள். அதனை விடுத்துப் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லாதீர்கள். அப்படி அழைத்துச்செல்லும்போது அங்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வந்து நீங்கள் இலஞ்சம் வாங்கியதை உறுதிப்படுத்திப் பிடித்தால் அதன் பின்னர் சிறையில் தான் இருக்க வேண்டி வரும். அவ்வாறு நடந்தால், எங்களைப் போன்ற உயர் அதிகாரிகளுக்கும் தான் இழுக்கு ஏற்படும். எனவே இவற்றை எல்லாம் உணர்ந்து செயற்படுங்கள் - என்றார். (த-8)

சைட்டம் விவகாரம்

## மாலபே போதனா வைத்தியசாலை விரைவில் சுகாதார அமைச்சிடம்

*உயர் கல்வி அமைச்சர் அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 8
மாலபே நெவில் பெர்ணான்டோ போதனா வைத்தியசாலையை சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல அறிவித்தார்.
தொடர்ந்தும் அதனை போதனா வைத்தியசாலையாக நடத்திச் செல்லவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி சர்ச்சை குறித்த தீர்வு திட்டம் நேற்று அரசால் வெளியிடப்படும் என்று முன்னதாக நாடாளுமன்றத்தில் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கூறியிருந்தார்.
"சட்டமா அதிபரின் அனுமதியுடன் இலங்கை மருத்துவ சபையால் முன்வைக்கப்பட்ட, இலங்கை மருத்துவக் கல்வி குறித்த, குறைந்த பட்சதகைமைகள், சுகாதார அமைச்சால் வர்த்தமானியில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
மேலும், சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் படிப்பை நிறைவு செய்தவர்களுக்கான மருத்துவப் பயிற்சிகளை அவிசாவளை மற்றும் ஹோமாகமவில் வழங்கவும் யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.
இந்தப் பயிற்சிகளின் பின்னர் இலங்கை மருத்துவ சபை மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் இடம்பெறும் பரிசோதனைகளுக்கு அவர்கள் முகம்கொடுக்க வேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது" என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார். (வ-4)

## 2016ஆம் ஆண்டு வடக்கில் 19 சிறுவர்கள் தத்தெடுப்பு

யாழ்ப்பாணம், ஏப். 8
கடந்த ஆண்டு வடக்கில் உள்ள சிறுவர் இல்லங்களில் இருந்து 19 சிறுவர்கள் சட்ட ரீதியாகத் தத்தெடுக்கப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாணச் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.
வடக்கு மாகாணத்தில் உள்ள சிறுவர் இல்லங்களில் இருந்து கடந்த ஆண்டில் சட்டரீதியாகச் சிறுவர்களைத் தத்தெடுப்பதற்கு விண்ணப்பித்தவர்களில் 19 பேர் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு 19 சிறுவர்கள் தத்துக் கொடுக்கப்பட்டுள்ளனர்.
இவ்வாறு தத்தெடுக்கப்பட்ட சிறுவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 13 சிறுவர்களும், கிளிநொச்சியில் 2 சிறுவர்களும், முல்லைத்தீவில் ஒரு சிறுவரும், வவுனியாவில் ஒரு சிறுவரும் ஏனைய இடங்களில் 2 சிறுவர்களுமாக மொத்தம் 19 சிறுவர்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இதேவேளை, இந்த ஆண்டின் முதல் இரு மாதங்களிலும் வடக்கில் 5 சிறுவர்கள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்பட்டது. (த-101)



## அரசு பதில் கூறும்வரை போராட்டம் தொடரும்

*காணாமற்போனோரின் உறவினர்கள் திட்டவட்டம்*

முல்லைத்தீவு, ஏப். 8
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மேற்கொள்ளும் தொடர் அமைதிவழிப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. அரசிடம் இருந்து உரிய பதில் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் என அவர்கள் அறிவித்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் போராட்டத்தில் நேற்றுச் சம உரிமை இயக்கத்தினரும் இணைந்து கொண்டதோடு கவனவீர்ப்புத் துண்டுப்பிரசுரங்களையும் வழங்கினர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் 31ஆவது நாளாகவும் போராட்டத்தை முன்னெடுத்தனர். அங்கு நேற்று மு.ப. 9 மணியளவில் சென்ற சமஉரிமை இயக்கத்தின் உறுப்பினர்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.
சகல காணாமலாக்கல்களையும் உடனே வெளிப்படுத்து, சகல அரசியல் கைதிகளையும் உடன் விடுதலை செய், வடக்குகிழக்கில் பறிக்கப்பட்ட காணிகளை மக்களுக்கு வழங்கு, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உட்பட சகல அடக்குமுறைச் சட்டங்களையும் நீக்கு ஆகிய கோரிக்கைகள் அடங்கிய துண்டுபிரசுங்களையும் அவர்கள் விநியோகித்தனர்.



காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் 47ஆவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இந்தப் போராட்டம் தொடர்கிறது.
இந்தப் போராட்டத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை கண்டாவளைப் பொது அமைப்புகள் மற்றும் கண்டாவளை மக்கள் ஆதரவு வழங்கினர். கடந்த பெப்ரவரி 20 ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.
அவ்வாறே வவுனியாவில் 43 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 24 ஆவது நாளாகவும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (த-4-6-7)

## சிறார்களின் விளையாட்டு

சரசாலை மத்தி மயூரி அம்பாள் முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப.2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பனை அபிவிருத்தி சபை விரிவாக்கல் திட்ட முகாமையாளர் கா. கோபாலகிருஸ்ணன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## விளையாட்டு விழா

வல்வை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வீதியில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-10)

## மணவாளக்கோலம்

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய மணவாளக்கோல விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.
காலை 7.30 மணிக்கு கற்பக்கிரகத்துக்கு ஆயிரத்து எட்டு சங்கு முழுக்கு இடம்பெறும். மாலை 7 மணிக்கு வசந்த மண்டப வழிபாடும் அலங்காரத்துடன் பூந்தண்டிகையில் சுவாமி வீதி உலா வருவார் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (வ-10)

## மருத்துவர்களின் புறக்கணிப்பால் நோயாளர் அவதி

வெளிநோயாளர் பிரிவுகள் இயங்காமையால் சிரமம்



யாழ்ப்பாணம், ஏப் 8
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்குத் தடை விதிக்கக் கோரி வடக்கு உட்பட நாடு முழுவதும் மருத்துவர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.
யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மருத்துவர்களின் நேற்றைய போராட்டத்தால் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த நோயாளிகள், கிளினிக்குகளுக்காக வந்தவர்கள் மற்றும் வைத்தியசாலை விடுதிகளில் தங்கியிருந்த நோயாளர்கள் எனப் பலரும் பாதிப்படைந்தனர்.
அவ்வாறே ஆதார வைத்தியசாலைகள், பிரதேச வைத்தியசாலைகளிலும் நிலமை காணப்பட்டது.
போராட்டத்தினால் ஏராளமான நோயாளர்கள் வைத்தியசாலைக்கு வந்து தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாமல் திரும்பிச்சென்றமையை அவதானிக்க முடிந்தது.
இதேவேளை, அவசர சிகிச்சைப் பிரிவு, சிறுவர் பிரிவு, மகப்பேற்றுப் பிரிவு போன்ற முக்கிய வைத்திய சேவைகள் தடையின்றி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-8)

## சகல அரசியல் கட்சிகளுக்கும் மே தினத்தன்று சிறப்புச் சலுகை

*நாடாளுமன்றில் அரசு அறிவிப்பு*

மே முதலாம் திகதி எவ்வித கட்டணமும் செலுத்தாமல் அதிவேக நெடுஞ்சாலைகளை அரசியல் கட்சிகள் பயன்படுத்த முடியும் என்று உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று, சிறப்பு அறிவிப்பு ஆகியன முடிவடைந்த பின்னர், மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பதற்கான விவாதம் ஆரம்பமானது.
இதில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உரையாற்றிக்கொண்டிருக்கையில் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பி கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு அறிவிப்பை விடுத்தார். (த)

## பொதுக் கூட்டம்

கரவெட்டி சோனப்பு இந்து மயான அபிவிருத்தி பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி தஞ்சை ஐங்கரன் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
பொது மயானத்தை பயன்படுத்தும் பொதுமக்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-422)

## முல்லைத்தீவில் நேற்று முஸ்லிம் மக்கள் பேரணி

### காணிப் பிரச்சினைகளை உடன் தீர்க்குமாறு கோரி

முல்லைத்தீவு, ஏப். 8
முல்லைத்தீவு காணிப் பிரச்சினைகளை விரைவாகத் தீர்த்து வைக்கக் கோரி முஸ்லிம் மக்களால் நேற்றுப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
காணிப் பிரச்சினைகளைத் தீர்க்கக் கோரித் தொடர் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள முல்லைத்தீவு மாவட்டத் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களே நேற்றுத் தொழுகையின் பின்னர் இந்தப் பேரணியை நடத்தினர்.
இந்தப் பேரணிக்கு முல்லைத்தீவு, நீராவிப்பிட்டி, ஹிஜ்ராபுரம் கிராம அமைப்புக்கள், மீனவர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், முள்ளியவளை முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் என்பன தமது ஆதரவை வழங்கியிருந்தன. போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தெரிவித்ததாவது:



முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் பேசும் முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக எதிர்கொண்டுவரும் காணிப் பிரச்சினைகளுக்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்குள் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியோர் இணைந்து தீர்வு பெற்றுத்தர வேண்டும்.
காணிப் பிரச்சினைக்காக நாம் முன்னெடுத்து வரும் போராட்டம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல. இது முஸ்லிம் மக்களின் நீண்ட காலப் பிரச்சினை. இதற்கு உரிய தீர்வு வழங்கப்படவேண்டும் - என்றனர். (த-7)

# அர்ப்பணிப்பும் வல்லமையும் சிவபூமி முதியோர் இல்லத்தின் சிறப்பு

யாழ்ப்பாண குடாநாட்டிலிருந்து பல லட்சம் மக்கள் காலத்துக்குக் காலம் வெளியேறிவிட்டார்கள். போர்ச் சூழலை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் பிற நாட்டில் குடியேறி வாழ்கிறார்கள். அவர்களில் மேலைத்தேய நாடுகளில் நிரந்தரக்குடியுரிமை பெற்றுவிட்டார்கள்.

இதனால் ஏற்பட்ட பாதிப்பு என்பது பல்வேறு விதமான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. உயர்ந்த பண்பாடுகளோடு கூட்டுக் குடும்ப வாழ்வாக மிளிர்ந்த பாரம்பரியம் முற்றுப் பெற்றுவிட்டது. இன்றும் வீடுகளில் பெரும்பாலும் மூத்தோர்களே வசிக்கிறார்கள். இளையதலைமுறையினர் பிறநாடுகளுக்குச் செல்வதிலேயே அக்கறை காட்டுகிறார்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாண குடாநாட்டில் மட்டுமல்ல தமிழர் வாழும் பிரதேசங்களில் உதவிகளின்றித் தவிக்கும் மூத்தோர் தொகை தினமும் அதிரித்த வண்ணமுள்ளன. மூத்தோர் பிரச்சினை தொடர்பாக சிலர் மேடைகளில் கருத்துரைப்பர் சிலர் உணர்ச்சி ததும்பக் கட்டுரை எழுதுவர். சிலர் முதியோர் தினத்தைக் கொண்டாடி அன்று ஆரவாரமாகக் கதைசொல்வார்கள். ஆனால் யதார்த்தநிலையில் உதவுவார் இல்லை.

கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு எமது மண்ணில் அமைதியாக ஆத்மீகப் பணியாற்றும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகனது எண்ணத்தில் உதித்து உயிர்பெற்றதே சுழிபுரம் தொல்புரம் சிவபூமிமுதியோர் இல்லம்.

சிலர் சொல்லொன்று செயலொன்றாக வாழ்வார்கள். பலமேடைப்பேச்சாளர்கள் செயலில் பூச்சியமாக உள்ளனர். சில எழுத்தாளர்கள் தம்பேனாவால் ஊருக்கு உபதேசம் செய்வார்கள். ஆனால் அவர்களது பேனா இரங்கிய அளவுக்கு அவர்களிடம் மருந்துக்கும் இரக்கமில்லாதவர்களாக உள்ளார்கள். ஆத்மீகவாதிகள் பலர் ஆசாரம், சுயவழிபாடு இவற்றோடு தம் கடமையை முடித்துக் கொள்கிறார்கள்.

பலபெருங்கல்விமான்கள் ஆய்வுகளைச் செய்து ஆய்வுக்கான பட்டங்களையும் பெற்றுக் கொள்கிறார்கள். ஆய்வின் ஊடாகக் கண்டறியப்பட்ட விடயங்களுக்கு மருந்தளவேனும் தீர்வை அவர்கள் தேடுவதில்லை. இத்தகைய சாபக்கேடான சமூகச் சூழல் எம்மிடையே நோய்போல் பரவிக் கொண்டிருக்கிறது.

இறைவன் சிலரை பல ஆத்மாக்களின் அவலத்தைப் போக்குவதற்குப படைக்கின்றான் போலும். கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக இந்த மண்ணில் சிவபூமி அறக்கட்டளை என்ற நாமம் தாங்கி ஓர் உன்னத அறநிறுவனம் அற்புதமாகப் பணியாற்றி வருவதை யாவரும் அறிவர். இந்த அறக்கட்டளையைத் தோற்றுவித்த ஆறுதிருமுருகன் புதியதோர் பாதையை வகுத்துச்செயற்பட்டு வருகிறார். எவரும் செய்யத் துணியாத சில ஆத்ம சேவைகளைச் சிவபூமி அறக்கட்டளை ஊடாக அவர் நிலைநாட்டிவருகிறார்.



மனவளர்ச்சி குறைந்த சிறார்களுக்காக அவர் உருவாக்கிய கோண்டாவில் சிவபூமி மனவிருத்திப் பாடசாலை இன்று ஒப்பற்ற உயர்நிலையை அடைந்துள்ளது. பன்னாட்டு ஒலிம்பிக் போட்டியில் அந்தப் பாடசாலை மாணவர்கள் 3 தடவை பெற்ற பதக்கம் முழுத்தமிழரையும் மெய்சிலிர்க்க வைத்துள்ளது. தென்னிலங்கையில்கூட இத்தனை வசதிகளோடு சிறப்புத் தேவையுடைய பிள்ளைகளுக்குப் பாடசாலை இல்லை என்பதைச் சிங்களப் பத்திரிகையில் சமீபத்தில் ஒரு அறிஞர் வெளிப்படுத்தியிருந்தார். சிறார்களுக்காக உருவாக்கிய பாடசாலையின் சாதனைகளைத் தொடர்ந்து உருவாக்கிய சிவபூமி முதியோர் இல்லம் மூத்தோர்களுக்கான உன்னத காப்பகமாகப் பெருமையோடு பேசப்படுகிறது.

9 முதியவர்களோடு 2007ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த முதியோர் இல்லம் இன்று 79 முதியவர்களோடு மிகச் சிறப்பாக இயங்குகிறது. 52 முதியவர்கள் இந்த இல்லத்தில் வாழ்ந்து இல்லத்திலேயே இறைபதமடைந்துள்ளனர். பெரும்பாலான முதியோரின் இறுதிச்சடங்குகள் சிவபூமி நிர்வாகமே நிறைவேற்றிவருகிறது. சிலரது உடம்பை உறவினர்கள் பொறுப்பேற்று அவர்களது கடமைகளைச் செய்துள்ளனர். என்ன ஆச்சரியம் 30 முதியவர்களின் கொள்ளிக்கடனை ஆறு திருமுருகன் நிறைவேற்றியுள்ளார். காலையிலே கொள்ளிக் கடனை நிறைவேற்றிவிட்டுமாலையிலேயே கோயில்கடமைக்குச்சென்றுவிடுவார். மற்றவர்கள் சொல்லும் ஆசுசக் கட்டளைகளை (துடக்கு) இவர் அனுசரிப்பது கிடையாது. சுடலைக்காரியம் தெய்வீகமானது என அவர் சொல்வார்.

சிவபூமி முதியோர் இல்லத்தைத் தரிசித்துப் பாருங்கள். அங்கு அழகான ஆலயம் உள்ளது. அந்த ஆலயத்தில் வைரவப் பெருமானும் ஆண்டிக் கோலத்தில் முருகப் பெருமானும் காட்சியளிக்கிறார்கள். காலை, மாலை முதியோர்களின் கூட்டுப் பிரார்த்தனை மெய்சிலிர்க்க வைக்கிறது. கோயிலுக்குச்சமீபமாக மயில்கள் ஆரவாரம் செய்த வண்ணமாக வருபவர்களை வரவேற்கின்றன. முதியோர்கள் அழகு மயில்களுக்கு அனுதினமும் உணவிட்டு மகிழ்வதைக் காணலாம்.

மூத்தோர் இங்கு எமக்கு என்ன குறை என்று பெருமையாகச் சொல்கிறார்கள். பிள்ளைகள் இல்லாத சில மூத்தோர் அங்கு தம்பதிகளாக வாழ்கிறார்கள். திருமணமாகாத பெண்கள், ஆண்கள் முதுமையில் உதவியின்றி அநாதரவான நிலையில் சிவபூமியில் அடைக்கலத் புகுந்து வாழ்வதை உணரக் கூடியதாகவுள்ளது. போரில் பிள்ளைகளை இழந்தவர்களும் பின்ளைகளால் கைவிடப்பட்டவர்களும் கணவனை, மனைவியை இழந்து கையறு நிலையில் உற்றாரால் கைவிடப்பட்டவர்களுக்கு உறைவிடமாகவும் சிவபூமி இல்லம் விளங்குகிறது. சிலர் தமது ஓய்வுதியத்தில் ஒருபகுதியை சிவபூதி அறக்கட்டளைக்கு வழங்கி வாழ்கிறார்கள்.

முதியோர் இல்லம் என்பது சாதாரண விடயமல்ல எத்தனை சவால்களைச் சந்தித்து இருபத்து நான்கு மணித்தியாலமும் தொடர்பணியாகத் தொடரவேண்டும். நள்ளிரவுகளில் கூட அம்புலன்ஸ் வண்டியில் வைத்தியசாலைக்குப் போகிறார்கள். விழித்திருந்து பணிசெய்கிறார்கள். ஒரு மாதம் இல்லத்தைப் பராமரிப்பதற்குப் பல இலட்சம் ரூபா தேவைப்படுகிறது. ஆறு திருமுருகனுக்கு ஆண்டவன் கொடுத்த நாவன்மை, சிவபூமி முதியோர் இல்லத்தில் உறைந்திருக்கிற இறைவனின் அருள்வல்லமையும் பணியாளர்களின் தோள்வல்லமையும் அறக்கட்டளை நிர்வாகிகளின் அர்ப்பணிப்பு வல்லமையும் சிவபூமி முதியோர் இல்லத்தின் சிறப்புக்குக் காரணம் எனலாம்.

**கணேசபிள்ளை துஷ்யந்தன்**
**சுதுமலை**

## 13 வயதுச்...

தண்டப் பணம் செலுத்தத் தவறின் 1 வருட கடூழியச் சிறைத் தண்டயையும் இழப்பீட்டைச் செலுத்தத் தவறின் 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் குற்றவாளி அனுபவிக்க வேண்டும்" என்றும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தண்டனைத் தீர்ப்பு வழங்கியது.

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி ஒருவர் கொடூரமாக வன்புணர்வுக்கு உட்படுத்திக் கொல்லப்பட்ட வழக்கு விசாரணை 5 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி சிறுமி கொல்லப்பட்டிருந்தார். கொலையைச் செய்தவர் என்ற சந்தேகத்தில் ஈபிடிபியின் முன்னாள் உறுப்பினர் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது 31) கைது செய்யப்பட்டிருந்தார்.

வழக்கின் தொடர் விசாரணைகள் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில்கடந்ததிங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமை ஆகிய 2 நாட்கள் இடம்பெற்றன. இந்த நிலையில் நீதிபதியின் அறிவிப்புக்கு அமைவாக வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மன்றில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிஷாந் முன்னிலையாகியிருந்தார். எதிரி தரப்பில் மன்றால் நியமிக்கப்பட்ட சட்டத்தரணி ரஞ்சித்குமாரும் பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்பில் சட்டத்தரணி சுபாஜினியும் முன்னிலையாகியிருந்தனர்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தீர்ப்பில் தெரிவித்ததாவது: 16 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவியான யேசுதாசன் லக்சினியை மிகக் கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி பின்பு கல்லால் அடித்துக் கொலை செய்தமை மிகப்பெரிய குற்றமாகும்.

கந்தையா ஜெகதீஸ்வரன் என்பவருக்கு எதிராக குற்றப்பகர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அது எதிரிக்கு வாசித்துக் காட்டப் பட்டது. எதிரி தான் சுற்றவாளி என்று கூறியதையடுத்து மன்று அறங்கூறும் அவையற்ற விசாரணைக்கு உத்தரவிட்டது. இரண்டு நாட்கள் வழக்கின் 12 சாட்சிகளும் எதிரி தரப்புச் சாட்சியும் அழைக்கப்பட்டிருந்தனர். இவற்றில் மிக முக்கியமாக மரபணு பரிசோதனையை மேற்கொண்ட ஜீன் டெக்ட் நிறுவனத்தின் விஞ்ஞானி மற்றும் பல் மருத்துவ நிபுணரின் சாட்சியங்கள் முக்கியமானவை. சிறுமி மிகவும் கொடூரமான முறையில் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகியிருக்கிறார். அதே நேரம் அவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுமுள்ளார். சம்பவம் இடம்பெற்ற பகுதிக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மகேந்திரராஜா நேரில் சென்று நள்ளிரவு தாண்டியும் விசாரணைகளை விரிவாக மேற்கொண்டிருந்தார். அதற்காக இந்த மன்று அவரைப் பாராட்டுகின்றது.

நீதிவானுடன் சென்றிருந்த சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ்.சிவரூபன், உடலத்தை பரிசோதனை செய்து உடலத்திலிருந்து சான்றுப் பொருள்களான மரபணு, பற்கடி காயத்துடன் கூடிய தோலின் பகுதி ஆகியவற்றை மிகத்துல்லியமான முறையில் எடுத்துப் பாதுகாத்து உரிய தரப்பிடம் ஒப்படைத்தார். சட்ட மருத்துவ அதிகாரி தனது கடமையைச் சரிவரச் செய்தமைக்கு மன்று பாராட்டுத் தெரிவிக்கின்றது.

அடுத்ததாக பல் மருத்துவ நிபுணர் தனது சாட்சியத்தில் சிறுமியின் கையில் இருந்த கடிகாயமும் எதிரியினுடையது என்பதை அச்சு அசலாக கூறியிருக்கிறார். அதைத் தான் எவ்வாறு பரிசோதனைக்குட்படுத்தினேன் என்பதையும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். எதிரியின் மேல் தாடையின் இரண்டு பற்கள் சிறுமியின் கையில் காயத்தை ஏற்படுத்தியுள்ளன என்றும் எதிரியின் மேற்தாடைப்பற்களின் ஒன்றில் சிறிய உடைவு காணப்படுகின்றது என்றும் அந்த உடைவுப் பல்லின் அடையாளமும் சிறுமியின் கையில் உள்ள கடிகாயத்துடன் ஒத்துள்ளதாகவும் தனது பரிசோதனையை முன்வைத்து பல் மருத்துவ நிபுணர் சாட்சியமளித்தார்.

அடுத்ததாக மரபணுப் பரிசோதனையை மேற்கொண்ட விஞ்ஞானி தனது சாட்சியத்தில், எதிரியின் சாரத்தில் உள்ள குருதிப் படிவுகளும் சிறுமி அணிந்திருந்த உடையிலிருந்து எடுக்ககப்பட்டகுருதி மாதிரிகளும் 99.99 வீதம் ஒன்றாக இருந்தன என்று தெரிவித்தார். சிறுமியின் உடலில் இருந்து பெறப்பட்ட தலைமுடியும் எதிரியின் தலை முடியும் ஒத்ததானது எனவும் விஞ்ஞானி குறிப்பிட்டிருந்தார்.

இவற்றை வைத்து குறித்த எதிரியே சிறுமியை பாலியல் வன்புணர்வு செய்து கொடூரமாகக் கொலை செய்தார் என்பது நிரூபணமாகிவிட்டது.

நிபுணத்துவ சாட்சியங்களை வைத்து கந்தசாமி ஜெகதீஸ்வரன் என்பவரே சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தி கொடூரமாகக் கொலை செய்தார் என்ற முடிவுக்கு இந்த மன்று வருகின்றது" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

இதன்போது நீதிபதி, எதிரியிடம் நீர் ஏதாவது தெரிவிக்க விரும்புகிறீரா? என்று கேட்டார்.

"செய்யாத குற்றத்துக்கு இந்த நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகின்றது. நான் இது தொடர்பாக மேன்முறையீடு செய்வேன். அப்பொழுது விடுதலையாவேன் என நம்புகின்றேன்" என்று எதிரி மன்றிடம் தெரிவித்தார்.

"பதின்ம வயதுச் சிறுமியை பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தியமைக்காக குற்றவாளிக்கு 20 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. அத்துடன் குற்றவாளி 25ஆயிரம் ரூபா தண்டப் பணத்தைச் செலுத்த வேண்டும். அதைக் கட்டத்தவறின் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். மேலும் சிறுமியின் பெற்றோருக்கு குற்றவாளி 10 லட்சம் ரூபா பணத்தை இழப்பீடாக வழங்க வேண்டும். அதனை வழங்கத் தவறின் 5 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையை குற்றவாளி அனுபவிக்க வேண்டும்.

சிறுமியைக் கொடுமைப்படுத்தி கொலை செய்யதமைக்காகக் குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை வழங்கப்படுகிறது" என்று நீதிபதி மா. இளஞ்செழியன் தண்டனைத் தீர்ப்பை அறிவித்தார்.

தொடர்ந்து மன்றில் மின்குமிழ்கள் அணைக்கப்பட்டன. நீதிபதி எழுந்து நின்றார். திறந்த மன்றில் அமர்ந்திருந்தோரும் எழுந்து நின்றனர்.

"குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அரச தலைவர் விரும்பும் நேரத்தில் தீர்மானிக்கும் இடத்தில் குற்றவாளியின் கழுத்தில் சுருக்கிட்டு அவரது உயிர் பிரியும் வரை தூக்கிலிடுமாறு மன்று உத்தரவிடுகிறது" என்று நீதிபதி அறிவித்தார்.

தொடர்ந்து தண்டனைத் தீர்ப்பில் நீதிபதி கையொப்பமிட்டார். கையொப்பமிட்ட பேனாவை நீதிபதி முறித்தெறிந்தார். நீதிமன்றச் செயற்பாடுகள் ஒத்திவைக்கப்பட்டன. (வ-12)

## சைக்கிளில்...

அதை விற்று காசாக்கும் தொழிலை செய்யும் குறித்த குடும்பத்தலைவர், நேற்றிரவும் இவ்வாறு ஒரு வீட்டில் காட்போட் மட்டையை வாங்கி கொண்டு வீதியில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த போதே விபத்து இடம்பெற்றது. எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் அவர் மோதி விபத்துக்குள்ளா னார். படுகாயமடைந்த அவர் அந்தப் பகுதியில் நின்றவர்களால் முச்சக்கர வண்டியில் மந்திகை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். குடும்பத்தலைவரின் உடலம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(வ-21-26)

## ஊறணியில்...

ஒப்படைக்கப்பட்டது. இதனையடுத்து அந்த இடத்துக்குரிய பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் தமது இடங்களைப் பார்வையிட்டனர்.

காங்கேசன்துறை அமெரிக்கன்மிசன் மகாவித்தியாலயத்திலிருந்து மயிலிட்டி வரையான கரையோரப் பகுதிக் குடியிருப்புக்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டன.

விடுவிக்கப்பட்ட இடங்களில் 258 குடும்பங்கள் குடியேறுவதற்குத் தயாராகவுள்ளனர் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் 30 வருடங்களாக இடம்பெற்ற போர் வடக்குகிழக்கு மக்களை மட்டும் துன்பப்படுத்தவில்லை.

(22ஆம் பக்கம் பார்க்க)

# புதிய பாலத்தில் கனகாம்பிகை பயணம்



கிளிநொச்சி, ஏப். 8

இரணைமடுஅபிவிருத்திதிட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தின் ஊடாகத் தனது பயணத்தை மேற்கொண்டு ஆலயத்தை வந்தடைந்தார் கனகாம்பிக்கை அம்மன்.

ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா ஊர்வலத்துக்காகக் கடந்த மாதம் 27 ஆம் திகதி அன்று ஆலயத்தில் இருந்து புறப்பட்ட கனகாம்பிகை அம்மன், கிளிநொச்சியின் கிழக்குப் பகுதியின் பல கிராமங்களைத் தரிசித்தவாறு இரணைமடு நீர்த்தேக்கத்தை ஆசீர்வதித்து மீண்டும் நேற்று முன்தினம் ஆலயத்தை வந்தடைந்துள்ளார்.

இரணைமடு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவுற்ற நிலையில், முதல் முதலாகக் கனகாம்பிகை அம்மன் பயணத்தை மேற்கொண்டு ஆலயத்தை வந்தடைந்தமை பக்தர்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

(ஐ-35)

வாணி
ரெக்ஸ்இன்
10% - 30%
விசேட விலை கழிவில் விற்பனை



தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சகலவிதமான ஆடைகளுக்கும் 10% தொடக்கம் 30% வரை அசத்தலான விலைக்கழிவுகள் வழங்கப்படும். எமது அனைத்து வாடிக்கையாளர்களும் தங்களுக்குத் தேவையான சகலவிதமான ஆடைகளையும் தெரிவு செய்து அள்ளிச்செல்லுங்கள்

இல.81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 5578, 021 222 9286

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு
ஏசியன் தளபாடத்தின் மாபெரும் மலிவு விற்பனை

Table Mat - 2400/= 1550/=
Kitchen Rack - 2000/= 1500/=
Iron Board - 1300/= 1000/=
மெத்தை - 6 x 3 - 2400/= 1800/=
6 x 3 - 2800/= 2450/=
பிரம்பு செற் - 16500/= - 14750/=
லெதர் சோபா செற் - 41500/= - 34500/=
6 கதிரை (ரீப்போ இலவசம்) - 5900/= - 4050/=
ஸ்ரீல் அலுமாரி - 11500/= - 9600/=
கட்டில் 6 x 4 - 10500/= - 8750/=
T.V.ஸ்ராண்ட் - 10500/= - 8950/=



இல. 230, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(இலுப்பையடி ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்) 021 492 7791, 076 821 9418, 076 821 9415, 076 821 9413

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை..
நாவலர் வீதியில் அமைந்துள்ள....
JAMUNA FURNITURE




அயன் மேசை, சாய்மனைக் கதிரை மற்றும் அனைத்து விதமான தளபாடங்களை பெற்றிட இன்றே வாரீர்

தம்ரோ, பியெஸ்ரா
ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்.....

- நீங்கள் வாங்கும்ஒவ்வொரு SoFa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான Glass Coffee Table இலவசம்.
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை இலவசம்.
- Panasonic, Innovex Tv மற்றும் Preethi Mixi, Stand fan, Damro Washing Machine, Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Pyestra,Nilkamal, Phonix, Airpico ஆகியவற்றின் உற்பத்திப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

JAMUNA FURNITURE
181, Navalar Road, Jaffna.
021 222 1092, 077 757 4776

விடுமுறை நாள்களிலும் (ஞாயிற்றுக்கிழமை)எமது நிலையம் திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

விசேட விலைக்கழிவு !!!

நீர் சுத்திகரிப்புத் துறையில் அதி சிறந்த தொழில்நுட்பவியலாளர்களை தன்னகத்தே கொண்டு யாழ் மண்ணில் இயங்கிவரும் தன்னிகரற்ற Everpure Hi-Tec (Pvt) Ltd. நிறுவனமான நாங்கள் பிறக்கவிருக்கும் புதுவருடம் உங்கள் அனைவருக்கும் அமைதியையும். சுபீட்சத்தையும் அள்ளித்தரும் ஆண்டாக அமைய வாழ்த்துகின்றோம்.

இப்பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவுகளைப் பெற்றுக்கொள்ள இன்றே முந்துங்கள்!

Discount 5,000/= to 50,000/=
Valid untill 30.04.2017

சுத்தமான குடிநீருக்கான எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள மாசுக்கள், கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.

Water Softener System




Tiles, Bathroom Fittings, Washing Machine களில் படியும் கல்சியம், மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

Swimming Pool



உங்கள் தேவைக் கேற்ற வகையில் வடிவமைத்து, நிறுவி, பராமரித்துத் தரப்படும்.



Waste Water Treatment

வீடு, தொழிற்சாலை, உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.

WE ACCEPT VISA MasterCard
WARRANTY
Everpure Hi-Tec (Pvt) Ltd.
#341, K.K.S. Road, Jaffna.
021 222 6888, 021 567 7567, 077 362 6230

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Applications will be received by me up to 12th May 2017 from suitably qualified candidates for the following posts;

1. **POST – TECHNICAL OFFICER GRADE.II SEG.B (TRAINEE)**
(Vacancies exist at the University of Jaffna including Killinochchi premises and Vavuniya Campus of the University of Jaffna)

**Qualifications:**

I. (a)Three (03) G.C.E (Advance Level) passes in Science subjects in one sitting; subject combination(s) to be decided by the faculty concerned upon the recommendation of the Department.

**AND**

(b) Passed a skill oriented formal programme of training relevant to the post of at least one year (full time) duration or equivalent. The acceptability of the training programme for this purpose shall be judged by the faculty concerned.

**AND**

II. Age Limit : Not more than 35 years
Salary Scale : U-MT1(IIIA) – Rs.22571-7x213;10x253-26592 p.m as at 01.01.2017 (Rs.31625-7x300;10x355-37275 p.m as at 01.01.2020)

Selection : By Practical Test and Interview

2. **POST – TECHNICAL OFFICER GRADE.II SEG.A** – *in the field of Electrical & Electronic Engineering/ Auto mobile Engineering/ Mechanical Engineering/ Green Technology/ Food Technology/ Bio Technology)*
(Vacancies exist at the University of Jaffna including Killinochchi premises of the University of Jaffna)

QUALIFICATIONS :
National Diploma in Technology in the relevant field of specialization or its equivalent qualifications.
SALARY SCALE :U-MT1(II)– Rs.25074-7x253;9x335-29860 p.m as at 01.01.2017 (Rs.35145-7x355;9x470-41860 p.m as at 01.01.2020)
Selection : By Practical Test and Interview
Age Limit : Not more than 40 Years

- Note – Age Limit is not applicable for applicants in the Government Departments/ State Corporation and Statutory bodies)

**Statutory Benefits:**

1. Allowance approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payments
4. Employment Trust Fund Benefits
5. Free Medical care

Application forms may be obtained from the Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna, either in person or by post on a payment of Rs.100/= per application form.

Those who wish to obtain application forms by post are requested to send a Money Order / Postal Order drawn in favour of " **Bursar, University of Jaffna, Thirunelvely, Jaffna**" together with a self- addressed Rs.10.00 stamped envelope of 23x10 cm in size.

Application forms and other details will also be available in the University website www.jfn.ac.lk. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs.100/- to the applications forms drawn in favor of the Bursar, University of Jaffna.

Duly completed application form should be sent under registered cover to reach the **Senior Assistant Registrar/ Establishments Branch (Non Academic), University of Jaffna, Thirunelvely, Jaffna on or before 12.05.2017**

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date or illegible and incomplete applications will be rejected without intimation.

Those who are in Public Service/ Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/Corporations/Boards.

Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for the appointment if the applicationrouted through the Head of Department is not received.

REGISTRAR


## செயலமர்வு

உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றமும் கொக்குவில் நூலக நிறுவனமும் இணைந்து நடத்தும் செயலமர்வு இன்று சனிக்கிழமை 2.30 மணிக்கு ஆடியபாதம் வீதியில் தொடருந்துக் கடவைக்கு அருகில் அமைந்துள்ள நூலக நிறுவனத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இணையத்தில் தமிழ் மொழியில் பயன்பாடு, பல்லூடக ஆவணப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயத் தலைப்புக்களில் செயலமர்வு நடைபெறவுள்ளது. மேலதிக தகவல்களை 021223 1292 என்ற தொலைபேசியூடாக பெற்றுக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-11)


## அறிவித்தல்



அமரர் தம்பு றெஜினோல்ட் வில்பிறட் (மகேந்திரன்)
அவர் களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி ஏற்கனவே குறிப்பிட்ட 09.04.2017 அன்று (திருமதி. றொபேட் புளோறன்ஸ்) ஆகிய அன்னாரது மாமியாருடைய மரணச்சடங்கின் காரணமாக நடைபெறமாட்டாது.

218, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இனிய பிறந்தநாள் நல் வாழ்த்துக்கள்

Best Wishes



**இரா.அகிலன்**
(உதவிப் பணிப்பாளர்- இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை- மாவட்ட தொழிற் பயிற்சி நிலையம் கிளிநொச்சி)
தனது **45 ஆவது** பிறந்த தினத்தை நேற்று (07.04.2017) வெள்ளிக்கிழமை வெகுவிமர்சையாக கொண்டாடிய இவரை நீடூழிகாலம் நலமுடன் வாழ

வாழ்த்துவோர்:
போதனாசிரியர்கள், அலுவலக பணியாளர்கள், மாணவர்கள்
மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் கிளிநொச்சி.



## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !.

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள். பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை




**மிருசுவில் படித்த மகளீர் திட்டம் " துர்க்காபுரம்"**
**அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான**
**மணவாளக்கோல தினசகஸ்ர (1008) கலச**
**சங்காபிஷேக விஞ்ஞாபனம் - 2017**

ஞானதுர்க்கை அம்மன் அடியார்களே !

நிகழும் மங்கலகரமான துர்முகி வருடம் பங்குனி மாதம் 27ஆம் நாள் (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தர நன்நாளில் அம்பிகைக்கு மஹா சங்காபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளதால் காலை 7.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி விசேட பூசைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வரும் போது ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்கா தேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும். அடியார்கள் சங்காபிஷேகத்தில் பங்கு பெற்று எல்லாம் வல்ல ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் பாதார விந்தத்தினை தொழுது திருவருள் பேற்று நல்வாழ்வு வாழும் வண்ணம் அழைக்கின்றோம்.

**" துர்க்காபுரம் "**
**படித்தமகளீர் திட்டம்,**
**மிருசுவில்.**

**ஆலய தர்மகர்த்தா**
**சிவத்திரு சி.நவரத்தினம் ஐயா**

## சி.வை. தாமோதரம்பிள்ளைக்கு சிறுப்பிட்டியில் வெண்கலச் சிலை

அச்சுவேலி,ஏப்.8

சிறுப்பிட்டியில் பிறந்து தமிழ்மொழி வளர்ச்சிக்காக உழைத்த பேரறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளைக்கு சிறுப்பிட்டியில் வெண்கலச் சிலை நிறுவப்படவுள்ளது. சிலை நிறுவுவதற்கான ஏற்பாடுகளை சிறுப்பிட்டி சி.வை.தாமோதரம்பிள்ளை நற்பணி மன்றம் மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

தனது பிறந்த இடமாகிய சிறுப்பிட்டியின் முதல் எழுத்தாகிய "சி"ஐ தனது பெயரின் முதல் எழுத்தாக சி.வை.தாமோதரம் பிள்ளை கொண்டிருந்தார். பனை ஓலை ஏடுகளில் அழியும் நிலையில் இருந்த தமிழ் நூல்களைத் தேடிப் பெற்ற அவர், அவற்றை அச்சில் பதிப்புச் செய்து பாதுகாத்தார். அவை தொடர்பான ஆய்வுகளையும் அவர் மேற்கொண்டார். (வ-11)


**உடனடி வேலைவாய்ப்பு**
களஞ்சியக் காப்பாளர்.
077 298 5314

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, விதானையார் வீதியில் வீடு வாடகைக்கு விடப்படும். அரச, அரசசார்பற்ற உத்தியோகத்தர் விரும்பத்தக்கது
தொடர்பு: 077 614 6434

**உதவியாளர் தேவை**
கிளிநொச்சியில் உள்ள வீடொன்றுக்கு உதவியாளர் ஆண்/ பெண் ஒருவர் தேவை.
077 784 3509

**பெண் உதவியாளர் தேவை**
கந்தரோடை, சுன்னாகத்திலே வதியும் வயோதிபத் தம்பதியினருடன் தங்கியிருந்து பணிபுரிய பெண் உதவியாளர் தேவை. 35 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.
கவர்ச்சியான சம்பளம் வழங்கப்படும்.
077 754 2174, 021 224 0393

**வீடு விற்பனைக்கு**
யாழ் மத்தியூஸ் வீதியில் ஒரு பரப்புக் காணி 04 அறை வீடு கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 076 725 9429

**பணிப்பெண் தேவை**
மல்லாகத்தில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. மருத்துவ செலவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
077 502 7708/ 021 720 0918



**நல்லூர்க் கந்தன் திருமண சேவை**
எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

**யாழ்ப்பாணத்தில்வீடு விற்பனைக்குண்டு**
யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு திருநெல்வேலிச் சந்தியிலிருந்து கொக்குவில் சந்திக்குப் போகும் ஆடியபாதம் வீதியில், மருத்துவ பீடத்துக்கு அருகில் வீடு, கிணறு, நாற்பக்கமும் மதிலுடன் 21/ 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு
077 899 3859

**ஊர்க்கோழி, மோட்டார் சைக்கிள் விற்பனை**
இரண்டு மாதம் நிரம்பிய ஊர்க்கோழிகள், Cm HONDA 125 ரக மோட்டார் சைக்கிள் என்பன உடனடியாக விற்பனைக்கு எம்மிடம் உள்ளது.
077 491 1793, 021 568 0936

# சைக்கிளைத் திருட முயன்ற குற்றத்துக்கு 2 வருட சிறை

## சாவகச்சேரி நீதிமன்று தீர்ப்பு

தென்மராட்சி, ஏப். 8
துவிச்சக்கர வண்டியைத் திருட முற்பட்டவருக்கு 2 வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனை விதித்து சாவகச்சேரி நீதிவான் மன்று தீர்ப்பளித்தது.

கொடிகாமம் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் கடந்த ஜனவரி 28ஆம் திகதி பூட்டிய நிலையில் துவிச்சக்கர வண்டியை நிறுத்திவிட்டு வரணி கரும்பைக்குறிச்சியைச் சேர்ந்த பாலசிங்கம் தவக்குமார் என்பவர் சந்தைக்குச் சென்றுள்ளார்.

சிறிது நேரத்தில் அங்கு வந்த ஒருவர் துவிச்சக்கர வண்டியைத் தூக்கிச்சென்று தன்னிடமிருந்த ஸ்கூட்றைவரால் அதன் பூட்டை உடைக்க முற்பட்டுள்ளார். இதனை அவதானித்த எரிபொருள் நிலைய விற்பனையாளர் அங்கு நின்றவர்களின் உதவியுடன் துவிச்க்கர வண்டியைத் திருட முற்பட்டவரைப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தார். சாவகச்சேரி நீதிவான் மன்றில் சந்தேகநபரை பொலிஸார் முற்படுத்தினர். சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தொடர்ச்சியாக சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் மீதான வழக்கு விசாரணை சாவகச்சேரி நீதிவான் மன்றில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. வழக்கை விசாரணை செய்த நீதிவான், துவிச்சக்கர வண்டியை திருட முற்பட்ட குற்றத்துக்கு அவரை 2 வருடங்கள் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு தீர்ப்பளித்தார்.

(வ-9)

## குருத்து ஞாயிறு வழிபாடு நாளை

தவக்காலத்தின் புனித வாரத்தை ஆரம்பிக்கும் குருத்து ஞாயிறு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்தவ மக்களால் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

அனைத்துக் கத்தோலிக்க கிறிஸ்தவ ஆலயங்களில் நாளை காலை குருத்தோலைகள் தாங்கிய பவனியும், சிறப்புத்திருப்பலி வழிபாடுகளும் இடம்பெறும் - என்று அறிவிக்கப்பட்டது.

இயேசு, பாடுகள் இறப்பை ஏற்பதற்கு முன் ஜெருசலேம் நகருக்கு வந்தபோது மக்களால் வாழ்த்தி வரவேற்று கழுதையின் மேல் வைத்து பவனியாக அழைத்துச் செல்லப்பட்டார். அதனை நினைவுபடுத்தும் விதமாக உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்களால் குருத்து ஞாயிறு கடைப்பிடிக்கப்படுகிறது.

(வ-135)


## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில்
30 . 10 . 1942

ஆண்டவன் அடியில்
26 . 03 . 2002

**Dr.கதிர்காமு கந்தசாமி D.A.M.(cey)**

திதி: 08.04.2017

ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும்
ஆறாது உங்கள் நினைவுகள்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

" சிவகாசி"
15/13, மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் வைரமுத்து குழந்தைவேலு



மண்ணில்
20.10.1925

விண்ணில்
08.04.2011

ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றென்றும் எங்கள் மனதில் நிறைந்திருக்கும்
காலங்கள் விடை பெறலாம் ஆனாலும் எம் கண்முன்னே
நிழலாடும் உங்கள் நினைவுகள் ஒருபோதும் எம்மை விட்டு அகலா.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(8940)(II)

குடும்பத்தினர்
நயினாதீவு - 02

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
06 . 01 . 1932

இறப்பு
19 . 04 . 2016

அமரர்

**பொன்னம்பலம் யோகரெத்தினம் (யோகு)**

அன்பின் சொரூபமாக வாழ்ந்த
எங்கள் அன்பான தந்தையே
ஆன்மீகத்தின் ஞான ஒளியாக
வழி காட்டியாக இருந்த
சொரூபமே ஆண்டு ஒன்று
என்ன ஆயிரம் ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும்
உங்கள் அன்பை மறவாத
அன்பு மனைவி. பிள்ளைகள். மருமகன்,
மருமகள், பேரப்பிள்ளைகள்.

உங்கள் அன்பார்ந்த
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி கனகசபை



பிறப்பு 18.08.1939.
இறப்பு 06.04.2017

யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும், மன்னார் பள்ளிமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கனகசபை (06.04.2017) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் துரை - பாக்கியவதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான அருள்ராசா, ராசலட்சுமி, நவரத்தினராசா ஆகியோரின் பாசமிகுசகோதரியும் காலஞ்சென்ற கனகசபையின் அன்பு மனைவியும் கமலாவதி காலஞ்சென்ற பத்மாவதி காலஞ்சென்ற ஜெயராஜா, குகராஜா, நவரத்தினராஜா, சுசிலாவதி, லீலாவதி (இந்தியா), ஸ்ரீகந்தராஜா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற கருணாகரன், நெவிலஸ், ராணி, சூசையம்மா காலஞ்சென்ற பவளகாந்தன், கணேஸ் (இந்தியா) ஆகியோரின் அன்புமாமியும் ரமேஸ் (பிரான்ஸ்), கல்ப்பனா, முகுந்தன், கார்த்திக், சுபா, பவித்திரன் (இந்தியா), பத்மா (இந்தியா), ஜெனனி, டயனி, டனி, நந்தினி காலஞ்சென்ற ஜெகன், ரயூட், ரதனியா, ரகு (கனடா), ரஞ்சன், ரஞ்சித், ரமேஸ், ரஞ்சிதா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2017) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மன்னார் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சுசிலாவதி ( 077 333 9432)

பள்ளிமுனை மேற்கு,
மன்னார் .

## மரண அறிவித்தல்



தோற்றம்
15 . 10 . 1918

மறைவு
07 . 04 . 2017

### திருமதி நல்லம்மா வேலாயுதபிள்ளை

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நாவலடி ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா வேலாயுதபிள்ளை நேற்று (07.04.2017) வெள்ளிக்கிமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவகாமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, அருளம்பலம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், தங்கம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், திலகவதி, காலஞ்சென்ற லிங்கேஸ்வரன் மற்றும் பாலசுப்பிரமணியம், யோகநாதன், கமலேஸ்வரி, கௌரிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தவேள், பிறேமலா, தர்மராணி, காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் சண்முகராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், குருபரன், கிரிதரன், ஜெகதீஸ்வரி, கௌசிகா, மேனகா, சஜீபன், தர்மலா, சக்தீஸ்வரி, தயானி, யனோசியா, ஐங்கரன், வசீகரன், ஐஸ்வரியா, அம்சாயினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அகவி, அகவியா, தனுஷன், மதுஷாஜினி, ரோஷாந்தன், விந்தியா, கவினயா, மதுஷன், யதுரன், தாருசா, றியான், ஜெய்னன், அக்ஷரன், சுபானு, தருண், நரேந்ரன், சாம்பவி, அஜித்தன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 696 5069, 077 479 0044

# தென்மராட்சி கல்வி வலயத்தில் விரைவில் மாணவர் நாடாளுமன்று



தென்மராட்சி கல்வி வலய மாணவர் நாடாளுமன்றம் இந்த மாத இறுதியில் நிறுவப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதற்கு முன்னோடியாக தென்மராட்சி கல்வி வலயத்தில் மாணவர் நாடாளுமன்றம் இயங்கும் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் தலா 3 ஆசிரியர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வு கல்வி வலய கேட்போர்கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற செயலமர்வில் கொழும்பு கல்வி அமைச்சின் மாணவர் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.பிள்யு.ஏ.டி. பதமசாந்த, யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூக மருத்துவபீட விரிவுரையாளர் மருத்துவர் திருமதி எஸ்.திருமகள், முல்லைத்தீவு கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் ஒவ்வொரு பாடசாலையிலும் அமைக்கப்பட்ட மாணவர் நாடாளுமன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள் தொடர்பான அறிக்கையை மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகங்களாகச் செயற்படும் பாடசாலை அதிபர்கள் செயலமர்வில் விரிவாக எடுத்துரைத்தனர்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் 20 பாடசாலைகளில் இயங்கும் மாணவர் நாடாளுமன்றங்களில் தெரிவு செய்யப்படும் தலா 2 பிரதிநிதிகள் வீதம் கலந்து கொண்டு வலய மட்ட நாடாளுமன்றத்துக்கான சபாநாயகர், தலைமை அமைச்சர், அவைத் தலைவர் பிரதிச் சபாநாயகர் பிரதிச் செயற்குழுத் தலைவர், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வலய மாணவர் நாடாளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி வழியாக செயற்படுவார். வலய மாணவர் நாடாளுமன்றத்தின் பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்கு சமூகவியல் பாடப் பணிப்பாளரும் பிரதிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்) பதவிக்கு சமூக ஒருமைப்பாடு மற்றும் சமாதானக் கல்வி வலய இணைப்பாளரும் பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கம்) பதவிக்குப் பொருத்தமான அதிகாரியும் நியமிக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(வ-9)


## மரண அறிவித்தல்கள்

### நடேசப்பெருமாள் தங்கவேலாயுதம்



உடுப்பிட்டி, தேவன்குறிச்சி, இலக்கணாவத்தையைப் பிறப்பிடமாகவும், கருவப்புலம் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசப்பெருமாள் தங்கவேலாயுதம் 05.04.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசப்பெருமாள் - விஜயம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி நா.காமினி (ஆசிரியர் - கொக்குவில் இந்துக்கல்லூரி), திருமதி உ.இந்துமதி (கனடா), கதாதரன் (சுவிஸ்), சசிதரன், நிவாதரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வே.நாகேந்திரராசா (G.S.உடுவில்), க.உமாபதிதாசன் (கனடா), திருமதி.க.புவர்னலதா, திருமதி. நி.தர்மிலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜித், துவாரகேதன், தர்ஷவின், ஹரிஸ்அம்சா, கபிஷா, கபிஷன், நிஷாரா, ஆரியா ஆகியோரின் அன்புப் பேரனும், ந.கணேசரத்தினம் (பரந்தன்), காலஞ்சென்ற திருமதி.ப.செல்வதேவி மற்றும் திருமதி.அ.இந்திராணி (வவுனியா), திருமதி. க.தபோதினி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற திருமதி. செ.சந்திரராணியின் அன்பு அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்**

077 949 5057, 021 492 5900

## மரண அறிவித்தல்கள்

அன்னை மடியில் 30 . 09 . 1956



ஆண்டவன் அடியில் 07 . 04 . 2017

### திருமதி றொபேட் புளோறன்ஸ் இமாக்குலேற்றா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சந்தனமாதா, 2ஆம் ஒழுங்கை, பண்டியந்தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புளோறன்ஸ் இமாக்குலேற்றா நேற்று (07.04.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இல.17/8, சந்தனமாதா 2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

தகவல்: றொபேட் (கணவர்), ஷாம் (மகன்)

077 302 4445, 077 315 1175

தோற்றம் 27 . 09 . 1949



மறைவு 06 . 04 . 2017

## சித்தர் யோகேஸ்வரன்

(ஓய்வுநிலை புகையிரத தலைமைக் காரியாலய பிரதம லிகிதர்)

கரவெட்டி கிழக்கு, கிழவிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட சித்தர் யோகேஸ்வரன் 06.04.2017 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்தர் (பிரபல சோதிடரும், ஓய்வுநிலை ஆசிரியர்), சின்னப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான வல்வெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்) செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானபூரண ரஞ்சிதத்தின் பாசமிகு கணவரும், காருண்யாவின் (பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடம்) அன்புத் தந்தையும், யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை), சண்முகேஸ்வரன் (தாதிய உத்தியோகத்தர் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), காலஞ்சென்றவர்களான புவனமலர், இராமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரதாசன் (ஓய்வுநிலை அதிபர்), ஈஸ்வரதாசன் (லண்டன்), கலாநிதி (லண்டன்), இராஜேந்திரம் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), சாந்தகுமாரி (ஆசிரியை யா/யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் வல்வெட்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இந்து பாடசாலை வீதி, வல்வெட்டி

தகவல்: **மனைவி, மகள் மற்றும் குடும்பத்தினர்.**

தொ.பே. 077 379 7901

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## சின்னத்தம்பி முரளீதரன் (கண்ணன்)



மடத்தடி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முரளீதரன் (கண்ணன்) 04.04.2017 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சின்னத்தம்பி காலஞ்சென்ற பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் சாவித்திரியின் பாசமிகு மருமகனும் கிருஷ்ணமாலாவின் அன்புக் கணவரும் சகானாவின் பாசமிகு தந்தையும் பாமா, குருபரன் (சவுதி அரேபியா) ரகுராமன், மாதவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இரஞ்சன், இரத்தினகுமார் (டென்மார்க்), தயாபரன் (இந்தியா), இரத்தினமாலா, காண்டீபன் (டென்மார்க்), புஸ்பமாலா (UK) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி, பண்டத்தரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்.

077 113 0012, 077 868 9556

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தின் தலைவரும் நடன ஆசிரியருமான

**திருமதி நா.காமினி**

அவர்களின் பாசமிகு தந்தை

### நடேசபெருமாள் தங்கவேலாயுதம்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்
தனிகா நுண்கலைக்கல்லூரி, திருநெல்வேலி.

# நாயாறு மீனவர்களை அச்சுறுத்தும் பொலிஸ்

## தென்பகுதி மீனவரின் முறைப்பாட்டை அடுத்து

யாழ்ப்பாணம், ஏப். 8

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் உள்ள ஒரு தென்னிலங்கைத் தொழிலாளிக்காக வேண்டுமென்றே எமது சங்க உறுப்பினர்களை பொலிஸார் சிறையில் அடைத்து அச்சுறுத்துகின்றனர் என நாயாறு மீனவர் சங்கத் தலைவர் கமலேஸ் குமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாயாற்றுக் கடற்கரையில் எமது சங்க மீனவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட பகுதியில் நீண்டகாலமாகத் தொழில் புரிந்து வருகின்றோம். அதற்குச் சற்றுத்தொலைவில் அண்மையில் ஒரு தென்னிலங்கை மீனவர் வந்து 8 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி அங்கு தங்கியிருக்கிறார். அவரது இடம் எமது இடத்தில் இருந்து தொலைவிலேயே உள்ளபோதும் நாம் அமைத்த கொட்டகையை அகற்றுமாறு அவர் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து எம்மைப் பொலிஸ் நிலையம் அழைத்த பொலிசார் கூண்டில் அடைத்தனர். அடைத்துவிட்டுச் சமாதானமாகப் போகின்றீர்களா அல்லது அடைபட்டு இருக்கப் போகிறீர்களா? என்று அச்சுறுத்தியதுடன் வாடியை அகற்றுமாறும் கூறினர்.

குறித்த பிரதேசம் எமது சங்கத்துக்காக அனுமதிக்கப்பட்ட பிரதேசம். அந்த இடம் தொடர்பான அதிகாரம் பிரதேச செயலாளரின் கையிலேயே உண்டு. பொலிஸார் தலையிடும் நியாயாதிக்கம் கிடையாது. இருப்பினும் வேண்டுமென்றே ஒரு தரப்புக்காக பொலிஸார் எம்மைப் பழி வாங்குகின்றனர் என்றார்.

இது தொடர்பில் கரைத்துறைப்பற்றுப் பிரதேச செயலாளர் குணபாலனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது ,

குறித்த விடயம் தொடர்பில் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. உடனடியாக குறித்த இடத்தை நேரில் பார்வையிட்டு அந்தப் பகுதி யாரின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் என உறுதி செய்யுமாறு காணி உத்தியோகத்தருக்குப் பணிக்கப்பட்டுள்ளது. அது பிரதேச செயலகத்தின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசமானால் அதில் பொலிஸார் தலையீடு செய்ய முடியாது என்ற மீனவர்களின் கருத்து நியாயமானது. குறித்த இடம் தொடர்பான அறிக்கை கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (த-101)

# 390 ஏக்கரில் மட்டுமே புதுக்குடியிருப்பில் இம்முறை சிறுபோகம்

## குளங்களில் நீரின்மையே காரணம்

முல்லைத்தீவு, ஏப். 8

புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் பிரிவில் 390 ஏக்கரில் 2017ஆம் ஆண்டுக்கான சிறுபோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கமநல சேவைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2017ஆம் ஆண்டுக்கான சிறுபோகப் பயிர்ச் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. குளங்களில் போதிய நீர் காணப்படாதபோதும் இருக்கும் நீரைக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயிர்ச் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வழமையாக 900 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் பிரிவு விவசாயிகள் இந்த வருடம் 390 ஏக்கரில் மட்டுமே செய்கை மேற்கொள்ளவுள்ளனர்.

முத்துஐயன்கட்டுக் குளத்தின் கழிவு நீரைப் பயன்படுத்தி புதுக்குடியிருப்பு கள்ளியடிப் பகுதியில் சிறுபோகம் செய்வது வழமையாகவுள்ளபோதும் இம்முறை அது முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குளத்தில் நீர் இல்லாமையால் கழிவு நீர் பயிர்ச்செய்கைக்குப் போதுமானதாக இல்லை. எனவே அந்தப் பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட கமநல சேவைகள் அனுமதி வழங்கவில்லை. ஆனால் அனுமதி பெறாது சில விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதாக அறிய முடிகின்றது. அது நீரில்லாமல் அழியுமேயானால் அதற்குரிய நட்ட ஈட்டைக் கமநல சேவைகள் பெற்றுக்கொடுக்காதுஎன்று கூறப்பட்டது.

(த-7)

படை வசமுள்ள காணிகள் குறித்து

# உண்மைத் தகவல்களை மறைத்துக் கூறுகின்றது நல்லிணக்கச் செயலணி

## மாகாண சுகாதார அமைச்சர் சாடல்



யாழ்ப்பாணம், ஏப். 8

வவுனியா மாவட்டத்தில் வெறும் 7 ஆயிரத்து 504 ஏக்கர் நிலமே படையினர் வசம் உள்ளதாக தேசிய நல்லிணக்கச் செயலணி தெரிவித்தமை உண்மை நிலையை மறைக்கும் நடவடிக்கை என வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும் வவுனியா மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவருமான ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தினர் வசம் 68.46 ஏக்கர் தனியார் காணிகளும் 5 ஆயிரத்து 864.07 ஏக்கர் அரசகாணியும் உள்ளதுடன் கடற்படையினர் வசம் எந்த நிலங்களும் கிடையாது. விமானப் படையினர் வசமும் தனியார் காணிகள் கிடையாது. ஆயிரத்து 571.60 ஏக்கர் அரச காணியே உள்ளது.

68.46 ஏக்கர் தனியார் காணிகளும், 7 ஆயிரத்து 435.67 ஏக்கர் அரச காணிகளுமாக மொத்தம் 7 ஆயிரத்து 504.13 ஏக்கர் நிலம் மட்டுமே படையினர் வசம் உள்ளது என்று தேசிய நல்லிணக்கச் செயலணியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள அளவுகளே இவை. அத்துடன் குறித்த தனியார் மற்றும் அரச காணிகளைவிட வன வளத் திணைக்களத்துக்குச் சொந்தமானது என்ற பெயரில் 3 முக்கிய படை நிலைகள் உள்ளன. அவை இங்கே கணக்கிடப்படவே இல்லை. இவ்வாறு கணக்கிடப்படாத நிலம் செயலணியால் கூறப்பட்ட அளவை விட அதிகமானதாகும்.

செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் மக்களின் இடைத்தங்கல் முகாம் என்னும் பெயரில் அபகரிக்கப்பட்ட 6 ஆயிரத்து 200 ஏக்கர் நிலத்தையும் இன்று படையினரே ஆள்கின்றனர். இதேபோன்று இரணை இலுப்பைக்குளம் வனப் பகுதியில் 2 ஆயிரம் ஏக்கருக்கும் அதிக நிலப்பரப்பில் இராணுவப் பயிற்சி முகாமும், மடுக்கரைப் பகுதியில் 3 ஆயிரத்து 100 ஏக்கர் பிரதேசத்தில் விமானப்படை முகாமுக்கென என அபகரித்துள்ள 11 ஆயிரத்து 300 ஏக்கர் நிலமும் திட்டமிட்டு மறைக்கப்பட்டுள்ளதா? என்ற சந்தேகம் எமக்கு எழுகின்றது.

வனவளத்திணைக்களத்தின் 11 ஆயிரத்து 300 ஏக்கருடன் தனியார் மற்றும் அரச காணிகளான 7 ஆயிரத்து 504 ஏக்கர் நிலம் உட்பட மொத்தமாகப் படையினர் வசம் 18 ஆயிரத்து 500 ஏக்கர் நிலம் உள்ளது என்பதே உண்மை.

பன்னாடுகளின் கவனத்தை ஈர்க்கப் போலியாகத் தயாரித்து வெளியிடப்படும் இவ்வாறான தவறான தரவுகள் மூலம் வடக்கில் படையினரின் பிரசன்னம் குறைக்கப்பட்டுள்ளதாகக் காட்ட முயலக்கூடாது.

வடக்கில் படையினரிடம் 27 ஆயிரத்து 230 ஏக்கர் தான் உள்ளது என்பது அப்பட்டமான பொய் என்றார். (த-101)

# 2016 வவுனியாவில் 46 சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்கள்

## வடக்கு சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 8

2016ஆம் ஆண்டில் வவுனியா மாவட்டத்தில் சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களாக 46 சம்பவங்களும், சிறுவர் பாலியல் முயற்சியாக 12 சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அத்துடன் சிறுவர்கள் தொடர்பில் 493 வழக்குகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாணச் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

வவுனியா மாவட்டத்தில் சிறுவர்கள் மீதான வன்முறைகள் கடந்த ஆண்டில் அதிகரித்துக் காணப்பட்டன. இதில் 46 சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்களும், 12 சிறுவர் பாலியல் துஸ்பிர யோக முயற்சிகளும் இடம் பெற்றுள்ளன. இதேபோன்று 17 உடல் ரீதியான துஸ்பிரயோகங்களும், 2 உள ரீதியான துஸ்பிரயோகங்களும் பதிவாகியுள்ளன. இதேபோன்று 5 சிறுவர் தற்கொலைச் சம்பவங்களும் உள்ளன. அத்துடன் கவனிப்பு அற்ற சிறுவர்களாக 52 பேர் உள்ளனர்.

இதேபோன்று வவுனியா மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு இடை விலகிய பாடசாலை மாணவர்களாக 36பேர் உள்ளனர். 8 பிள்ளைப் பருவத் திருமணங்கள் பதிவாகியுள்ளன. புதிதாக இல்லங்களில் சிறுவர்களை இணைத்துக்கொள்ளுமாறு 215 விண்ணப்பங்கள் கிடைத்துள்ள நிலையில் 87 சிறுவர்கள் இணைந்துள்ளனர். இதேவேளை, மாவட்டத்தில் 145 சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதாகவும், பல்வேறு வகையான 493 வழக்குகள் சிறுவர்கள் தொடர்பில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. (த-101)

# அனுமதிக்கு முரணாக மணல் ஏற்றியோர் கைது

முல்லைத்தீவு, ஏப். 8

அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக முள்ளியவளைப் பொலிசார் தெரிவித்தனர்.

முள்ளியவளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கொண்டைமடுப் பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் நான்கு உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் எனப் பொலிசார் கூறினர்.

(த-7)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட

# 10,257 விவசாயக் குடும்பங்களுக்கு பயிர் அழிவு நட்டஈடுகள் விரைவில்

முல்லைத்தீவு, ஏப். 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருடம் பருவ மழை பொய்த்துப் போனமையால் பாதிக்கப்பட்ட 10 ஆயிரத்து 257 விவசாயக் குடும்பங்களுக்கு நட்டஈடு விரைவில் வழங்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டக் கமநல சேவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



கோப்புப்படம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 20162017ஆம் ஆண்டு காலபோகத்தில் பருவ மழை பொய்த்துப் போனமையால் விவசாயிகள் பெரும் அழிவைச் சந்தித்தனர்.

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப்பெரிய குளங்களான முத்து ஐயன் கட்டு குளத்திலும், வவுனிக்குளத்திலும் நீர் மட்டம் மிகக் குறைவாக உள்ளமையால் விவசாயம் செய்யமுடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சிறிய குளங்களில் காணப்படும் நீரின் அளவைக் கொண்டு நீர்ப்பங்கீட்டின் அடிப்படையில் அவர்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த வருடம் ஏற்பட்ட பயிர் அழிவுக்கு இதுவரை நட்டஈடுகள் வழங்கப்படாமையால் பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நட்டஈட்டை விரைந்து பெற்றுத்தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2016–2017ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கையில் 12 ஆயிரத்து 327.9 ஹெக்ரேயர் முற்றாக அழிவடைந்தது. இதனால் 10 ஆயிரத்து 257 விவசாயக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. வரட்சியால் ஏற்பட்ட இந்த அழிவுக்கான நட்டஈட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு அனைத்துப் பதிவுகளும் கமநல சேவைகள் திணைக்களத்தால் உரிய முறையில் பெறப்பட்டுள்ளன. இவர்களுக்கான நட்டஈடு விரைவில் வழங்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (த-7)

# போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து படையினர் எவரும் தப்பிக்க முடியாது

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 8
"படையினர் என்பதற்காகப் போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து அவர்களை விடுவிக்க முடியாது. போரை முடிவுக்குக் கொண்டு வந்த இராணுவத்தினர் உட்பட அரச படையினரைத் தண்டிக்கும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் , அவரது சகாக்களும், சிங்கள பேரினவாத சக்திகளும் முன்வைத்து வரும் குற்றச் சாட்டுக்கள் தவறானவை".
இவ்வாறு பொலிஸ் பேச்சாளரான பிரதி பொலிஸ் மா அதிபர் பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்தார். பொலிஸ் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது; படையினர் என்பதற்காக குற்ற விசாரணை களிலிருந்து விடுவிப்பு வழங்க முடியாது. இராணுவச்சிப்பாயைக் கைது செய்யக்கூடாது என்று ஒருவர் நம்புவாரானால் அந்த நபர் சித்த சுயாதீனமற்றவராக இருக்க வேண்டும்.
இலங்கையில் கருத்துச் சுதந்திரம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளதால், இராணுவ அதிகாரிகள் உட்பட இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்படும் போது, இராணுவத்தைப் பழிவாங்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகக் குற்றம் சாட்டுவதற்குமுழுமையான சுதந்திரம் இருக்கின்றது. அதனைப் பொலிஸார் ஒரு போதும் தடுக்க மாட்டார்கள்.
ரக்பி வீரர் வசீம் தாஜுதீன் படுகொலை, ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட கடத்தல் மற்றும் ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் அந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவப் புலனாய்வு அதிகாரிகளைக் கைது செய்யும் போது, படையினரைப் பழிவாங்கி வருவதாகப் பொலிஸார் மீது குற்றம் சுமத்துகின்றனர்.



இவ்வாறான குற்றச் சாட்டு களுக்கு மத்தியிலும் கடும் சவால்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு விசாரணைகளை முறையாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். இதன் போது யாராவது ஒரு நபர் குற்றமிழைத்திருந்தால் அந்தக் குற்றம் தொடர்பான விசாரணைகளைநடத்தும்பொறுப்புபொலிஸாருக்கு இருக்கின்றது.
இராணுவ அதிகாரிகள் மாத்திரமன்றி பொலிஸ்திணைக்களத்தில் முக்கிய பதவிகளில் இருந்த உயர் நிலை அதிகாரிகளும் பல்வேறு குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு தண்டிக்கப் பட்டு வருகின்றனர்- என்றார். (ஐ-10)

## சு.கவுக்குள் ஏற்பட்டுள்ள பிளவால் உள்ளூராட்சித் தேர்தல் இழுத்தடிப்பு

கொழும்பு, ஏப். 8
உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்துக்கொண்டு செல்வதற்குக்காரணம்சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவே அன்றி வேறில்லை. தேர்தலை நடத்தினால் அரச தலைவரின் பலம் தெரிந்து விடும். அந்தத் தேர்தல் அரச தலைவர் பதவியை முடிவுக்குக் கொண்டு வரும் தேர்தலாக அமைந்துவிடும். இவ்வாறு ஜே.விபியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லால் காந்த தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
"அரச தலைவரால் தனித்துத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல முடியாது.எம்முடன்இணைந்து தான் அவரால் தேர்தலில் குதிக்க வேண்டி வரும். கிராமங்களுக்குச் சென்று பார்த்தால் உண்மை புரியும். அதனால் தனது பலத்தை அதிகரித்துத் தேர்தலுக்குச் செல்வதே அவரின் திட்டம்.
ஆனால், புதிய தேர்தல் முறைமையைத் தயாரித்து விட்டே தேர்தலுக்குச் செல்லப் போவதாக அரசு அறிவித்துள்ளது. இப்படியான ஒரு முறைமை உலகில் எங்கும் இல்லை. உண்மையில், தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் அரச தலைவரிடம் இல்லை. அவரால் தனித்து எதையுமே செய்ய முடியாது.
ஊழல்வாதிகளுக்கு எதிராக அரச தலைவரால் கடுமையான நடவடிக்கை எடுக்க முடியாது. எடுத்தால் அவர்கள் அரசை விட்டுச் சென்று விடுவார்கள். ஐக்கிய தேசிய கட்சி வழங்கிய அதிகாரங்களை அவரால் மீளப் பெறமுடியாது.
ஐக்கிய தேசிய கட்சியுடன் தான் அவரின் அதிகாரம் இணைந்து காணப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி இல்லையென்றால் மைத்திரிக்கு அதிகாரம் இல்லை. இப்போது ஒரு உதவியாளருக்கு இருக்கின்ற அதிகாரம் கூட அரச தலைவருக்கு இல்லை." -என்றார். (ஐ-4)

## திஹாரிப் பெண் சாவு

குவைத்தில் இருந்து இலங்கை வந்தடைந்த வானூர்தியில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று கட்டுநாயக்கப் பொலிஸார் தெரிவித்தனர். நேற்று அதிகாலை 4.50 மணிக்குக் கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தை வந்தடைந்த குவைத் வானூர்தியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. திஹாரியைச் சேர்ந்த 55 வயதுப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைக் கட்டுநாயக்கப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 24 . 04 . 1953



விண்ணில் 08 . 04 . 2004

அமரர்
**வேலுப்பிள்ளை இராஜரட்ணம் (செல்வம்)**
**(முன்னாள் உரிமையாளர் R.B புக்கிங் சென்ரர்)**

ஆண்டுகள் பதின்மூன்று அகன்று விட்ட போதும்
இன்றென எண்ணிடும் வேளையில்
எங்கள் நெஞ்சம் கலங்குகின்றது அப்பா
என்றும் எங்கள் நினைவில்
வாழும் தெய்வம் தெய்வம்
நீங்கள் மட்டுமே அப்பா
ஆண்டவன் அடியில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம்.
மனைவி , மக்கள் ,
மருமக்கள், பேரன்.

## சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்க அரசு முடிவு

கொழும்பு, ஏப். 8
திருகோணமலை சீனக்குடாவில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்குக் குத்தகைக்கு வழங்கி, கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
சீனக்குடா எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக இலங்கை அரசுக்குள் கருத்து வேறுபாடுகள் இருந்தன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்துவுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்தே, இந்த எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கி, கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு 10 எண்ணெய்க் குதங்கள் இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனத்தின் வசம் வைத்திருப்பதற்கும், இணக்கம் காணப்பட்டுள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-10)

## மகிந்தவின் நாடாளுமன்றப் பதவிக்கு உரிமை கோருகிறார் சாந்த பண்டார

கொழும்பு,ஏப்.8
"முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தற்போது வகிக்கும் நாடளுமன்ற உறுப்பினர் பதவியின் சொந்தக்காரன் நானே" இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவருமான சாந்த பண்டார தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
"கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச குருநாகலில் போட்டியிட்டதால், நான் தோல்வியடைந்தேன். அவர் முதலாமிடம். நான் ஒன்பதாமிடம். வெறும் 131 வாக்குகளால் நான் தோல்வியடைந்தேன். அதுமட்டுமன்றி அந்த மாவட்டத்தில் எமது கட்சிக்கு இருந்த 11 நாடளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்களின் எண்ணிக்கை 8 ஆகக் குறைவடைந்தது. எல்லோரும் ஒன்றிணைந்து ஆசனங்களை அதிகரிப்பதை விட்டுவிட்டு என்னைத் தோற்கடிக்கும் வேலையைச் செய்தனர்.
அதுபோக, நான் ஐக்கிய தேசிய கட்சியில் இணையப் போவதாகவும் சிலர் பரப்புரை செய்தனர். அதனால் தான் நான் தோல்வியடைந்தேன். உண்மையில், மகிந்த இப்போது வகித்துக் கொண்டிருக்கும் நாடளுமன்ற உறுப்பினர் பதவி எனக்கு உரியது. அவர் போட்டியிட்டிருக்காவிட்டால் நிச்சயம் நான் வென்றிருப்பேன்.
இருந்தாலும், எனது தோல்வியை நான் ஏற்றுக்கொள்கிறேன். தோற்றது நான் அல்ல குருநாகல் மக்கள் தான். இப்போது அவர்கள் எனது தோல்வியை எண்ணி வருத்தப்படுகின்றனர்.
இந்த நாட்டுக்கு மிகப் பெரிய சேவை செய்த, இரண்டு தடவைகள் நிறைவேற்று அதிகாரமிக்க அரச தலைவர் பதவி வகித்த ஓர் மனிதர், நாடளுமன்றப் பதவியைத் தற்போது வகிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை எண்ணி நான் கவலைப்படுகின்றேன்" -என்றார். (ஐ)

## ஐ.தே.கட்சிக் கூட்டத்தில் அமைச்சர்களுக்கு ஏமாற்றம்

கொழும்பு, ஏப்.8
புதிய பதவி எதிர்பார்ப்புக்களுடன் இடம்பெற்ற ஐ.தே. கட்சியின் செயற் குழுக் கூட்டத்துக்கு வருகை தந்த அமைச்சர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் எந்தவிதமான பதவி மாற்றங்களும் செய்வதற்கு தலைமை அமைச்சர் நடவடிக்கை எடுக்காமையே இதற்குக் காரணம்.
கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலிலும் கூட, புதிய பதவி மாற்றம் பற்றிக் கலந்துரையாடல்களுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லையெனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
பதவி மாற்றம் இடம்பெறுவதில்லையென அறிந்து கொண்ட பீல்ட்மார்சல் சரத் பொன்சேகா கூட்டம் நிறைவடைய முன்னர் வெளியேறிச் சென்றுள்ளதாகவும் கட்சி உள்ளக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
இதேவேளை, கட்சியில், 3 பிரதித்தலைவர் பதவிகளையும், 3 உபதலைவர் பதவிகளையும் உருவாக்குவதற்கான யோசனை கூட்டத்தின் போது முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் எதிர்பார்க்கப்படும் கட்சி உயர் பதவிகளின் மாற்றம் மே மாதத்தில் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

# பதில் அளிக்காததால் நாடாளுமன்றில் கூச்சல்

கொழும்பு, ஏப். 8

நாடாளுமன்றத்தில் நான் எழுப்பியுள்ள அதிகமான கேள்விகளுக்கு ஒரு வருடம் கடந்தும் இதுவரை பதில் வழங்கப்படவில்லை. மாகாண சபையில் கூட மூன்று மாதங்களுக்குள் பதில் வழங்க வேண்டும் என்ற நடைமுறை உள்ளது. அதுமட்டுமல்லாது, தற்போது தகவல் அறியும் சட்டவரைவு நடைமுறையில் உள்ளதால், சாதாரண குடிமகன் எழுப்பும் கேள்விக்கு ஒரு மாத காலத்துக்குள் பதில் அளிக்க வேண்டியுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 12 மாதங்கள் சென்றும் பதில் அளிக்கவில்லைஎனில், பதிலளிக்கவில்லையெனில் சாதாரண குடிமகனை விட நாங்கள் தாழ்த்தப்பட்டுள்ளோமா?

இவ்வாறு பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்குச் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. வாய்மூல விடைக்கான கேள்வி பதில் சுற்று ஆரம்பமானது.

ஒழுங்குப் பத்திரத்தில் எழுப்பப்பட்டிருந்த முதல் நான்கு கேள்விகளுக்கும் பதில் அளிக்கக் கால அவகாசம் வேண்டும் என்று சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

அப்போது பொது எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் கம்மன்பில இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

"கேள்விகளுக்குப் பதில் அளிக்க நாங்கள் தயார். கேள்விகள் சுருக்கமாகக் கேட்கப்படுமாயின் சுருக்கமான பதிலை வழங்குவோம். ஆனால், கேலிக்கூத்தான தரவுகளைக் கேட்கின்றனர். நதிகளின் நீளத்தையும், நெடுஞ்சாலைகளின் நீளத்தையும் கேட்கின்றனர். இவ்வாறான தரவுகளைக் கேட்பீர்களாயின் அதற்குப் பதில் வழங்க நாங்கள் கால அவகாசம் கோருவோம். அத்துடன், பல வருடங்களுக்கு முன்பு நடந்த விடயத்தைப் பற்றி கேட்காது குறுகிய காலத்துக்குள் இடம்பெற்றவை தொடர்பில் கேள்வி எழுப்பினால், பதில் அளிக்க இலகுவாக இருக்கும்" என்று சபை முதல்வரான அமைச்சர் லகஸ்மன் கிரியெல்ல பதிலளித்தார்.

டலஸ் அழகப்பெரும ஒழுங்குப் பத்திரத்தில் உயர்கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சரிடம் மாத்தறை - பெலிஅத்த வரையிலான நெடுஞ்சாலை தொடர்பான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார். இந்தக் கேள்விக்கும் பதில் அளிக்கக் கால அவகாசம் கோரப்பட்டதால் சபையில் பொது எதிரணியின் எதிரணியினர் கூக்குரலிட்டனர்.

"இது மிகவும் இலகுவான ஒரு கேள்வி. இந்தக் கேள்வியை நான் 3 மாதங்களுக்கு முன்பு சமர்ப்பித்திருந்தேன். ஆனால், ஒழுங்குப் பத்திரத்தில் தற்போது தான் இடம்பெற்றுள்ளது. கேள்விக்கான பதிலை தயார் செய்யப் போதுமான அளவு காலம் இருந்தது" என்று டலஸ் அழகப்பெரும கருத்துத் தெரிவித்தார்.

கால அவகாசம் கோரப்பட்ட கேள்விக்கு மீண்டும் பதில் வழங்க முற்பட்ட சபை முதல்வர் கிரியெல்ல, "இந்த நெடுஞ்சாலைக்காக வழங்கப்பட்ட இழப்பீடானது கொழும்பு - காலி அதிவேக பாதை நிர்மாணிக்கும் போது சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டை மையமாக வைத்தே வழங்கப்பட்டது" - என்றார்.

"இந்தக் கேள்விக்குப் பதிலை வழங்குகின்றீரா? அல்லது கால அவகாசம் தேவைப்படுகின்றதா?" என்று சபாநாயகர், அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவிடம் கேட்ட போது, "வயல் காணிகளைச் சுவீகரிக்கும்போது எதிர்கால தொழில் இழப்புக்கள், மேட்டு நில பயிர்ச் செய்கை இழப்புக்கள் சம்பந்தமாகக் கணிப்பிடப்பட்டுள்ளதா எனக் கேட்டுள்ளனர். மகிந்த அணியினர் ஆட்சி செய்யும் போது இராணுவத்தைக் கொண்டு மக்களை விரட்டியடித்தனர். இதுவே இவர்களது கேள்விக்குப் பதில்" என்றார்.

இதனால் சபையில் லகஸ்மன் கிரியெல்லவுடன், டலஸ்அழகப்பெரும, பந்துல குணவர்தன. உள்ளிட்ட மகிந்த அணியினர் சிலர் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபடும் போது, எதிர்க்கட்சி பிரதம கொறடா அநுரகுமார திஸாநாயக்க பொதுஎதிரணி முன்வைத்த குற்றச்சாட்டுக்குச் சார்பான கருத்தைப் பகிர்ந்து கொண்டார்.

முதலாவது கேள்வி நிதி அமைச்சரிடம் கேட்கப்பட்டது. இரண்டாவது கேள்வி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரிடம் கேட்கப்பட்டது. மூன்றாவது கேள்வி கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சிடம் கேட்கப்பட்டது. ஆனால், அனைத்துக் கேள்விகளுக்கும் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல எழுந்து கால அவகாசம் கேட்டிருந்தார்.

பதில் வழங்குவதற்கு அமைச்சர்கள் இங்கு இல்லை. உங்களது அமைச்சர்களைக் கொண்டு வந்து பதிலைப் பெற்றுத்தர நீங்கள் தவறியுள்ளீர்கள் அது உங்களது பிழை" என்று லக்ஷ்மன் கிரியெல்லவைச் சாடினார் அநுரகுமார. அமைச்சர்கள் இல்லையெனில் கால அவகாசத்தையே என்னால் கோர முடியும் என்றார் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல. இது சம்பந்தமாக தலைமை அமைச்சருக்கு அறிவித்து கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலை அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று பந்துலகுணவர்தன சபையில் கோரிக்கை விடுத்தார்.

இந்த விடயத்தை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அரசினதும் கவனத்துக்குக் கொண்டு செல்கின்றேன். கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபை முதல்வர் பல தடவை இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள் என்று பதில் அளித்தார் சபாநாயகர். (ஐ-10)

# அரச நிறுவனங்களின் பணிகளைக் கண்காணிக்க 15 எம்.பிக்கள் நியமிப்பு

கொழும்பு, ஏப்.8

தனது அமைச்சுக்குக் கீழ் வரும் ஆறு அரச நிறுவனங்களின் பணிகளைக் கண்காணிப்பதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்களை நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நியமித்திருப்பதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்திலுள்ள நிதியமைச்சரின் அலுவலகத்துக்கு இதுவரை எந்தப் பதவியும் வழங்கப்படாமல் இருந்த இந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டு, அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நிதியமைச்சரால் வழங்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்கள் 15 பேரும் நிதியமைச்சுக்குக் கீழ் வரும் இலங்கை சங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கலால் திணைக்களம், மதிப்பீட்டுத் திணைக்களம், தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை ஆகிய ஆறு நிறுவனங்களின் பணிகளைக் கண்காணித்து நிதியமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் 15 பேருக்கும் வாகனங்கள் வழங்கப்படவுள்ளதாக வந்த செய்தியை மறுத்த நிதியமைச்சர், அவர்கள் தங்களுக்குத் தற்சமயம் வழங்கப்பட்டிருக்கும் வசதிகளைக் கொண்டே இந்தக் கண்காணிப்புப் பணியையும் மேற்கொள்வர் எனவும் தெரிவித்தார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் சஜின் வாஸ் குணவர்தன அயலுறவுத்துறை அலுவல்கள் அமைச்சுக்கும், துமிந்த சில்வா பாதுகாப்பு அமைச்சுக்கும் கண்காணிப்பாளர்களை நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ1-0)

# பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்

கொழும்பு விஹாரமஹா்தேவி பூங்காவில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் ்கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி இரவு தனது கணவருடன் கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவுக்குச் சென்ற பெண் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்ற ஒருவரை, அந்தப் பெண்ணின் கணவர் மற்றும் பூங்காக் காவலர்கள் உள்ளிட்ட குழுவினர் மடக்கிப் பிடித்தனர். கறுவாத் தோட்டம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் ஒப்படைக்கப்பட்டார். அதன் பின்னர் பின்னர் குறித்த சந்தேகநபர் பொலிஸ் உத்தியோகத்தர் எனத் தெரியவந்துள்ளது. கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட சந்தேகநபருக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## பகிரங்க அறிவித்தல்
## நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருள்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது. எனவே குறித்த சான்றுப் பொருள்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 02 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும் படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 431(2) இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

| தொ. இல | வழ. இலக்கம் | சான்றுப் பொ.இல. | சான்றுப் பொருள் விவரம் |
|---|---|---|---|
| 01 | AR/371 / 17 | PR / 459 / 17 | 69831475 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி - 01 |

மறுதவணை : 05.06.2017

| | | | |
|---|---|---|---|
| 02 | AR/398 / 17 | PR / 610 / 16 | 69745560 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி - 01 |
| 03 | AR/398 / 17 | PR / 610 / 16 | 69825483 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி - 01 |
| 04 | AR/398 / 17 | PR / 610 / 16 | 69883815 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி - 01 |
| 05 | AR/398 / 17 | PR / 610 / 16 | 69824568 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி - 01 |
| 06 | AR/398 / 17 | PR / 610 / 16 | இலக்கம் தெளிவற்ற லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி - 01 |
| 07 | AR/403 / 17 | PR / 380 / 17 | NW BEC 7616 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் - 01 |

மறுதவணை : 27.06.2017

மன்றின் கட்டளைப்படி

திகதி : 06.04.2017

- பதிவாளர் -

# பள்ளிவாசல் நிகழ்வில் வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட நால்வர் சாவு

## 600 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு, ஏப்.8

அம்பாறை இறக்காமம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு மத நிகழ்வொன்றில்வழங்கப்பட்ட உணவை உட்கொண்ட நான்குபேர் உயிரிழந்ததுடன், சுமார் 600 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இறக்காமம், வாங்காமத்திலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற கந்தூரி நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்கள் நால்வரே இவ்வாறு உயிரிழந்தனர்.

ஏனையவர்கள் அம்பாறை, இறக்காமம் மற்றும் கண்டி வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து வெளியிடங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட முப்பதுக்கும் அதிகமான வைத்தியர்களும், தாதியர்களும் இரவு பகல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது குறித்து தெரியவருவதாவது;

நேற்றுமுன்தினம் இரவு பள்ளிவாசல் கந்தூரி நிகழ்வில் கலந்து கொண்ட பொதுமக்கள் அங்கு பரிமாறப்பட்ட உணவை உட்கொண்டதையடுத்து, உபாதைக்கு உள்ளாகினர்.

அவர்கள் உடனடியாக இறக்காமம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அதே வேளை அவசர சிகிச்சை தேவைப்பட்டோர் அம்பாறை மற்றும் கண்டி வைத்தியசாலைகளுக்கு மாற்றப்பட்டனர். கண்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்களில் மூன்று கர்ப்பிணித்தாய்மார்களும் அடங்குவர்.

இவர்களில் அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நால்வர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.முஹம்மட் நஸீர் இறக்காமம் மற்றும் அம்பாறை வைத்தியசாலைகளுக்குச் சென்று நிலைமையைப் பார்வையிட்டுள்ளார். சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-ய-46)

# பரம்பரைச் சொத்தையே கேட்டுப் போராடுகிறோம்

## மேலதிகமாக எதுவுமே கேட்கவில்லை என்கிறார்கள் கேப்பாபிலவு மக்கள்

முல்லைத்தீவு, ஏப். 8

இந்த நாட்டில் எங்களுக்குச் சொந்தமான காணிகளைத்தான் கேட்கின்றோம். மேலதிகமாக எதையும் கேட்கவில்லை. எங்கள் பரம்பரைச் சொத்தை உடனடியாக ஒப்படையுங்கள் என கேப்பாபிலவில் தொடர் அமைதிவழிப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான 482ஏக்கர் காணியை விடுவிக்கக் கோரி 138 குடும்பங்கள் 38ஆவது நாளாகவும் இராணுவ முகாமுக்கு முன்னால் நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

காணிகளுக்கு உரிய உறுதிகள் எங்கள் கையில் உள்ளன. எங்கள் வாழ்விடங்களையும், விவசாய



நிலங்களையும் சுவீகரித்து வைத்துள்ளமை ஏற்றுக்கொள்ளக் கூடிய விடயம் அல்ல. எங்கள் போராட்டத்தின் நியாயத்தன்மையை அறிந்து விரைவாகக் காணிகளை விடுவித்து உதவுங்கள். எங்கள் அகதி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் - என்றனர். (த - 7)

# தற்செயல் நிவாரணத்துக்காக முல்லையில் 41 பேர் பரிந்துரை

இந்த ஆண்டின் முதற் காலாண்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்செயல் நிவாரணத்துக்காக 41 பேர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ந.தசரதராஜகுமாரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக சேவைகள் திணைக்களம் பல்வேறுபட்ட உதவிகளை வழங்கி வருகின்றது. தற்செயல் விபத்துக்கால் பாதிக்கப்படும் குடும்பங்களுக்கும் கடந்த வருடம் பல உதவித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். இந்த முதல் காலாண்டில் வீடு தீப்பற்றி எரிதல், காட்டு யானைகளால் ஏற்படும் சொத்தழிவுகள் போன்றவற்றைத் தற்செயல் விபத்துக்கள் எனக் கருதிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம். ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 20 தற்செயல் விபத்துக்களும், கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதயில் 6 தற்செயல் விபத்து க்களும், துணுக்காய் பிரசேத செயலகத்தில் 15 தற்செயல்விபத்துக்களும்இடம்பெற்றுள்ளன.

தற்செயல் விபத்துக்களைச் சந்தித்த குடும்பங்களின் அழிவுகள் பதியப்பட்டு நிவாரணத்துக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. தற்செயல் நிவாரணமாக ஒரு குடும்பத்திற்கு 20 ஆயிரம் வரை வழங்கப்படும் - என்றார். (த - 7)

# சமுர்த்திப் பயனாளிகளின் 1,931 மில்லியன் ரூபா பணம் பயன்பாடின்றி வங்கிகளில்

## மாவட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 8

சமுர்த்தி வங்கியில் வைப்பிலிடப்பட்ட பணத்தைப் பயனாளிகள் கடனாகப் பெற்றுக் கொள்வது குறைவாக உள்ளது. இதனால் பயனாளிகளின் ஆயிரத்து 931 மில்லியன் ரூபா சேமிப்புப் பணம் அரச வங்கிகளிலே உள்ளது. பயனாளிகள் அதனைப் பெறவில்லையாயின், இவ்வாறு வைப்பிலிட வேண்டிய அவசியம் இல்லை.

இவ்வாறு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் த.மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் சமுர்த்தி அலுவலகத்தினால் 'சமுர்த்தி அபிமானி 2017' வர்த்தகக் கண்காட்சி மாவட்ட செயலகத்தில் நேற்று ஆரம்பமானது. இந்தநிகழ்வில்சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள மாவட்டப் பணிப்பாளர் த.மகேஸ்வரன் மேலும் தெரிவித்தாவது:

எமது மாவட்டத்தில் பயனாளிகளிடம் இருந்து பெறப்பட்ட சேமிப்புப் பணங்கள் மீளவும் பயனாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகக் கடன்களாக வழங்கப்படுகின்றன. ஆனால் இவ்வாறான கடன்களைப் பெறும் பயனாளிகள் குறைவாகவே உள்ளனர்.



எமது மாவட்டத்தைப் பொறுத்த வரை கடந்த மாதம் வரை1,340 மில்லியன் ரூபா கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் 1,931 மில்லியன் ரூபா சேமிப்புப் பணம் அரச வங்கிகளிலே வைப்பில் இடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு வைப்பிலிட வேண்டிய அவசியம் இல்லை. எனவே உங்கள் தொழில் முயற்சிக்கு இந்தப் பணத்தை முதலீடாக நீங்கள் பயன்படுத்தவேண்டும்என்றார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்டச் செயலர் தெரிவித்தாவது:

உங்களுக்குக் கடன்களைக் கொடுத்து தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதற்குச் சமுர்த்தி வங்கிகள், உத்தியோகத்தர்கள் தயாராக உள்ளனர். ஆகவே உங்களுக்கான கடன்களைப் பெற்று வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ளுங்கள் - என்றார். (த - ரி)

# வடக்கு மாகாண வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு ரூ. 600 மில்லியன்

யாழ்ப்பாணம், ஏப். 8

வடக்கு மாகாண வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழான அபிவிருத்திப் பணிகளுக்கு இந்த ஆண்டில் 600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வன ஜீவராசிகள் திணைக்களம் தொடர்பில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சில நாள்களுக்கு முன்னர் ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போதே குறித்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

அனைத்து மாகாணங்கள் தொடர்பிலும் இதில் ஆராயப்பட்டது. வடக்கு மாகாண வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழான அபிவிருத்திப் பணிகளுக்கு இந்த ஆண்டில் 600 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உறுதியளிக்கப்பட்டது.

குறித்த நிதியில் வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது? அவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள பணிகள் எவை என்ற விவரங்கள் இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கப்படும் எனக் கூற ப்பட்டது - என்றார். (த - 101)

# மனிக்பாமில் 700 ஏக்கர் பொதுமக்களின் காணி

## மீட்டுத் தருமாறு உரிமையாளர்கள் கோரிக்கை

வவுனியா செட்டிக்குளம் மனிக்பாம் அமைந்திருந்த நிலங்களில் 700 ஏக்கர் 1978 இல் எமக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திர நிலங்கள். எனவே அவற்றை மீட்டுத் தாருங்கள் என அதன் உரிமையாளர்கள் கோரியுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின்போது வன்னியில் இருந்து வந்த மக்களைத் தங்க வைப்பதற்காக வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மனிக்பாம் பகுதியில் 6 ஆயிரத்து 200 ஏக்கர் நிலம் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு முகாம்கள் அமைக்கப்பட்டன. அங்கு தங்க வைக்கப்பட்ட மக்கள் 2011ஆம் ஆண்டுடன் அங்கிருந்து முழுமையாகச் சென்றுவிட்டனர். ஆயினும் அந்தப் பகுதியை இராணுவத்தினர் தொடர்ந்தும் அபகரித்து வைத்துள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தினர் வைத்துள்ள பகுதிகளில் சுமார் 700 ஏக்கர் நிலப்பரப்பு 72 ஆம் ஆண்டு முதல் 78 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வாழ்வாதாரத்துக்காக வழங்கப்பட்ட நிலம் எனவும், அதற்கான காணி அனுமதிப் பத்திரங்கள் தம்மிடம் உள்ளமையால் அவற்றை மீட்டுத் தருமாறும் அதன் உரிமையாளர்கள் 100 பேர் என்னை நாடியுள்ளனர். அவ்வாறு வந்தவர்களிடம் அதற்கான அனுமதிப் பத்திரங்கள் அல்லது ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தேன்.

அவர்கள் தமது ஆவணங்கள், ஆதாரங்களைத் திரட்டுகின்றனர். இதுவரையில் 42 குடும்பங்களின் அனுமதிப் பத்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதன் மூலம் அவர்களுக்கு அங்கு நிலம் இருந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய குடும்பங்களின் அனுமதிப் பத்திரங்களையும் சேகரித்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லவுள்ளோம் - என்றார். (த - 101)

# இரணைமடுக் குளத்து நீரை திறந்து 800 ஏக்கரில் செய்கை

## புனரமைப்புப் பணிகளை மேலும் விரிவுபடுத்துவதற்காக

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தில் இடம்பெறும் புனரமைப்புப் பணிகளை விரைவுபடுத்தும் நோக்கில் குளத்துநீரைப் பயிர்ச் செய்கைக்குத் திறந்து 800 ஏக்கர் சிறுபோக செய்கை மேற்கொள்வதற்குத் தீர்மா னிக்கப்பட்டுள்ளதாக இரணைமடு விவசாயிகள் சம்மேளனச் செயலாளர் மு.சிவமோகன் தெரிவித்தார்.

இரணைமடு விவசாய ஆலோசனைக் குழுக் கூட்டம் சம்மேளன மண்டபத்தில் திட்ட முகாமையாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இது குறித்து இரணைமடு விவசாயிகள் சம்மேளனச்செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

இரணைமடுக் குளத்தில் இடம்பெறும் புனரமைப்புப் பணிகளுக்காக குளத்தில் தற்போதுள்ள நீரையும் வெளியேற்றவேண்டிய தேவையுள்ளது. அந்த நீரைச் சேதாரமின்றிப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டது. இதனால் குளத்து நீரைப் பயிர்ச் செய்கைக்கு திறப்பதன் மூலம் இவ்விரு இலக்கினையும் ஒரே நேரத்தில் அடைய தீர்மானிக்கப்பட்டது.

குளத்தில் தற்போது 10 அடி நீரே உள்ளமையால் அதன் மூலம் 800 ஏக்கர் சிறுபோகச் செய்கையை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (த -101)

# தாய் தந்தையரை மதிப்போம்

இயேசுக்கிறிஸ்து நாதரின் திருப்பாடுகளை நினைவு கூரும் காலம் தவக்காலம். திருநீற்றுப் புதனில் குருவானவர் "மண்ணில் பிறந்த நீ மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய்" என்று கூறி நெற்றியில் பூசும் சாம்பலுடன் இந்தக்காலம் ஆரம்பித்து இயேசுக்கிறிஸ்து கல்வாரியில் சிலுவையில் தொங்கும் நாள்வரை நீடிக்கிறது. இயேசுக்கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அவருக்கு ஏற்பட்ட சோதனைகள், அவரது போதனைகளை நினைத்துப் பார்த்து நாம் செப வழிபாடு, உணவு ஒறுத்தல், அன்பு வாழ்க்கையை மேற்கொள்ள இந்தக் காலத்தைப் பயன்படுத்த வேண்டும். எமது தீயபழக்கங்களை, கைவிடவும் மற்றவர்களை மதிக்கவும், எமது சகோதரர்களை மதிக்கவும் கஷ்டப்படுபவர்களுக்கு உதவும் மனப்போக்கையும் உருவாக்க வேண்டும். இயேசு தாம் வாழ்ந்த காலத்தில் தமது தாய் தந்தையரை மதித்தார். அன்பு செய்தார். கீழ்ப்படிந்து நடந்தார் ஆனால் இன்றைய நாள்களில் பலர் பெற்றோரை புறம் தள்ளி கைவிடுவதுடன் வயோதிபர் மடத்தில் இணைத்து அவர்களை துன்பப்பட வைக்கிறார்கள். எனவே யேசுவின் போதனைகளையும் அவரது வாழ்க்கையையும் நினைத்து தமது வாழ்வை சீராக்க இந்தக் காலத்தைப் பயன்படுத்துவோம்.




*திலிப்*

# துணுக்காயில் இம்முறை 483 ஏக்கரில் நெற்செய்கை

யாழ்ப்பாணம், ஏப். 8

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இந்த ஆண்டின் சிறு போகத்தில் 483 ஏக்கர் மட்டுமே நெற்செய்கை இடம்பெறவுள்ளதாகப் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இது குறித்துப் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள குளங்களில் போதிய நீர் இல்லை. இருப்பினும் 3 குளங்களில் மட்டுமே குறிப்பிட்ட அளவு நீர் உள்ளது. பழைய முருகண்டிக் குளம், மருதங்குளம், கோட்டைகட்டிய குளம் ஆகியவற்றின் கீழ் உள்ள வயல் நிலங்களிலேயே செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன்படி, மருதங்குளத்தின் கீழ் 150 ஏக்கரிலும், பழையமுருகண்டிக் குளத்தின் கீழ் 165 ஏக்கரிலும், கோட்டைகட்டிய குளத்தின் கீழ் 168 ஏக்கரிலும் நெற்செய்கை இடம்பெறவுள்ளது - என்றார். (த - 101)

## பன்னாட்டு ரீதியில் முஸ்லிம்களுக்கு விரோதமாகச் செயற்படும் ஐ.தே.க.

### முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப்.8

ஐ.தே.க. முஸ்லிம் மக்களை வாட்டி, வதைத்துப், பிழிந்து வாக்குளைப் பெற்றதே தவிர, உண்மையிலே இந்த நாட்டு முஸ்லிம்கள் மீது எந்தவிதமான பரிவு பாசமும் வைக்கவில்லை. அதுமாத்திரமல்ல, ஐ.தே.க. தலைமைத்துவம் எந்நேரமும் பன்னாட்டுரீதியில் முஸ்லிம் மக்களுக்கு விரோதமாகத்தான் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலாளர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்தார்.

பொரளை என்.எம். பெரேரா மத்திய நிலையத்தில் கூட்டு எதிர்க்கட்சி சார்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இந்த நாட்டு முஸ்லிம்கள் ஐ.தே.கட்சியிலும் ஒரு கேள்வியை எழுப்புகின்றனர். அதாவது கபீர் ஹாசிம் ஐ.தே.கயின் செயலாளர் ஆசனத்தை வழங்கிவிட்டு அந்த ஆசனத்தின் கால்களைப் பறிப்பதற்கு முயற்சிக்கின்றனர். இது ஐ.தே. கட்சியில் பாரம்பரியமாக இருந்து வருகின்ற ஒரு சேஷ்டை. இதனை முஸ்லிம்கள் நன்கு அறிய வேண்டும்.

அன்று இந்த நாட்டின் தேசிய தலைவர்களில் ஒருவராகிய அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் தலைவர் டாக்டர் எம். சீ. எம். கலீலுக்கு, ஐ.தே.க. தவிசாளர் பதவி வழங்கியது. அதன் பின்னர் அவர் ஆசனத்தில் அமர்ந்து பணியாற்றுவதற்குரிய எந்தவிதமான உதவிகளையும் கட்சிக் காரியாலயம் செய்யவில்லை.

அவர் தவிசாளர் பதவியை உதறித்தள்ளி விட்டு தன்னுடைய நூராணியா இல்லத்துக்குச் சென்று விட்டார்.

அதன் பிறகு இந்த நாட்டுக்கு அரும்பெரும் பணியாற்றிய முதல் வெளியுறவு அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீதுக்கும், ஐ.தே.க. தவிசாளர் பதவி வழங்கப்பட்டு அவரும்



அந்த ஆசனத்தில் அமர்ந்து நொந்து போனார். எத்தனை முறை வேண்டியும் அப்படியான ஒரு தலைவருக்குக் கட்சிக்காரியாலயம் எந்த விதமான உதவி ஒத்தாசையும் வழங்கவில்லை. மனம் நொந்த ஹமீத், அதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் உடன் தொடர்பு கொண்டு எதிர்கால முஸ்லிம்கள் பற்றி பேச்சு நடத்தினார்.

ஐ.தே.க. முஸ்லிம் தலைமைத்துவத்துக்கு குந்தகம் விளைவித்துள்ளதை வரலாற்றில் ஒவ்வொரு பாடமாக நாங்கள் சுட்டிக்காட்டலாம்.

சடுதியாக ரஷ்யா சென்று முசலிப் பிரதேசம் சம்பந்தமாக மறிச்சுக்கட்டி முஸ்லிம்களுக்கு வர்த்தமானியில் அரச தலைவர் கையொப்பமிட்டதன் மர்மம் என்ன? இலங்கை வரலாற்றிலே ஓர் தலைமை அமைச்சரோ, அரசதலைவரோ வெளிநாடு சென்று அந்த நாட்டில் வர்த்தமானியில் கையொப்பமிட்ட வரலாற்றை முதலில் தோற்றுவித்தது இந்த அரச தலைவர்தான். இதன் பின்னணி என்ன என்பதை அரசுக்கு மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு அறிவிக்க வேண்டும்.

எனவே அணையாத ஒரு காற்றுத்தீ போல் மறிச்சுக் கட்டி முசலிப்பிரதேசம் இன்று பெரும் கஷ்டத்துக்குள்ளாகி இருக்கின்றது.

புலிகளால் விரட்டப்பட்டவர்கள் மீண்டும் வந்து குடியேறும்போது, அரச தரப்புப் புலிகள் அவர்களை விரட்டுவதற்கு மிரட்டுகின்றார்கள். இது மனிதாபிமான அடிப்படையிலும் மனித குலத்துக்கு செய்கின்றன பெரும் அநீதியாகும்." - என்றார்.

(ஐ)

## இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா 2.6 பில்லியன் உதவி

### இந்திய அயலுறவுத்துறை இணைஅமைச்சர் சபையில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.8

இலங்கைக்கு 2.6 பில்லியன் டொலரை அபிவிருத்திப் பங்களிப்பாக இந்தியா வழங்கியுள்ளது என்று இந்திய அயலுறவுத்துறை இணை அமைச்சர் ஜெனரல் வி.கே.சிங் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் அபிவிருத்திக்காக இந்தியா அளித்துள்ள பங்களிப்பு 2.6 பில்லியன் டொலருக்கு அதிகமாகும். இதில் நன்கொடைகள் 436 மில்லியன் டொலருக்கும் அதிகம்.

கடந்த ஆண்டு இலங்கைக்கு வழங்கப்பட்ட அபிவிருத்தி உதவிக்கான நிதியை விட இந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி குறைவாகும்.

2014 தொடக்கம் 2015 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் நிதியாண்டில் இலங்கைக்கு 499



கோடி ரூபாவையும், 2015 தொடக்கம் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் நிதியாண்டில் 403 கோடி ரூபாவையும் இந்தியா வழங்கியிருந்தது.

மார்ச் 27ஆம் திகதி வரையான கடந்த நிதியாண்டில் 73 கோடி ரூபாவை மாத்திரமே இந்தியா வழங்கியுள்ளது. என்றார்.

(ஐ - 10)

## வன இலாகா அதிகாரியை தாக்கிய மூவர் கைது

திருமலை, ஏப்.8

திருகோணமலை மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வன இலாகா அதிகாரியைத் தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மூன்று பேரை நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:

பன்குளம் டி1 பகுதியில் சட்ட விரோதமான முறையில் மரங்களை வெட்டுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, அங்கு சென்ற வன இலாகா அதிகாரிக்கும், சந்தேக நபர்களுக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதாகத் தெரியவருகின்றது. இதன்போது தாக்குதலுக்குள்ளான வன இலாகா அதிகாரி திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சந்தேகநபர்கள் மூவரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்று மொறவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ-ய-45)

## மைத்திரி, மகிந்த புதிய வாகனங்கள் கொள்வனவு

கொழும்பு, ஏப்.8

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும், தற்போதைய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் வரிச்சலுகைப் பத்திரத்தைப் பயன்படுத்தி, புதிய ஜீப் வாகனங்களைக் கொள்வனவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன, 62 ஆயிரத்து 500 டொலர் பெறுமதியான "டொயொட்டா லேண்ட் குருசர்" வாகனத்தைக் கொள்வனவு செய்துள்ளார்.

இதன்போது 33 லட்சத்து 457 ஆயிரத்து 500 ரூபா வரி தவிர்க்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மகிந்த ராஜபக்ஸ ஆஸ்திரேலியன் டொலரில் 82ஆயிரத்து 203.70 இற்கு "டொயொட்டா டீசல் ஸ்டேசன் வெகன்" வாகனத்தைக் கொள்வனவு செய்துள்ளார்.

மகிந்த கொள்வனவு செய்த வாகனத்துக்கு 33 லட்சத்து 457 ஆயிரத்து 500 ரூபா வரிச்சலுகை பெறப்பட்டுள்ளது எனவும் ஆங்கில இணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ஐ)

## மின்னல் தாக்கி இளைஞன் சாவு

வெலிகந்த, சிங்புரப் பகுதியில் மின்னல் தாக்கி இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார் என்று வெலிகந்தப் பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான இளைஞரே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அரிசி ஆலை ஒன்றில் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, அவர் மீது மின்னல் தாக்கியுள்ளது. இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மற்றொரு நபர், பொலனறுவை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு மேலதிக சிகிச்சை வழங்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் வெலிகந்தப் பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ-10)

8 ஆம் ஆண்டு நினைவு



தவராசா டக்சன்
(கும்பகாமம், பளை)
பிறப்பு: 20.09.1990 இறப்பு: 08.04.2009

உன் அன்பான பேச்சும் அழகான குறும்புகளும்
இன்று எம் கண்முன்னே வந்தாடிச் செல்லுதடா
ஆண்டுகள் எட்டு ஆனாலும் ஆறாது உன் இழப்பு

குடும்பத்தினர்.
(டக்சன் ரவல்ஸ்)
(AJA/CS/3073)(11,)

## ஐ.தே.கவிடம் மறைமுக நிகழ்ச்சி நிரல்

### யோகேஸ்வரன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஏப்.8

ஐக்கிய தேசியக் கட்சி மறைமுக நிகழ்ச்சி நிரலில் செயற்படுகின்றது. அதன் ஒரு கட்டமாக வடக்கு, கிழக்கில் சாராயத் தொழிற்சாலைகளும், கஞ்சா விற்பனையும் இடம்பெறுகிறது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளக்கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தொடர்பில் அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரால் சரிந்துபோன சிறுபான்மை மக்களின் வாழ்க்கையை மதுபானத் தொழிற்சாலைகளை நிறுவி நிமிர்த்த முடியாது. தொழில் வாய்ப்பு என்ற பேரில் முன்னெடுக்கப்படும் மறைமுக நிகழ்ச்சி நிரல்களை அனுமதிக்கமாட்டோம்.

சிறுபான்மையினரின் வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதில் அக்கறை காட்டாது மதுசார உற்பத்தித் தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது சிறுபான்மை இனங்களை அழிக்க வேண்டும் என்ற மறைமுக நிகழ்ச்சி நிரலே. பாசிக்குடா உல்லாச விடுதிகளில் கூட சிறுபான்மை மக்களுக்கு வேலைகள் இல்லை. அப்படி இருந்தாலும், அவர்களை வெளியேற்றிவிட்டு பெரும்பான்மையினரைக் கொண்டு வந்து நிரப்புகின்றனர். வாழைச்சேனை கடதாசி ஆலையை அரசு ஏன் கண்டு கொள்ளவில்லை. அதனை மீள இயக்கினால் ஆயிரக்கான மக்கள் தொழில் வாய்ப்பைப் பெறுவர் - என்றார்.

(ஐ - ய,46)



# சிரியா மீது போர் அமெ. அறிவிப்பு

## மூன்றாம் உலகப்போரின் தொடக்கப்புள்ளி என சமூக வலைத்தளங்களில் காரசாரப் பதிவுகள்

வொஷிங்டன், ஏப். 8
மக்களின் பகுதிக்குள் இரசாயனத் தாக்குதல் நடத்தியதன் எதிரொலியாகச் சிரியாமீது போர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது அமெரிக்கா. சிரியாவின் முக்கிய விமானப் படைத்தளம் மீதும் அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இந்த முறுகல் நிலை மூன்றாம் உலகப்போரின் தொடக்கப்புள்ளியாக அமையலாம் என்று சமூக வலைத்தளங்களில் காரசாரமான பதிவுகள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

சிரியாவில் சியா, சன்னி பிரிவு இஸ்லாமியர்களுக்கு இடையே உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகிறது. அரசுக்கு எதிரான கிளர்ச்சிக்குழு சிரியாவின் சில மாகாணங்களில் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி வருகிறது.

இட்லிப் மாகாணத்தில் சேகுன் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட வான்வழி இரசாயத் தாக்குதலில் பலபொது மக்கள் சாவடைந்தனர். (சில பன்னாட்டு ஊடகங்கள் 104 பேர் சாவடைந்தனர் என்றும் வேறு சில ஊடகங்கள் 86 பேர் சாவடைந்தனர் என்றும் குறிப்பிடுகின்றன).

இந்தத் தாக்குதல் போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குத்தேரஸ் தெரிவித்தார். அமெரிக்கா முதல்நாடாகத் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் எச்சரித்தது. இந்த நிலையில் நேற்றுமுன்தினம் போர் அறிவிப்பை வெளியிட்டார் ட்ரம்ப். இதனையடுத்து மத்திய தரைக்கடலில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் போர்க் கப்பல்களில் இருந்து ஏவப்பட்ட 59 ஏவுகணைகள் சிரிய விமானப் படைக்குச் சொந்தமான சாய்ரத் படைத்தளத்தைப் பதம் பார்த்தன.

சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கி 7 வருடங்கள் ஆகிறது. இதுவரை அந்த அரசுக்கு எதிராக அமெரிக்கா நேரடித் தாக்குதல் நடத்தியதில்லை. இதனால் இந்த விவகாரம் கடும் விளைவுகளைக் கொண்டுவரலாம் என்று கருதப்படுகிறது.

சிரிய உள்நாட்டுப் போர் விவகாரத்தில் சிரியாவுக்கு ஆதரவாக ரஷ்யாவும், ஈரானும் உள்ளன. இவை இரண்டும் அமெரிக்காவுடன் முரண்பாட்டு நிலைப்பாட்டைக் கொண்டுள்ள நாடுகள். எனவே அமெரிக்காவின் இந்தத் திடீர் நகர்வு உலகப் போரைக் கொண்டுவரலாம் என்று எதிர்வுகூறப்படுகிறது.

எனினும், சிரியாவில் தாக்குதல் நடத்தும் முன்னர் சீனா, ரஷ்யா ஆகியவற்றுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது என்று அமெரிக்காவின் சில ஊடகங்கள் சுட்டி நிற்கின்றன.

**ரஷ்யா கண்டனம்**

இறையாண்மைகொண்ட ஒரு நாட்டின்மீது அமெரிக்கா நடத்தியுள்ள ஏவுகணை தாக்குதலால் அமெரிக்கா ரஷ்யா இடையிலான நல்லுறவுகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று ரஷ்ய அதிபர் புடின் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டார். (ம)

# ஓ.பி.எஸ்ஸின் பரப்புரையில் கலவரம்

சென்னை, ஏப். 8
சென்னை ஆர்.கே. நகரில் ஓ.பி.எஸ். தரப்பினர் நேற்றுமுன்தினம் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தபோது, சசிகலா தரப்பினருக்கும் ஓ.பி.எஸ். தரப்பினருக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் சாவை அடுத்து அவர் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஆர்.கே. நகரில் எதிர்வரும் 12 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது. சசிகலாவின் தரப்பில் தினகரனும், ஓ.பி.எஸ். தரப்பில் மதுசூதனனும், தி.மு. கழகத்தின் சார்பில் மருது கணேஸும், எம்.ஜி.ஆர். - அம்மா - தீபா பேரவையின் சார்பில் தீபாவும்



களத்தில் உள்ளனர். ஓ.பி.எஸ். மற்றும் அவரது சகாக்கள் நேற்றுமுன்தினம் மாலை பரப்புரையில் ஈடுபட்டிருந்தபோது அவர்கள் பரப்புரையில் ஈடுபட்ட வாகனம் தினகரன் தரப்பினரின் தேர்தல் அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் வழியாகச் சென்றபோது இரு குழுக்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதையடுத்து கூடுதலாகப் பொலிஸார் வரவேற்கப்பட்டு நிலமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிடுகின்றன. (ம)



# அப்பாவ...
# அப்பாவ...

## உலகின் ப...
## சிரியத் த...

பெய்ரூட், ஏப். 7
சிரியாவில் அரச படைகள் அ...
ஆதரவு பெற்ற நாடுகள் நடத்...
சந்தேகிக்கப்படும் வான் வழி இ...
தாக்குதலில் கிட்டத்தட்ட 100 பேர்...
னர் என்று தெரிவிக்கப்பட்டிருந்த...
அவர்களில் 22 பேர் ஒரே குடு...
சேர்ந்தவர்கள் என்ற அதிர்ச்சி...
நேற்றுமுன்தினம் வெளியான...
இட்லிப் மாகாணத்தில் சேகு...
அரசுக்கு எதிராகச் செயற்படும்...
குழுவை இலக்குவைத்...
செவ்வாய்க்கிழமை நடத்தப்...

# மியன்மாரில் இ...
# இனச் சுத்திக...

## சொல்கிறார் சூகி

மியன்மாரில் சிறுபான்மைய...
உள்ள ரொகின்கயா இஸ்லாம...
மீது மனித உரிமை மீறல்க...
இனச்சுத்திகரிப்பும் அரங்கேற...
குற்றஞ்சாட்டப்பட்ட நிலையில்...
அவற்றை மறுத்துள்ளார் அந்...
அரச தலைவர் ஆங் சாங் சூகி...
பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்...
வழங்கிய பிரத்தியேக செவ்வ...
இந்தக் கருத்தை அவர்
பதிவுசெய்துள்ளார்.
ரொகின்கய இஸ்லாமியர்கள்...
ரக்கீன் மாநிலத்தில் பிரச்சினை...
நிலவுகின்றன. ஆனால் இதற்...
இனச்சுத்திகரிப்பு என்ற வடிவ...
கொடுப்பது அபத்தமானது எ...
மேலும் தெரிவித்தார்.


# புத்தர் உங்களை மன்னிப்பாராக

ஜப்பானிய கலைஞர் யோன்ஜி இனாமுரா வண்டுகளை வைத்து புத்தரின் உருவத்தை வடிவமைத்தமை தற்போது வைரலாகி வருகிறது. 6 ஆண்டுகள் பல்வேறு விதமான வண்டுகளைச் சேகரித்து, புத்தர் சிலையை உருவாக்கி யிந்தார்.

1970 ஆம் ஆண்டு தன்னிடமிருந்த 5 ஆயிரம் வண்டுகளை வைத்து, 10 மாதங்களில் சாமுராய் உருவத்தைச் செய்து முடித்தார். பலரும் ஆச்சரியப்பட்டுப் பாராட்டினர்.

சிலர் வண்டுகளைக் கொன்று கலையை உருவாக்குவதா என்று எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் இவர் விமர்சனத்தைப் பொருட்படுத்தவில்லை. அதற்குப் பிறகு 6 ஆண்டுகளில் 20 ஆயிரம் வண்டுகளைச் சேகரித்து புத்தரைச் செய்து முடித்தார். சாமுராயை விட புத்தர் மிக நேர்த்தியாக இருந்தார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டோக்கியோ அருங்காட்சியகத்தின் நிர்வாக இயக்குநராக இருந்தவர் வண்டு புத்தரைக் கண்டுபிடித்தார். யோன்ஜியின் அனுமதியோடு இடாகுரா அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைத்தார். கடந்த ஆண்டு 98 வயதில் மறைந்துபோன யோன்ஜி, கடைசிவரை வண்டுகளை வைத்து ஏன் உருவங்களைச் செய்தார் என்ற காரணத்தை மட்டும் சொல்லவே இல்லையாம். (ம)





# ...க்கு விடைகொடுங்கள்... ...க்கு விடைகொடுங்கள்...

## ...சாட்சியை உலுக்கும் ...தையொருவரின் துயரம்

அரச ... நாகச் ... னத் ... ழுந்த ... யில் ... தைச் ... வல் ... கரில் ... ச்சிக் ... ந்த ... வான்

வழி இரசாயனத் தாக்குதல் இலக்குத் தவறியதை அடுத்து நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்தனர். இந்தத் தாக்குதல் போர்க் குற்றம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் குட்டரெஸ் தெரிவித்தார்.

உயிரிழந்தவர்களில் 22 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பிறந்த ஒன்பது மாதமேயான இரட்டைக் குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர். குழந்தைகளின் தந்தை அப்துல் ஹமீட் யூசொப், உயிரற்ற தனது குழந்தைகளின் சடலங்களை மடியில் அணைத்து வைத்து, "அப்பாவுக்கு விடைகொடுங்கள்.. அப்பாவுக்கு விடைகொடுங்கள்..." என்று கதறும் காணொலி பன்னாட்டு சமூகத்தில் மனசாட்சியை உலுக்க ஆரம்பித்துள்ளது.

என் இருதயம் உடைந்து நொறுங்கிவிட்டது. அனைத்தும் மிகப் பயங்கரமானவை. அனைவரும் அலறுகின்றனர், ஒருவரும் மூச்சு விட முடியவில்லை. நாங்கள் எத்தனையோ கடினப்பாடுகளைக் கண்டிருக்கிறோம். ஆனால் இதுதான் மிகவும் பயங்கரமானது எனத் தாக்குதலை நேரில் சந்தித்த பாதல் என்பவர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குச் செவ்வி வழங்கினார். (ம)

# ஜெயாவின் உருவப்பொம்மையுடன் ஓ.பி.எஸ். தரப்பு தேர்தல் பரப்புரை


சென்னை, ஏப். 8

ஆர்.கே. நகர் இடைத்தேர்தலில் ஜெயலலிதாவின் உருவப்பொம்மையுடன் ஓ.பி.எஸ். தரப்பினர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஜெயலலிதா சாவடைந்த பின்னர் அவரது சடலம் மக்களின் அஞ்சலிக்காக எப்படி வைக்கப்பட்டிருந்ததோ அவ்வாறு ஓர் பொம்மையை வடிவமைத்து, ஜெயலலிதாவின் சாவுக்கு சசிகலாவே காரணம் என்று ஓ.பி.எஸ். தரப்பினரில் சிலர் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டனர். தகவலறிந்து தமிழக பொலிஸார் விரைந்து வந்து தேர்தல் பரப்புரையில் இந்த நடைமுறை தவறானது என்று தெரிவித்ததை அடுத்து பொம்மை அகற்றப்பட்டது. (ம)

## நியூசியில் டெபி புயல் தாண்டவம்

ஆஸ்திரேலியாவைப் பதம்பார்த்த டெபி புயல் தற்போது நியூசிலாந்தில் நிலை கொண்டுள்ளது. இந்தப் புயல் காரணமாக கடந்த 500 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அங்கு கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. நியூசிலாந்தின் வடக்கு தீவு நகரமான எட்கேகும்பே நகரம் வெள்ளத்தில் மூழ்கியது. அங்கிருந்த மக்கள் அனைவரையும் பொலிஸார் கூண்டோடு வெளியேற்றியுள்ளனர். சேத விபரம் தொடர்பில் முழுத் தகவல் வெளியாகவில்லை. (ம)



எகிப்தின் சரபிம் பாலைநிலத்தில் அண்மையில் சிறுவர்களுக்கான பன்னாட்டு ஒட்டப்பந்தய போட்டி நடைபெற்றது. நூற்றுக்கணக்கான சிறுவர்கள் இதில் ஆர்வத்துடன் பங்குகொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் போட்டிகளை நேரில்சென்று பார்த்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

லை ... பு ... க ... ள் ... ன்று ... ட்டின் ... மயே ... ம் ... (ம)



வடமராட்சி மக்களின் நலன் கருதி

P.P.T Express இன் மகத்தான சேவை

கொழும்பு - யாழ்ப்பாணம் பேருந்து சேவையில் முன்னணி வகிக்கும் P.P.T எக்ஸ்பிரஸ் நிறுவனம் புத்தம் புதிய அதி சொகுசு பஸ்களை (விமானத்தில் இருப்பது போன்றது) சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் கொழும்பு மக்களுக்காக அதி உன்னத சேவை நடாத்தும் P.P.T நிறுவனம் பிரயாணிகளின்நலன் கருதி தனது சேவையை மேம்படுத்தியுள்ளது.

யாழ் - கொழும்பு
கொழும்பு - யாழ்
12 மணித்தியால
பொதிகள் சேவை

முதலாவது பேருந்து: யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 8.00 மணிக்கு கொழும்பு நோக்கி புறப்படும்.

இரண்டாவது பேருந்து: **பருத்தித்துறையிலிருந்து இரவு 8.00 மணிக்கு** புறப்பட்டு நெல்லியடி, அச்சுவேலி, கோப்பாய், இருபாலை, நல்லூர் ஊடாக யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணத்திலிருந்து இரவு 9.00 மணிக்கு கொழும்பை நோக்கிப் புறப்படும்.

அதேபோல் - முதலாவத பேருந்து வெள்ளவத்தையில் இருந்து இரவு 8.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து காங்கேசன்துறை வீதி வழியாக காங்கேசன்துறையைச் சென்றடையும்.

இரண்டாவது பேருந்து - வெள்ளவத்தையில் இருந்து இரவு 9.00 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் வந்து பருத்தித்துறை வீதி வழியாக பருத்தித்துறையை சென்றடையும்.



ஆசனப் பதிவுகளை இங்கே மேற்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம்: 0775731318
183,கே.கே.எஸ் வீதி, 021 492 3240

பருத்தித்துறை: 0775736003
அரசடி லேன் பருத்தித்துறை, 021 492 3724

கொழும்பு: 0775755175
182,சென்றல் றோட், கொழும்பு -12
0112 320336

வெள்ளவத்தை: 0766036204
296, A1, காலி வீதி, கொழும்பு -06
0112364999




# சிங்கர் சிறி லங்காவின் புத்தாண்டு பருவகால நுகர்வோர் உற்பத்திகள் சந்தைக்கு அறிமுகம்

## "அனைத்து உற்பத்திப் பிரிவுகளையும் விசேட புத்தாண்டு சலுகையில் பெற்றுக்கொள்ள முடிகிறது"

நாட்டில் நீடித்து உழைக்கின்ற நுகர்வோர் உற்பத்திகளின் விற்பனையில் முன்னணி நிறுவனமாகத் திகழ்கின்ற சிங்கர் சிறிலங்கா புத்தாண்டுபருவகாலத்தை முன்னிட்டுவிசேடபுத்தாண்டுச்சலுகைகளை அறிமுகப் படுத்தியுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பிரகாரம் அனைத்து பிரதான உற்பத்திப் பிரிவுகளுக்குமாக இந்த விசேட புத்தாண்டுச் சலுகைகள் வழங்கப்படவுள்ளதுடன் பல வகைப்பட்ட சமையலறை சாதனங்களுக்கு ஆறு மாதங்களுக்கான வட்டியில்லா தவணைக் கொடுப்பனவு முறைமைகள் அறிமுகம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக டெல், சம்சங், ஹூவாவி மற்றும் சொனி போன்றமிகப்பிரபலமான வர்த்தகநாமங்கள் வழங்கும் கணினிகள் மற்றும் அதிதிறன்பேசிகள் அடங்கலான அனைத்தையும் நியாயமான விலை நிர்ணயத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் தமது டிஜிட்டல் மையங்களுக்கு வருகை தந்து அதிநவீன சாதனங்களை நேரடியாகக் கண்டு அனுபவிப்பதற்கான சந்தர்ப்பங்களைசிங்கர்வழங்கியுள்ளது. தவிர, பல்வேறு வகையான, ஹூவாவி கைபேசி சாதனங்களுக்கு அனைத்துக் காட்சியறைகளிலும் பிரத்தியேக சலுகைகள் கிடைக்கப்பெறுவதாகவும் சொல்லப்படுகிறது.

இந்த ஊக்குவிப்புச் சலுகைகளை நுகர்வோர் அனைத்து சிங்கர் காட்சியறைகளிலும் மற்றும் அனுமதி பெற்ற முகவர்களிடத்திலும் பெற்று அனுபவிக்க முடியும். பிரதானமாக இந்த முறையும் சம்சங், சொனி, கென்வூட், பெகோ, மௌலினெக்ஸ், கிற்றாச்சி, ஹூவாவி, பிலிப்ஸ், சிங்கர், சிசில் மற்றும் ஏராளமான மிகச்சிறந்தவர்த்தகநாமங்களின் தெரிவுகளை புத்தாண்டு விற்பனையின் கீழ் சிங்கர் உள்ளடக்கியுள்ளது. சம்பத் கடனட்டையைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு 20 வீதம் வரையான விலை நிர்ணயத்தள்ளுபடியும் 20 மாதங்கள் வரையான வட்டியின்றியதானதவணைப் கொடுப்பனவுத் திட்டங்களின் அடக்கமும் சிறப்பு சலுகைகளாகக் கிடைக்கப் பெறுகின்றன.

அதேபோன்று வாடிக்கையாளர்கள் குளிர்சாதனப் பெட்டிகளுக்கு சிறப்பான தள்ளுபடிகளைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் தாம் தெரிவுசெய்கின்ற உலகின் மிகச்சிறந்தவர்த்தகநாமங்களுக்குபல்வேறுபட்டதெரிவுகளுடன் இணைந்ததான சலுகைகளை இலவசமாகப் பெற முடிவதுடன் சிங்கர் தொலைக்காட்சிகளுக்கு இணையற்ற தள்ளுபடிகள் கிடைக்கப்பெறுகின்றன. அதேபோன்று அகலத்திரை கொண்ட தொலைக்காட்சிகளுக்கு பணத் தள்ளுபடிகள், இலவச அதிதிறன்பேசிகள், தொலைக்காட்சித் தாங்கிகள், கொள்வனவு செய்யும் ஒவ்வொரு தொலைக்காட்சிக்குமான 03 வருட கால உத்தரவாதம்மற்றும்வியப்பூட்டும் இலவச டயலொக் தொலைக்காட்சிஇணைப்பு ஆகியன கிடைக்கப்பெறுகிறது.

> பண்டிகைக்காலத்தில் இலகு தவணைக் கொடுப்பனவு நடைமுறைகள் மற்றும் பழைய கையிருப்புகளுக்கான விசேட சலுகைகளை சிங்கர் வழங்குகின்றது. இந்தப் பருவகாலத்தில் சிங்கர் காட்சியறைகளுக்கு வருகை தருகின்ற வாடிக்கையாளர்கள் அனைவரும் குளிரூட்டிகள், சிம்பொனி காற்றுக் குளிர்விப்பு சாதனங்கள், சிங்கர் ஓடியோ சாதனங்கள் மற்றும் சிங்கர் மின்விசிறிகளை வட்டியின்றிய மற்றும் இலகு தவணைக் கொடுப்பனவுத் திட்டங்களின் கீழாக கொள்வனவு செய்துகொள்ள முடிகிறது.

# இதயத் தசையில் ஏற்படும் பாதிப்பைக் கண்டுகொள்ள புதிய பரிசோதனை முறைமை

## மருத்துவர்கள் கண்டறிவு

தொழில்நுட்பத்தின் வளர்ச்சிப் போக்கு மனித நடத்தைக் கோலங்களோடு போட்டியிட்டு புதியனவாக அறிமுகம் பெறுகையிலே நோய்களின் சூழமைவுகளுக்குள் காலநிலையின் மாற்றங்களோடு முட்டி மோதிமனிதன்தப்பித்துஉயிர்வாழவேண்டிய காலங்கள் நகர்ந்துகொண்டிருக்கின்றன. இந்த இடைவெளிகளை இடைவேளையின்றி சமனிலையோடு அணுக வேண்டிய தேவை தற்போது இருந்துவருகிறது.

அந்தவகையிலேஇதயம்சார்ந்தநோய்கள் முக்கிய இடத்தைபெற்றுக்கொண்டுள்ளது. மாரடைப்பால் உயிரிழப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றது. இந்தச் சந்தர்ப்பத்திலே இதயத்தின் தசையில் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறியும் வகையிலான பரிசோதனை முறைமையொன்றை மருத்துவர்கள்கண்டறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து கருத்துரைத்துள்ள பிறிட்டிஸ் ஹறாட் பவுண்டேசன்ஸ் அமைப்பின் தலைவர் நிலேஷ் சமனி,

"இதயத் தசையில் பிரச்சினைகள் ஏற்படும் போதே ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படுகின்றது. இவ்வாறான நிலையில் இதயத் தசையில் ஒருவருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும், குறித்த நபருக்கு ஏற்கனவே சிறியளவில் மாரடைப்பு ஏற்பட்டுள்ளதா என்பதையும் அறிந்து கொள்ள முடியும். இரத்த பரிசோதனை மூலமாக மேற்கொள்ளப்படும் இந்தச் சிகிச்சை முறைமைக்கு 12 நிமிடங்கள் மாத்திரமே போதுமானது.

இந்த முறை மூலமாக பாதிப்புடைய நபருக்கான அவசர சிகிச்சையைவழங்கிஅவரின் உயிரைக் காப்பாற்ற முடியும். சோதனை முயற்சியில் உள்ளதான இந்த முறைமை எதிர்வரும் ஆறு மாத காலப்பகுதியுள் மருத்துவ சிகிச்சை நடைமுறைகளின் அறிமுகமாக வெளிவரும்" - என்றார்.



## வணிகம்

# நுகர்வோர் சட்டங்களை மீறும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு காலத்தில் சந்தையில் ஏற்படுவதான பிரச்சினைகளைக் குறைத்துக் கொண்டு நுகர்வோர் நலன் சாராது மோசடி வர்த்தகம் மற்றும் முறைகேடான சேவை வழங்கலில் ஈடுபடுவோருக்கு எதிரான நடவடிக்கைகள் நாடு முழுமையுமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அனைத்து அதிகாரிகளுக்கும் இதுகுறித்தான அறிவித்தல் வர்த்தக மற்றும் கைத்தொழில் விவகார அமைச்சர் ரிஷாத் பதியுதீனால் விடுக்கப்பட்டுள்ளதாககூறப்படுகிறது.

நுகர்வோர்விவகாரஅதிகாரசபையின் அதிகாரிகளுக்கும் அமைச்சருக்கு இடையில் இடம்பெற்ற தானகலந்துரையாடலின் போதே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள நுகர்வோர்அதிகாரசபையின்தலைவர் ஹசித்த திலகரட்ன,

" நாடு முழுமையுமாக நுகர்வோர் நலன் சாராது செயற்பட்டு வருவதான அனைத்து வர்த்தகநிலையங்களையும்சுற்றிவளைக்கும்நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஏதேனுமொரு சேவை வழங்கும் நிலையம் நுகர்வோர் சட்டத்தை மீறி செயற்படும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைஎடுக்கப்படும். தவிரசட்டமீறல்குறித்தானஅவதானங்களைஅவசரஇலக்கமான 1977இற்குஅழைத்துநுகர்வோர்அறிவிக்க முடியும்" - என்றார்.

# நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த் வரி முறைமையை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டும்

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு வரி அறவீடு தொடர்பிலானமுறைமையினை மேலும் பயனுள்ளதாக ஒழுங்குமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதானகருத்துக்கள் அரச தலைவர்மைத்திரிபாலசிறிசேனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக அரச நிறுவனங்கள் மற்றும் சில தனியார் வர்த்தகங்கள், அவை மேற்கொள்வதான முதலீட்டுவேலைத்திட்டங்களின் மூலமாகஅரசின்வரிவருமானத்தில் சேர வேண்டிய வரி வகையறைகள் இழக்கப்படுவதான சந்தர்ப்பங்கள் அவரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் வரி அறிவிடுவதில் நிலவும் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதான விடயதானங்களும் அவரது கருத்துக்களில் குறித்துக் காட்டப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.



# வடக்கு மாகாண சபையின் வாதப் பிரதிவாதங்கள் நிறைந்த 90ஆவது அமர்வு

தி.சோபிதன்

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள்நியமனங்களில் உள்ளபிரச்சினைகள் தொடர்பாக மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்றுவரை உறுப்பினர்கள் கதைத்துக்கொண்டு இருக்கின்ற போதிலும் அவற்றுக்கு ஒரு தீர்க்கமான தீர்வைக் கண்டதாக இல்லை.

வடக்கு மாகாண சபையின் ஒவ்வொரு அமர்விலும்ஏதோவொருவகையில்நியமனங்கள் தொடர்பாகக் கதைக்கப்படுகின்றபோதிலும்அதில்அக்கறைசெலுத்தி தீர்வைக் காணமுடியாத நிலையே காணப்படுகின்றது.

## சுகிர்தனின் கோரிக்கை

வடக்கு மாகாண சபையின் நேற்று முன்தினம்இடம்பெற்ற90ஆவதுஅமர்விலும் ஆசிரியர்மற்றும்அதிபர்களின்நியமனங்கள் தொடர்பான பிரச்சினைகள் பேசப்பட்டன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன்வடக்குமாகாணத்தில்உள்ளவேலையில்லாப் பட்டதாரிகளை மாகாண சபையின் ஊடாக இருக்கின்ற வெற்றிடங்களுக்கு உள்வாங்கி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இந்த விடயம் பேசப்படும்போது மாகாணத்தின் கல்வி நிலைமை மற்றும் நியமனங்கள்தொடர்பாகவும்கதைக்கபட்டது.

"யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாகப் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கினாலும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்வதில்லை. எவரையாவது பிடித்துத் தங்களுக்கு ஏற்ற இடங்களைத் தெரிவு செய்து கொள்கின்றனர்.பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பார்த்தே நியமனங்களை வழங்க வேண்டும்.

புவியியல்பாடத்தில்சிறப்புப்பட்டதாரியாக இருக்கும்ஒருஆசிரியருக்குஅந்தத்துறை சார்ந்த பாடத்தை கொடுக்காமல் வேறு பாடம்வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமைதான் தற்போதுகாணப்படுகின்றது என்றார் சுகிர்தான்.

"மாவட்ட ரீதியாக ஆசிரியர்களை நியமியுங்கள் அப்போதுதான் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் எந்தவிதமான பிரச்சினைகளுமின்றிக் கடமைக்குச் செல்வார்கள். வெட்டுப்புள்ளிகளை மாவட்ட ரீதியாகக் கணித்துநியமனங்களைஎனவழங்குங்கள். நான் கதைத்துக்கொண்டிருக்கிறேன்.

ஆனால் கல்வி அமைச்சர் அதைக் கவனிக்காமல் இருக்கிறார். கல்வி அமைச்சரே! உங்களின் கவனத்துக்கு இது வர வேண்டும் என்பதற்காகவே இதைக் கூறுகிறேன். அமைச்சர் இந்தவிடயத்தைக் கருத்தில் எடுக்க வேண்டும் என உறுப்பினர் தியாகராசா அமைச்சரை அழைத்தார். அதன்பின்னர் அமைச்சர் அவரது கருத்தைச் செவிமடுத்தார்.

இங்கிருக்கின்ற அமைச்சர்கள் அவர்கள் சார்ந்த அமைச்சுக்களின் ஊடாக இருக்கின்ற பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி அதனைத்தீர்க்கவேண்டும்எனநாங்கள் சபையில் கதைக்கும் போது அவர்கள் ஏதோ தங்களுக்கு சம்பந்தம் இல்லாத மாதிரிநடந்துகொள்கின்றனர். என்றுகூறிவிட்டுத்தியாகராஜா அமர்ந்தார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தை வறுமையான மாவட்டம் என்று பேரளவில் சொல்லிக்கொண்டுஅந்தமாவட்டத்தைஒதுக்கிவைக்கின்றநிலைமைதான்காணப்படுகிறதுஎனரவிகரனும்தனதுமாவட்டநிலைமையை சொல்லி ஆதங்கப்படார்.

உறுப்பினர் கஜதீபன் ரவிகரனின் கருத்துக்கு அப்பால் சென்று "வலிகாமத்திலதான் அதிகளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அது இன்றைவரைக்கும்நிரப்பப்படவில்லை.முன்னைய காலத்தில இருந்த ஒருசில அரசியல்வாதிகள் தங்களுக்கு ஏற்றமாதிரி ஆசிரியர்களை நியமித்தனர்" என்று சொல்லிக்கொண்டிருக்க, அதற்கும் எமது கட்சியினர்தான் காரணம் என்றா கூறுகிறீர்கள் என்றுதவநாதன் முணுமுணுக்க, "நான் அப்படிச் சொல்லவில்லை ஆனாலும் ஈ.பி.டி.பி தான் செய்தவை என்று சொல்வதற்கும்இந்தஇடத்தில்ஒருதுணிவுவேண்டும்" என்றார்.

இப்படிச் சிறிது நேரம் இரண்டு பகுதியும் தங்களுக்குள்கருத்துகளைகூறிக்கொண்டு இருக்க உறுப்பினர் சிவாஜிலிங்கம் சடுதியாக எழும்பி அந்த ஆட்களைப் பற்றிக் கதைக்க எங்களுக்கு ஒரு நாள் போதாது என்றார்.

"என்னைய்யாஇங்கேஎன்னநடக்கிறது? ஒரு நிகழ்ச்சி நிரலுக்கு அப்பால் கதைத்துக்கொண்டு இருந்தால் மற்றைய விடயங்களைப் பற்றி பேசுறதில்லையா?" என ச் சடுதியாக தவராசா எழுந்து சி.வி.கேயை பார்த்து கேட்க, "ஓம் ஓம் தவராசா இன்று நீங்கள் முதலமைச்சரிட்ட கேட்க இருக்கின்ற கேள்வி தொடர்பான விடயம் நிச்சயமாக எடுக்கப்படும்.

முதலமைச்சருடனும் கதைத்துள்ளேன் என்றார் சீ.வி.கே. எனது கேள்விக்காகச் சொல்லவில்லை நிகழ்ச்சி நிரலில் இருக்கின்றவிடயங்களைமட்டும்கதையுங்கள் என்றுதான் சொல்கிறேன்" என்றார் தவராசா.

"வேலையில்லாப்பட்டதாரிகளுக்கு வடக்கு மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களில் என்னென்ன வெற்றிடங்கள் இருக்கின்றன என்பதை ஆளுநருக்கு அனுப்பி உடனடியாக அதனை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அவைத்தலைவர் கூறி, "முதலமைச்சரிடம் கேட்கவேண்டிய கேள்விகளைத் தவராசா கேளுங்கள்" என்றார்.



## முதலமைச்சரிடம் கேள்விகள்

முதலமைச்சரிடம்தவராசாவரிசையாகக் கேள்விகளைக் கேட்டார். அதற்கு முதலமைச்சர் பரிந்துரை செய்யவில்லை. எனக்கு அறியத்தரப்படவில்லை எனச் சர்வசாதரணமாகப் பதில்களை வழங்கினார்.

இங்கே என்ன நடக்கின்றது? ஒரு கேள்வியைகேட்கமுன்னர்முதலமைச்சர்ஐயாவும் இல்லை,அறியத்தரவில்லை என்று சொல்லதவராசாவும்பேசாமஇருக்கிறார். இப்படி இரண்டு பேருக்கும் இடையில் மட்டும் விளங்கக்கூடிய மாதிரிக் கதைத்தால் எங்களுக்கு ஒன்றும் தெரியக்கூடாதா? அப்படியென்றால்இரண்டுபேரும் சபைக்கு வெளியில சந்தித்துக் கதைத்திருக்கலாம். காலையில இருந்து இதற்காகவா இவ்வளவு பில்டப் கொடுத்துக் கொண்டுஇருந்தவர்?என்றுலிங்கநாதன் கேள்வியெழுப்பினார்.

"இந்திய அரசின்உதவியுடன்ஒட்டுசுட்டானில் பயிற்சிப் பாடசாலை ஒன்றை அமைப்பது தொடர்பாகக் கதைக்கப்பட்ட சம்பவம் உண்மை. இது முதலமைச்சருக்குத்தெரியாமல்இருக்கலாம். ஆனால் நம்பந்தகுந்த வட்டாரன்கால எனக்கும் சொல்லப்பட்டது." என்று சிவாஜி கூற அதன் பின்னர் அவைத்தலைவர் இந்த விடயத்துக்குஏன் இந்தக்கருத்துமோதல்கள்? மாகாண சபையின் ஊடாக இந்திய துணைத்தூதுவருக்கு இது தொடர்பாகக் கடிதம்ஒன்றைஅனுப்புவோம்அவர்கள் பதிலளிக்கட்டும் என கூறியவாறு, ஏனைய உறுப்பினரான அஸ்மினின் பொதுமுக்கியதுவம் வாய்ந்த பிரேரணைக்குச் சென்றார். இதன்போது அவைத்தலைவர், இதைப் பிரேரணை என்று சொல்ல இயலாது. பொதுமுக்கியத்துவம்என இழுக்க, "அப்ப இதனை என்னவென்று சொல்லப்போகிறீர்கள்? என அஸ்மின் கேள்வி கேட்க சரி என்னவோபிரேரணையாகச் சரி சபையில் முன்மொளியுங்கோ என்று கூற சபையில் வர்த்தமானி அறிவித்தலை மீளப் பெறுமாறு கோரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டு சபை அடுத்த அமர்வுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. மன்னாரில் முசலிப் பிரதேசத்தின் பல பகுதிகளையும் பாதுகாப்புப் பிரதேச மாகஅறிவிக்கும் அரசதலைவரின் வர்த்தமானிப் பத்திரத்தை மீளப் பெறுமாறு கோரியதாக அந்தப் பிரேரணை அமைந்திருந்தது.

> வடக்கு மாகாண சபையின் நேற்று முன்தினம் இடம்பெற்ற 90ஆவது அமர்விலும் ஆசிரியர் மற்றும் அதிபர்களின் நியமனங்கள் தொடர்பான பிரச்சினைகள் பேசப்பட்டன. வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் வடக்கு மாகாணத்தில் உள்ள வேலையில்லாப் பட்டதாரிகளை மாகாண சபையின் ஊடாக இருக்கின்ற வெற்றி டங்களுக்கு உள்வாங்கி அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சிரியப் போரில் தோற்றது மனிதம்

சிரியாவில் நடந்துவரும் போர் இன்னும் தீவிரம் பெற்று வேறொரு பரிமாணத்துக்குள் புகுந்துள்ளது. மக்கள் கொன்று குவிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். லட்சோப லட்சம் மக்கள் அகதிகளாக உயிரைக் காக்க ஓடிக்கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கா சிரியாமீது போர்முழக்கம் செய்து அந்த நாட்டின் இராணுவத் தளங்களைத் தாக்கத் தொடங்கியிருக்கிறது. இது இன்னும் இன்னும் இழப்புகளையும் துயரங்களையும் அதிகரிக்கப்போகிறது.

சிரியாவில் ஆட்சியில் இருப்பவரான அதிபர் அசாத்தைப் பதவி விலகக்கோரி மக்கள் போராட்டங்கள் மேற்குலகின் ஆதரவுடன்2011இல் ஆரம்பிக்கப்பட்டன. மத்தியகிழக்கு நாடுகளில்வீசிய 'அரபு வசந்தம்' எனவர்ணிக்கப்பட்ட ஆட்சிகளுக்கு எதிரான புரட்சிகளின் ஒரு பாகமாகவே சிரியாவிலும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

2010ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வட ஆபிரிக்க நாடான துனியாவில் இந்தப் புரட்சி வெடித்தது. மெல்ல மெல்ல மத்திய கிழக்குக்குப் பரவியது. லிபியா, எகிப்து, யேமன், ஈராக் மற்றும் சிரியா என்று அது பரவியது. வன்முறை ரீதியிலும் வன்முறையற்ற ரீதியிலும் இந்தப் போராட்டங்கள் இடம் பெற்றன.

அரபு வசந்தத்தின் பயனாக எகிப்தில் மட்டுமே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது (அதுவும் பின்னர் உருப்படியானதாக அமையவில்லை என்பது வேறு கதை). பஃரெய்ன்மற்றும் யேமன் நாடுகளில் பிராந்திய மற்றும் பன்னாட்டுத் தலையீடுகளை ஏற்படுத்தியது. மிகப்பெரும் அழிவை ஏற்படுத்திய உள்நாட்டுப்போரை உருவாக்கிவிட்டது ஈராக் (ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம்) மற்றும் சிரியாவில்.

இப்படிச் சிரியாவில் உருவாகிய உள்நாட்டுப் போரில் மேற்குலகம் ஒரு பக்கமும் ரஷ்யா மற்றும் சீனா என்பன ஒரு பக்கமுமாக நிற்க, சிரிய அதிபர் அசாத்துக்கு ஆதரவாகவும் எதிராகவும் என போர் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கடந்த ஆண்டு வரையில் மட்டும் இந்த உள்நாட்டுப் போரால் 4 லட்சத்து 70 ஆயிரம் மக்கள் உயிரிழந்திருக்கின்றனர். கடந்த ஆண்டு வரைக்கும் 48 லட்சம் பேர் அகதிகளாகியிருக்கிறார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 76 லட்சம் பேர் உள்ளூரிலேயே இடம்பெயர்ந்து இருக்கிறார்கள்.

இந்த எண்ணிக்கைப் பட்டியல் இப்போதைக்கு முடிவுறப் போவதில்லை. அது இன்னும் பெருத்துக்கொண்டேதான் போகப்போகிறது. சிரியாவின் உள்நாட்டுப் போரைமுடிவுக்குக் கொண்டுவரும் விடயத்தில் உலகம் மிகப்பெரும் தோல்வியைச் சந்தித்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையும் மற்றும் பல நாடுகளும் எவ்வளவோ முயன்றும் சிரிய அரச தரப்புக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த முடியவில்லை.

இந்தப் போர் உள்நாட்டுப் போர் என்கிற வடிவத்தைவிட்டு விலகி நீண்ட நாள்களாகின்றன. சிரிய அரச படைகளுக்கு ஆதரவாக ரஷ்யப் படைகள் களத்தில் நின்று அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றன. இப்போது சிரிய அரசுப் படைகள் மீது அமெரிக்கா போரை அறிவித்துள்ளது. ஏற்கனவே தாக்குதலையும் அது தொடுத்துவிட்டது. சிரிய இராணுவத் தளத்தை நேற்று அதிகாலையில் அமெரிக்க ஏவுகணைகள் தாக்கியுள்ளன.

சிரியாவின் வடமேற்கு நகரான இட்லிப்பில் கடந்த செவ்வாய்க் கிழமை நடத்தப்பட்ட தாக்குதலைக் காரணம் காட்டியே அமெரிக்கா இந்தப் போர்முழக்கத்தைச் செய்துள்ளது. அந்தத்தாக்குதலில் மனித குலத்துக்கு எதிரான, பேராபத்தை விளைவிக்கக்கூடிய வேதியல் ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன என்று மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

துருக்கி அரசு விடுத்த அறிவிப்பு மற்றும் இட்லிப் நகரத் தாக்குதலில் உயிர் தப்பியவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகள் என்பவற்றின் அடிப்படையில் வேதியல் குண்டுத் தாக்குதல் என உறுதிப்படுத்தப்படுகிறது. மனித குலத்துக்கு எதிரான ஆயுதங்களைச் சிரியா போரில் பயன்படுத்தியிருப்பது கடும் கண்டனத்துக்குரியது. அதேநேரத்தில் இந்தப் போரைத் தடுக்கத் தவறிய ஐக்கிய நாடுகள் சபையும் சிரியா மீது இப்போது போரை அறிவித்துள்ள அமெரிக்காவும்கூட கண்டனத்துக்குரியன. இந்தப் போரில் ஒட்டுமொத்த மனிதமும் தோற்றுக்கொண்டிருக்கிறது.

# படையினர் போர்க்குற்றம் புரியவில்லையானால் அது நிரூபிக்கப்பட்டாக வேண்டும்

சேரலாதன்

இறுதிப்போரின் போது போர்க் குற்றங்கள் புரிந்ததாகக் கூறப்படும் படையினரை விசாரித்தால் நாட்டில் மீண்டும் போர் ஆரம்பித்து விடுமெனஇலங்கையின்நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ச தெரிவித்திருக்கிறார். இதற்கு ஒருபடி மேலேபோய், போர்க் குற்றமே இடம்பெறாத நிலையில்கலப்புநீதிமன்றம்எதற்கு? என வினா எழுப்பியுள்ளது நல்லாட்சி அரசின் பங்காளிக் கட்சியாண்சிறிலங்காசுதந்திரக்கட்சி.

### ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரது இலங்கை தொடர்பான நிலைப்பாடு

போர்க்குற்றவிசாரணை தொடர்பாகத் தென்னிலங்கை அரசியல்வாதிகளின்நிலைப்பாட்டைமேற்குறித்த கருத்துவெளிப்பாடுகள்நன்றாகவேஎடுத்துக் காட்டுகின்றன. இறுதிப் போரின்போது படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள்மற்றும்மனித உரிமை மீறல்கள்தொடர்பாகஐ.நா.மனிதஉரிமைகள் ஆணையாளர் கடுமையான போக்கைக் கொண்டிருக்கின்றார். அவர் இறுதியாக மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்த தமது அறிக்கையில், பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடனான கலப்பு நீதிமன்றம் ஒன்றின்மூலமேபோர்க்குற்றங்கள் தொடர்பானவிசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்திருந்தார். ஆனால், ஆணையாளரின் கருத்துக்களைக் கருத்தில் எடுக்கின்றநிலையில் இலங்கை அரசு இல்லை. பாதிக்கப்பட்டவர்கள்தமிழர்கள் தானேஎன்றஅலட்சியப்போக்கு தென்னிலங்கை தரப்பினர்களிடையே காணப்படுகின்றது. இன ரீதியாகச் சிந்திக்கின்ற மனப்பான்மைபெரும்பான்மை இனத்தவரிடம்இருக்கும்வரையில்இனங்களுக்கிடையில்ஐக்கியத்தை எதிர்பார்க்க முடியாது. 2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில்போர் நிறைவுக்கு வந்துவிட்டது. ஆனால் தற்போது எட்டு ஆண்டுகள் கழியும் நிலையிலும், தமிழர்கள் இன்னமும் போரின் வடுக்களைச் சுமந்த வண்ணமே வாழ்ந்து வருகின்றனர். போரின்போது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு இன்னமும் நியாயம் கிட்டவில்லை. மகிந்த ராஜபக்ச அரசதலைவராகஇருந்தபோது அவரது தலைமையில் இயங்கிய படைகள் தான் போர்க் குற்றங்களில்ஈடுபட்டன.அப்பாவிப் பொதுமக்கள்பல்லாயிரக்கணக்கில்கொன்று குவிக்கப்பட்டனர். தமிழ்ப்பெண்கள்மானபங்கப்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். படையினரிடம்சரணடைந்தவர்களின் கதி என்னவென்பது இன்னமும் தெரியாத நிலையில் உள்ளது. இத்தனை விடயங்கள் இடம் பெற்றமைக்கான ஆதாரங்கள் உள்ளதாகக் கூறப்படும் நிலையிலும், அரசு எவரைக் காப்பாற்றுவதற்கு முனைகின்றது என்பது தெரியவில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்துக்களுக்கு மதிப்பு இல்லாது விட்டால் அந்தப் பதவி எதற்காகப் பேணப்பட்டு வருகின்றது? ஐ.நாவில் அங்கம் வகிக்கின்ற நாடுகள் அதை மதிக்காத நிலையில் அந்தச் சபையில் எதைத் தான் சாதிக்க முடியும்? வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றுவதும் கால அவகாசம் வழங்குவதும் தான் ஐ.நாவின் வேலையென்றால், பெரும் பொருள் செலவுடன் இந்தச் சபை இயங்க வேண்டியதன் தேவைதான் என்ன?



### போர்க்குற்றவிசாரணைகள் குறித்த மகிந்த தரப்பினரது நிலைப்பாடு

போர்க்குற்ற விசாரணைகள் இடம்பெறுவதை முன்னாள் அரசதலைவர் மகிந்தராஜபக்ச, கோத்தபாயபோன்றவர்கள்கடுமையாக எதிர்த்து வருகின்றனர். தற்போதைய அரசதலைவரும் எதிர்க்கின்றார். மகிந்த தரப்பினர் இதை எதிர்ப்பதில் காரணம் உள்ளது. போர் இடம் பெற்ற போது பதவியில் இருந்தவர்கள் இவர்கள் தான். போர்க் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு விட்டால், இவர்களும் குற்றவாளிக்கூண்டில் ஏற வேண்டிய நிலைஏற்பட்டுவிடும். ஆனால், முன்னாள் அரச தலைவர், தமிழ்மக்கள்கோரிக்கைவிடுக்காத தால் படையினரைத் தண்டிப்பதற்கு ஒருபோதுமே இடமளிக்கமாட்டோமென ஒரு புதுக் கதையைக் கூறியிருக்கிறார். போர்க் குற்றங்கள் மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்போது இந்த நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்ட படையினரைச் சட்டத்தின் முன்பாக நிறுத்தி அவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட மாட்டாது என சந்திரிகா அம்மையார் யாழ்ப்பாணத்தில் வைத்து உறுதியாகத் தெரிவித்திருக்கிறார். பெரும்பான்மையினத் தலைவர்கள் எங்கே நிற்கின்றார்கள் என்பதற்கு சந்திரிகாவின் கூற்றும் நல்லதொரு உதாரணமாகும்.

படையினர் இந்த நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்டதற்காக அவர்களைப் போற்றட்டும் அல்லது புகழ்ந்துகொள்ளட்டும். ஆனால், படையினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டாலும் அவர்களைத் தண்டிக்க விட மாட்டோமெனக் கூறுவதற்கு எவருக்குமே உரிமை கிடையாது.

காணாமற்போனவர்கள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டு வரும் சாட்சியங்களின் அடிப்படையில் பார்க்கும்போது, இதில் படையினருக்கு உள்ள தொடர்பு தெளிவாகத் தெரிகின்றது. சரணடைந்தவர்கள் விடயத்திலும்படையினரே பொறுப்புக் கூற வேண்டும். இதனால் விசாரணைகளுக்கு அவர்கள் முகம் கொடுத்தே ஆக வேண்டும். விசாரணையின்போது தான்அவர்கள்குற்றவாளிகளா, இல்லையா என்பது தெரிய வரும். குற்றம் புரியாதவர்கள் எந்த விசாரணைக்கும் அஞ்சத் தேவையில்லை.

### ஆளுக்கு ஆள் அறிக்கை விடுவதால் பயன் ஏதுமில்லை

ஆனால், இலங்கையின் அரச தலைவர்கள் நடந்து கொள்கின்ற விதத்தைப் பார்க்கும் போது எவருக்குமே சந்தேகம் எழத்தான் செய்யும். அவர்கள் போர்க்குற்ற விசாரணைகளைத்துணிவுடன்எதிர்கொண்டால் அவர்கள் மீதான சந்தேகமும் நீங்கிவிடும்.

இதை விடுத்து ஆளுக்கு ஆள் அறிக்கை வெளியிடுவதால் பயன்எதுவும்கிடைக்கப்போவதில்லை.

படையினரின்புனிதத்தன்மை நிரூபிக்கப்பட வேண்டுமானால், படையினர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டாக வேண்டும். அப்போது தான் இலங்கை மீதான அவப்பெயரும் நீங்க வாய்ப்பமையும்.



# படையினரது மேலோங்கித்தனத்தின் முன்னால் அதிகாரத்தைப் பயன்படுத்த இயலாத நிலையில் அரசு

தி.சோபிதன்

அரசு ஒருபோதும் படையினரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்போவதில்லை எனவும், பன்னாட்டு நீதிபதிகளை இறுதிப்போர்க் குற்ற விசாரணைகளில் ஈடுபடுத்தப்போவதில்லை எனவும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பகிரங்கமாகவே தெரிவித்து வருகின்றார். அத்துடன் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பல ஆண்டுகள் கழிந்தும் தமிழர் பகுதிகளை ஆக்கிரமித்திருக்கும் படையினரைக் குறைக்கவோ அகற்றவோ அவர் முயலவில்லை; அவரால் முடியவில்லை என்பதே உண்மை. தமது காணிகளைக் கையகப்படுத்தியுள்ளபடையினரைஅங்கிருந்து வெளியேறுமாறு மக்கள் போராட்டம் மேற்கொண்ட வேள்ளைகளில், அது விடயம்குறித்துத்தயக்கத்துடன்அரசதலைவர்செயற்பட்டமை,ஒருவிதத்தில்அவர் படையினரை எதிர்க்க இயலாத நிலையில்உள்ளார் எனநிலவும்சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியிருந்தது. அத்துடன் படையினருக்கு உடனடியாக ஒரு பணிப்பையோகட்டளையையோஇடும் நிலைமையைக்கூட அவருடைய ஆட்சியில் இதுவரை காணமுடியவில்லை.

### அமைச்சர்களுக்குக் கூட மதிப்பு வழங்காத படையினரது மேலோங்கித் தனம்

மற்றொருவகையில்படையினருக்குக் கட்டுப்பட்டே இலங்கை அரசு செயற்படுகின்றது என்பதை அண்மையில் நடந்த இன்னொரு சம்பவம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கையின் பெற்றோலிய வள அமைச்சர் சந்திம வீரக்கொடி யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் பகுதிக்கு வந்திருந்தார். தமது அந்தப் பயணத்தின்போது காங்கேசன்துறையில்அமைந்துள்ளகடற்படையின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருக்கின்ற அரசுக்குச் சொந்தமான வைத்தியசாலைக்காணியைப்பார்வையிடுவதற்காகச்சென்றிருந்தார்.

ஆனால் அமைச்சரை அந்தக் கடற்படை முகாமின் நுழைவாசலில் கடமைக்கு நின்ற கடற்படை வீரர் உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. முகாம் வாயிலில் அவர் தடுத்து நிறுத்தப்பட்டார். அமைச்சரின் வாகனத் தொடரணி முகாம் முன்பாக உள்ளே செல்ல அனுமதி வேண்டிக் காத்திருக்க நேர்ந்தது.

அமைச்சருக்குப் பாதுகாப்பாக வந்த பொலிஸ் அதிகாரி அவசரமாக இறங்கி கடற்படை முகாமை நோக்கி ஓடினார். அங்கு நின்ற கடற்படை அதிகாரிகளுடன் பேசினார். பின்னர் அமைச்சரிடம் வந்து ஏதோ கூறினார். மீண்டும் பொலிஸ் அதிகாரி, கடற்படை அதிகாரிகளுடன்உள்ளேசென்றுபேசினார். அதுவரை நேரமும் அமைச்சர் அந்தக் கடற்படை முகாமுக்குள் உள்ளே செல்ல முடியாமல் வெளியிலேயே காத்திருந்துள்ளார்.பாதுகாப்புப்படையினரதுஉயர் பாதுகாப்புவலயத்துக்குள்முன்அனுமதி இல்லாமல் வெளி யார் எவரும் உள்நுழைய முடியாது என்பது அனைவரும் அறிந்ததொன்றே.

அந்த அமைச்சர் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குள்செல்லவிருக்கிறார்என்றால், அதற்குரியநடைமுறைகளைமேற்கொண்டுவிட்டேவந்திருப்பார். அவ்விதஒழுங்கு மேற்கொள்ளப்பட்டிருந்தால், அமைச்சர் கடற்படைத்தளத்துக்கு வரவுள்ளார் என்ற அறிவிப்பும் அதற்கான உத்தியோகபூர்வ அனுமதியும் முற்கூட்டியே வழங்கப்பட்டிருந்திருக்கும்.அதுவேநடைமுறையும்கூட. ஆனாலும், குறித்த அமைச்சர் காத்திருக்க வைக்கப்பட்டுக் காலதாமதப்படுத்தியேஉள்ளேசெல்ல அனுமதிக்கப்பட்டார். அமைச்சர் பயணித்த வாகனத்தையும் சேர்த்து அனைத்து வாகனக்களும் பதிவு செய்யப்பட்டேஉள்ளேசெல்லஅனுமதிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் எரிபொருள் சேமிப்பு நிலையத்தை நிறுவப் பொருத்தமான காணியைத் தெரிவு செய்யும் நோக்குடனேயே அவர் அங்கு சென்றிருந்தார். அதன்படி காங்கேசன்துறை கடற்படை முகாம் பகுதிக்குள் இருக்கின்றஅரசவைத்தியசாலைகாணியை எரிபொருள்சேமிப்புநிலையத்துக்காகப் பயன்படுத்தயாழ். மாவட்டகடற்படைத் தளபதியுடன் கலந்தாலோசித்தார். ஆனால் கடற்படை தளபதியோ குறித்த காணி அரச காணியானாலும் சரி, தனியார் காணிஎன்றாலும்சரிஅதனைவிடுவிக்க முடியாது. நீங்கள் உங்களுக்குத் தேவைப்படும்காணியை வேறு எங்காவது தேடிக்கொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்.

> ”
>
> யாழ்ப்பாணமாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு முகாம்களுக்கும் எவ்வளவு நீர் பயன்படுத்தப்படுகின்றது என்றகேள்விஎழுகின்றது. பொதுவாகமுகாம்களில் படையினர் தமது தேவைகளுக்கு நீரை பயன்படுத்துவதுடன், மேலதிகமாகத் தங்களால்முகாம்களில்வளர்க்கப்படும் மரங்களுக்கும் பூங்கன்றுகளுக்கும் நீரைத்தாராளமாகப் பயன்படுத்திவருகின்றனர்.

### காங்கேசன்துறை கடற்படை முகாமினது நிலை


இந்தச் சம்பவம், இலங்கை அரசு, பாதுகாப்பு படையினரின் சொல்லுக்கு கட்டுப்பட்டே செயற்படுகின்றது என்பதை வெட்டவெளிச்சமாகக்காட்டி நிற்கின்றது. காங்கேசன்துறை கடற்படை தலைமையகத்துக்குள் பல கட்டங்கள் இருக்கின்றன. அவை பொதுமக்களின் கட்டடங்களா?அல்லது கடற்படை தாங்களாக புதிதாக அமைத்தனரா என்பது தெரியவில்லை. ஆனால் மிகப்பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கியே காங்கேசன்துறை கடற்படையின் முகாம் அமைந்துள்ளது.படை முகாமின் சுற்றுப் பகுதிகள் அனைத்தும் இரண்டடுக்குமுள்ளுக்கம்பிகளால்பாதுகாப்புக்காகச் சுற்றி அடைக்கப்பட்டுள்ளன.

முகாமுக்குள் சிமெந்தினால் கட்டப்பட்ட நீளமானகுழாய்கள்பல உடைந்துவீழ்ந்து கிடப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. அங்குள்ள கடற்படையினரது நீர்த் தேவைக்கெனப்பெரியநீளமானமூடப்பட்டசிமெந்துக்கட்டடம்ஒன்றும்காணப்படுகின்றது. அந்த கட்டம் பெரும்பாலும் பெரியஅளவில்தோண்டப்பட்டகிணறாகக் கூட இருக்கலாம். அல்லது பெருமளவிலான நீரைச் சேமித்து வைக்கக்கூடிய தொட்டியாகவும் இருக்கலாம்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்திருந்த முன்னாள் அரச தலைவர் சந்திரிக்கா குமாரதுங்கா விடம் சுழிபுரம் சம்பில்துறையில் உள்ள கடற்படை முகாமுக்குபொன்னாலையில்இருந்து தினமும் 40 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 50 ஆயிரம் லீற்றர் வரையான தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகின்றது. அதைநிறுத்துவதற்குநடவடிக்கைஎடுக்கவேண்டும் என் பொன்னாலை கிராம அபிவிருத்திச்சங்கம் கோரிக்கைவிடுத்திருந்தது. அவர்களின் கோரிக்கை நியாயமானகோரிக்கையாகவேஇருக்கக்கூடும். ஒரு கடற்படை முகாமுக்குத் தேவைப்படுகின்ற நீருக்காக 50 ஆயிரம் லீட்டர் தண்ணீரைத் தினமும் எடுத்துச் செல்கின்றனர் என்றால், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு முகாம்களுக்கும் எவ்வளவு நீர் பயன்படுத்தப்படுகின்றது என்ற கேள்வி எழுகின்றது. பொதுவாகமுகாம்களில்படையினர் தமது தேவைகளுக்கு நீரைப் பயன்படுத்துவதுடன் மேலதிகமாகத் தங்களால் முகாம்க ளில் வளர்க்கப்படும்மரங்களுக்கும்பூங்கன்றுகளுக்கும் நீரைத் தாராளமாகப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வாறு வடக்கில் அதிகளவான படையினரை வைத்திருப்பதால் எமதுமக்களின்காணிப்பிரச்சினைகள் மட்டுமல்லாது, அவர்களது வளங்களும் சூறையா டப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

வடக்கில் இவ்வளவு பெரிய அளவில் படையினரைவைத்துக்கொண்டு, அந்தப் பிரதேசங்களில் அபிவிருத்திகள் நடக்கும், காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று கூறுவதும், மறுபுறத்தில் இப்படி அரச காணியாயினும் அரசின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு அதனைவழங்கமாட்டோம்எனக்கடற்படையினர்இறுமாப்புடன் தெரிவிப்பதும் ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்றன. ஒருவகையில்இதுபடையினரது அனுமதிபெற்றுத்தான்இலங்கைஅரசுதனது நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் எனும்நிலையன்றி வேறேன்ன?

---



## வாசகர் திருமுகம்

### போதைப் பொருள் கடத்துகின்ற சூத்திரதாரிகள் இனம்காணப்பட வேண்டும்

யாழ். குடாநாட்டுக்குள் கஞ்சா மற்றும் ஏனைய போதைப் பொருள்களைக் கடத்தி வருவதன் பின்னணியில் உள்ளவர்களைக் கண்டறிய வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்ததாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

அண்மைக் காலமாக குடாநாட்டுக்குள் போதைப்பொருள்கள் கடத்தி வரப்படுகின்ற சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந்தியாவிலிருந்தே இவை கடத்தி வரப்படுவதாகவும் கூறப்படுகின்றது. இந்தப் போதைப்பொருள்களைக் கடத்துகின்ற வர்த்தகத்தில் பொதுவாக சாமானியர்கள் ஈடுபட முடியாது . ஏனென்றால் பிடிபடும் போதைப்பொருள்களின் பெறுமதி பல கோடி ரூபாய்களாகக் கணிக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் , பணபலம் , ஆள்பலம் படைத்த, சக்தி வாய்ந்த பெரும் புள்ளிகளே இந்த வர்த்தகத்தில் ஈடுபட்டுவருகின்றமை நிரூபணமாகின்றது. ஆனால் போதைப்பொருள்களைக் கடத்தியதாகக் குற்றம்சாட்டி சாதாரண மீனவர்களும், வேறு சாதாரண ஆள்களுமே கைது செய்யப்படுகின்றனர்.

கஞ்சா எனும் போதைப்பொருள் பெரும்பாலும் இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்தே கடத்தி வரப்படுவதாகக் கூறப்படுகின்றது. கேரளக் கஞ்சா எனவும் இது அழைக்கப்படுகின்றது. கேரள மாநில அரசு கஞ்சா வர்த்தகத்தை ஊக்குவிக்கின்றதா என்பது தொடர்பாகவும், அது இலங்கைக்குள் கடத்திவரப்படுவதைத் தடுப்பது தொடர்பாக்வும் இலங்கை அரசு இந்திய நடுவண் அரசுடன் ஒரு தடவையாவது பேச்சு மேற்கொள்ளாதிருப்பதன் மர்மம்தான் என்ன?

போதைப் பொருள்களால் பாதிக்கப்படுவது இந்த நாட்டுச் சாதாரண பொது மக்கள்தான் என்ற உணர்வுகூட அரசிடம் காணப்படவில்லை.

வெறுமனே போதைப்பொருள்களை அங்கே கைப்பற்றினோம்; கடத்தியோரை இங்கு வைத்துக் கைது செய்தோம் எனக் கூறிக்கொண்டிருப்பதை விடுத்து கடத்தலோடு தொடர்புடைய முக்கிய சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு உரிய தண்டனை வழாங்கப்பட வேண்டும்.

*க. உமாபதி*
*யாழ்ப்பாணம்*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




**மேடம்:** குடும்பப் பிரச்சினைக்குச் சுமூகத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சீராக இருக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் ஆதரவுடன் முன்னேறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.


**இடபம்:** புதிய முயற்சியில் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.


**மிதுனம்:** பேச்சில் தன்னம்பிக்கை மிகுந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் தாராள லாபம் கிடைக்கும். குடும்பத்தினரின் ஒத்துழைப்புச் சிறப்பாக அமையும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும்.


**கடகம்:** மனதில் குழப்பம் உருவாகி விலகும். நல்லவர்களின் அறிமுகமும், உதவியும் கிடைக்கும். தொழில் வளர்ச்சி பெறக் கடினமாக உழைப்பீர்கள். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.


**சிங்கம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள், கணவரின் அன்பைப் பெறுவர்.


**கன்னி:** மனதில் நல்லெண்ணம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் திருப்தியளிக்கும். உடல்நலனில் அக்கறை காட்டுவீர்கள். பெண்கள் ஆபரணம் வாங்குவர்.


**துலாம்:** வாழ்வில் முன்னேற்றம் பெறப் புதிய வழி பிறக்கும். தொழில், வியாபாரத்தில் சாதனை படைப்பீர்கள். லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.


**விருச்சிகம்:** முக்கியப் பணி நிறைவேறுவதில் கூடுதல் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும்.


**தனுசு:** யாருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி கொடுக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.


**மகரம்:** சுயநல நோக்கத்துடன் சிலர் உங்களிடம் பழகுவர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.


**கும்பம்:** நேர்மை மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். லாபம் மிதமாக இருக்கும். உறவினர் வகையில் திடீர் செலவு செய்ய நேரிடலாம்.


**மீனம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கடன் பணம் வசூலாகும். நண்பரால் உதவி உண்டு.

சோஹரையர் ரோயின்

அடுத்த பெண்களின்
வாழ்க்கை அலசல் ஆர்வத்தில்...
உங்கள் வீட்டில் உள்ள
பெண்கள் தரத்தை
தாரை வார்த்து விடாதீர்கள்

3 33 51








# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| | | 4 | | 6 | | 8 | | |
| 3 | 9 | | 8 | 7 | 4 | | 1 | |
| 8 | | | 2 | | 6 | | | 3 |
| 1 | | | | | | | | 2 |
| | | 3 | | | | 4 | | |
| 9 | | | 4 | 3 | 8 | | | 7 |
| | 3 | | 7 | 9 | 5 | | 6 | |
| | | 7 | 6 | | | 3 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 9 | 5 | 7 | 2 | 6 | 1 |
| 1 | 9 | 7 | 8 | 2 | 6 | 3 | 4 | 5 |
| 2 | 5 | 6 | 1 | 3 | 4 | 9 | 7 | 8 |
| 9 | 1 | 2 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 6 | 8 | 3 |
| 6 | 8 | 3 | 7 | 4 | 5 | 1 | 2 | 9 |
| 5 | 2 | 9 | 4 | 7 | 1 | 8 | 3 | 6 |
| 3 | 4 | 1 | 5 | 6 | 8 | 7 | 9 | 2 |
| 7 | 6 | 8 | 3 | 9 | 2 | 5 | 1 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# ரசிகர்களை சந்திக்கிறார் ரஜினி

எட்டு வருடங்களுக்குப் பின்னர் தனது ரசிகர்களை மொத்தமாகச் சந்திக்கிறார் சூப்பர் ஸ்ரார் ரஜினிகாந்த். அதுவும் ஒரு நாள் இரு நாள் சந்திப்பல்ல. 5 நாள்கள்! ஏப்ரல் 11 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை தனது ரசிகர்களுக்கு ஒதுக்கியுள்ளார் ரஜினி. இந்த முடிவுக்கு அவர் திடீரென வரவில்லை. இலங்கைப் பயண ரத்துக்குப் பின்னர் இந்த முடிவு எடுக்கப்படவில்லை. கிட்டத்தட்ட 2 வருடங்களாகத் தங்களைச் சந்திக்க வேண்டும் என்று ரஜினிக்கும் ரஜினி ரசிகர் தலைமை மன்றத்துக்கும் ரசிகர்கள் கோரிக்கைகள் அனுப்பி வந்தனர். சில மாதங்களுக்கு முன்னர் திரளாகக் கூடிய ரசிகர் மன்றத்தினர், தங்களை சந்திப்பதைத் தலைவர் ஏன் நீண்ட காலமாகத் தள்ளிப்போடுகிறார் என்று கேள்வி எழுப்பி, துண்டு பிரசுரங்கள் விநியோகித்தனர். இந்தச் சூழலில் தான், ரசிகர்களுடனான சந்திப்பை எப்படி நடத்துவது என்று யோசித்து, முதலில் நிர்வாகிகளை அழைத்துப் பேசத் திட்டமிட்டுள்ளனர்.

சீனாக்காரன் மணிக்கு 600 கி.மீ. வேகத்தில் செல்லக் கூடிய ரயிலுக்காக காத்திருக்கான்.

ஜப்பான் காரர் 7ஜிக்கு மாற முயற்சி செய்றான்

ஆனால் நம்மில் சிலர் சிவனையும் வேளாங்கண்ணி மாதாவையும் 25 பேருக்கு ஷேர் செஞ்சிட்டு பிரீ பாலன்ஸ் கிடைக்கும் னு காத்திருக்கான்.




ஷேர் செய்யாமால் இருந்தால் கெட்டது நடக்கும் னு பய முறுத்துறான்.




## ராசிகளுக்கான சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

### மிதுனம்

புத்திக் கூர்மையுடன் பணியாற்றும் மிதுன ராசி அன்பர்களே பணமழை பொழியும்! பொன், பொருள் சேரும் ஆண்டின் தொடக்கத்தில் 4ஆம் இடமான கன்னி ராசியில் உள்ள குரு, செப்.1இல் துலாம் ராசிக்கு மாறுகிறார். அதன் பின்னர் அடுத்த பெப்.13இல் விருச்சிக ராசிக்கு மாறுகிறார். ராசிக்கு 3இல் உள்ள ராகு ஜூலை 26இல் 2ஆம் இடமான கடகத்துக்கு மாறுகிறார். கேது 9ஆம் இடமான கும்பத்தில் இருந்து ஜூலை 26இல் 8ஆம் இடத்துக்குச் செல்கிறார். ராசிக்கு 6ஆம் இடமான விருச்சிகத்தில் உள்ள சனிபகவான் டிசெ. 18இல் தனுசு ராசிக்கு மாறுகிறார். இந்த கிரகங்களின் அடிப்படையில் பலனைக் காணலாம்.

குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. கணவன், மனைவி இடையே அன்பு நிலைக்கும். சுப விடயத்தில் விடாமுயற்சி தேவைப்படும். சமூகத்தில் மதிப்பு சுமாராக இருக்கும். உறவினர்கள் வகையில் கருத்துவேறுபாடு உருவாகலாம். சனிபகவானின் 10ஆம் இடப்பார்வையால் மழை போல பணப்புழக்கம் அதிகரிக்கும். பொன், பொருள் சேரும். பணியாளர்கள் வேலைப்பளுவைச் சந்திப்பர். அதிகாரிகளிடம் அனுசரித்துப் போவது நல்லது. முக்கிய பொறுப்பை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். கலைஞர்கள் தீவிர முயற்சியால் புதிய ஒப்பந்தம் பெறுவர். அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் நற்பெயர் கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கூடுதல் கவனம் தேவை. பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர்.

குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும். திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் விமரிசையாக நடந்தேறும். அதிர்ஷ்டவசமாக பொருளாதார வளம் பெருகும். பெண்களால் நன்மை உண்டாகும். புதுமணத் தம்பதிக்கு குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். விரும்பிய பணி, இடமாற்றம் கிடைக்க வாய்ப்புண்டு. அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பெருகும். பங்குதாரர்களின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தம் கிடைக்கும். சக பெண் கலைஞர்களின் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பர். போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறுவர். கால்நடை வளர்ப்பிலும் ஓரளவு ஆதாயம் வரும். வழக்கு, விவகாரத்தில் பொறுமையாக இருப்பது நல்லது. பெண்கள் குடும்பத்தாரிடம் விட்டு கொடுத்துப் போவது நல்லது. வேலைக்குச் செல்லும் பெண்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். உஷ்ணம், தோல், தொடர்பான நோய் ஏற்படலாம். அடுத்த ஆண்டு பெப்ரவரி1 – ஏப்ரல்13 வரை குடும்ப பிரச்சினை ஏற்பட வாய்ப்புண்டு. திருமணம் போன்ற சுப விடயத்தில் தடை குறுக்கிடலாம். பயணத்தின் போது விழிப்புடன் இருப்பது நல்லது. தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு விரும்பாத இடமாற்றம் ஏற்படலாம். கலைஞர்கள் விடாமுயற்சியால் புதிய ஒப்பந்தம் பெறுவர். அரசியல்வாதிகள் சீரான முன்னேற்றம் காண்பர். மாணவர்கள் ஆசிரியரின் வழிகாட்டுதலை ஏற்பது நல்லது. விவசாயிகள் உழைப்புக்கு ஏற்ற பலனடைவர்.வழக்கு, விவகாரம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்பத்தாரின் நன்மதிப்பை பெறுவர்.

**பரிகாரம்:** சனிக்கிழமை நவக்கிரக வழிபாடு. ராகு காலத்தில் துர்க்கைக்கு விளக்கு. செல்ல வேண்டிய கோவில் திருநாகேஸ்வரம் நாகநாதசுவாமி.

## பெண்களின் திறமையை தடுக்கும் பயமும்.. கூச்சமும்..



பெண்கள் தங்களிடம் புதைந்திருக்கும் திறமை களை வெளிப்படுத்துவ தற்கு பயமும், கூச்ச சுபாவ மும் முட்டுக்கட்டையாக அமைந்திருக்கும். தன்னை பற்றிய சுய மதிப்பீடு உயர்வானதாக இருக்க வேண்டும்.

மனிதர்களிடம் மறைந்திருக்கும் எல்லா திறமைகளையும் ஒருமுகப்படுத்தி உடலையும், மனதையும் வலுப்படுத்தும் அபார சக்தி கொண்டது தன்னம்பிக்கை. எந்தவொரு செயலை செய்வதாக இருந்தாலும் முதலில் உங்கள் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். தாழ்வு மனப்பான்மை எட்டிப்பார்ப்பதற்கு ஒரு போதும் இடம் கொடுத்துவிடக்கூடாது. நீங்கள் எந்தவொரு காரியத்தையும் துடிப்புடனும், ஆர்வத்துடனும் செய்யக் கூடியவர் என்ற எண்ணத்தை உங்களுடைய தோற்றம் வெளிப்படுத்த வேண்டும். உங்களை சாதிக்க தூண்ட வைக்கும் முதல் மூலதனம் தன்னம்பிக்கை தான். எத்தகைய தடைகளையும், சிக்கல்களையும் தகர்த்தெறிய வைக்கும் வலிமை அதற்கு உண்டு.

மற்றவர்களோடு ஒப்பிடும்போது குறைவான தகுதியும், திறமையும் கொண்டவர்கள் கூட எடுத்த காரியங்களை கச்சிதமாக முடித்திருப்பார்கள். அதற்கு அவர்களுடைய முயற்சியும், தைரியமான செயற்பாடுமே காரணமாக அமையும். நம்பிக்கையும், தைரியமுமே ஒருவருடைய வெற்றிக்கு தூண்டுகோலாய் இருக்கும்.

ஒருசிலரிடம் எல்லா திறமைகளும் இருக்கும். ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தங்களை தாங்களே தாழ்த்திக்கொண்டிருப்பார்கள். தாழ்வு மனப்பான்மை அவர்களிடம் குடிகொண்டி ருக்கும். அதில் இருந்து மீளமுடியாமல் தவிப்பார்கள். அதுபற்றி அவர்களிடம் கேட்டால், 'அவரை போல் எனக்கு தைரியம் கிடையாது', 'என்னால் அதை செய்து முடிக்கமுடியுமா? என்பது சந்தேகம்தான்', 'என் மீதே எனக்கு நம்பிக்கை கிடையாது.

நான் ஏதாவது தவறாக செய்துவிட்டால் மற்றவர்கள் என்னை ஏளனமாக நினைப்பார்களோ என்ற பயம் காரணமாக முயற்சி செய்யாமலேயே விட்டு விட்டேன்', 'எனக்கு எல்லாம் தெரியும் என்று களம் இறங்கினால் மற்றவர்கள் என்னை திமிர் பிடித்தவன் என்று நினைத்துவிடு வார்களோ என்ற கவலை இருக்கிறது, 'எனக்கான நேரமும், காலமும் கூடிவரவில்லை என்று ஒதுங்கி இருக்கிறேன்', 'நல்ல சந்தர்ப்பத்திற்காக காத்திருக்கிறேன்' என்று ஏதாவதொரு காரணத்தை சொல்லி அவர்கள் முன்னேற்றத்திற்கு தடைபோட்டுக் கொள்வார்கள்.

தன்னுடைய தகுதியைத் தானே குறைவாக மதிப்பிடுவது தாழ்வு மனப்பான்மையையும், அறியாமையையும்தான் உண்டாக்கும்.

பெண்கள் தங்களிடம் புதைந்திருக்கும் திறமைகளை வெளிப்படுத்துவதற்கு பயமும், கூச்ச சுபாவமும் முட்டுக்கட்டையாக அமைந்திருக்கும். தன்னை பற்றிய சுய மதிப்பீடு உயர்வானதாக இருக்க வேண்டும். தாழ்வு மனப்பான்மைக்கு இடம் கொடுக்காமல் உயர்வான எண்ணங்களையும், சிந்தனைகளையும் உள்ளத்தில் பதிய வைக்க வேண்டும். தங்களிடம் இருக்கும் திறமைகளில் பாதியை கூட பலர் தாழ்வு மனப்பான்மையால் வெளிப்படுத்தாமலே இருந்து விடுகிறார்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்

### 08.04.2017

1943-நாஸிக்கெதிரான நடவடிக்கைக்காக பேர்லினில் ஓற்றோ மற்றும் எலிஸ் ஹம்பெல் தம்பதியர்களுக்கு சாவுத் தண்டனை நிறை வேற்றப்பட்டது

1950 -இந்தியாவும் பாகிஸ்தானும் லியாகுத் நேரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன

1961 -பேர்சியன் குடாவில் லிப டாறா பயணிகள் கப்பலில் ஏற்பட்ட பெரிய வெடிவிபத்தில் 238 பேர் உயிரிழந்தனர்.

1970 -பஹர் எல் பஹர் தொடக்கப்பள்ளி குண்டுவீச்சு, எகிப்திய பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் குண்டு வீசியதில் 46 பிள்ளைகள் உயிரிழந்தனர்

1993-மெஸடோனியா குடியரசு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தில் இணைந்தது

1993 -கிளாலிப் பகுதியில் தாக்குதல் 2 பயணிகள் சாவு 6 பேர் காயம்

1993-அவசரகால விதிகள் சில நள்ளிரவு முதல் நீக்கம் அரசதலைவர் செயலகம் அறிவிப்பு

1993 - 52 படையினருடன் அவ்ரோ பலாலி வந்தபோது மயிரிழையில் தப்பியதாகச் செய்திகள் தெரிவிப்பு

1993 -அரசதலைவர் பிரேமா 7 ஆவது சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள டாக்கா பயணம்

1993 -மாகாணசபைத் தேர்தல்கள் மே 17 இல் நடைபெறுமென அறிவிப்பு

1993 -பூநகரிப் பாதை விவகாரம் ஐ.நா.தூதராலய யோசனை அரசால் ஏற்பு

1995 -யாழ்றோட்டரிக் கழகத்தின் 55 ஆவது ஆண்டு நிறைவு பி.எச்.எப் .ஈ.சரவண பவன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

### நாளை

**பங்குனி-27**
ஞாயிற்றுக்கிழமை -09.04.2017
திதி: திரயோதசி மு.ப.10.19
நட்சத்திரம்: உத்தரம் பி.இ.02.19
சுபநேரம்:09.07-10.37 வரை
ராகுகாலம்:04.37-06.07 வரை
பங்குனி உத்தரம்




பெண்களுக்கான பஞ்சாபி வகைகளில் கோட் வைத்து பஞ்சாபிகள் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை முற்றிலும் வித்தியாசமானமான வடிவத்தில் அமைந்துள்ளது. இவை 5 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. இவ்வகையான பஞ்சாபிகளை ஒன்லைன் மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# கேள்விக்கான கோருதல்
# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்
# மீள்குடியேற்ற அமைச்சுக்காக

1. தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, சார்பில் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணத்திற்காக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான இப்போது தகவுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட கேள்விகளைக் கோருகின்றார்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA/ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும். அத்துடன் 30.09.2016ஆம் திகதிய பொது நிதி சுற்றறிக்கை இல: 04/2016(i) இன் பிரகாரம் கேள்வியாளர்களினது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை பதிவு மற்றும் வியாபார அல்லது நிறுவனப் பதிவு வடமாகாணத்திற்கு உட்பட்டதாகவிருத்தல் வேண்டுமென இக்கேள்விகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV (Section IV) இலும், மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) / கேள்வி தரவுகள் மற்றும் ஒப்பந்த தரவுகள் இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது..
5. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய கேள்வியாளர்கள் கீழ்வரும் விலாசத்தில் மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் 9.00 மணியிலிருந்து 15.00 மணிவரை அலுவலக நாள்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்யலாம்.

மீள்குடியேற்ற பிரிவு,
மாவட்ட செயலகம்
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021-2212631 / 021-2224029

6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 11.04.2017 முதல் 02.05.2017 வரை 9.00 மணியிலிருந்து 15.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையினை கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு கட்டணமாகச் (பணமாகச்) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் 03.05.2017 ஆம் திகதியன்று 11.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட செயலக பெறுகைக்குழு, மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைக்குமான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி கோரல் முடிவுற்ற உடனேயே கேள்விகள் திறக்கப்படும்.
8. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 24.04.2017 அன்று 10.00 மணிக்கு நடைபெறும்.
9. கேள்வி விலைமனுவின் இறுதிநாளிலிருந்து அட்டவணையில் குறிப்பிடப்பட்ட நாள்கள் வரை செல்லுபடியுடையதாக இருத்தல் வேண்டும்.
10. சகல கேள்விகளுக்கும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியே பகுப்பாய்வு செய்யப்பட்டு ஏற்புத்தன்மையுடைய குறைந்த பகுப்பாய்வு செய்யப்பட்ட கேள்வியுடைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படுவார்.

| கேள்வி அடையாள இல | வேலை விவரம் | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | கேள்வி செல்லுபடியாகும் காலம் (நாள்கள்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்விப் பிணை விவரம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | தொகை | தேவைப் படும் காலம். |
| DS/JF/RESETTLE/2017-01 | யா/மாதகல் நுணசை மகா வித்தியாலயத்தில் 70 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 8.13 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 85,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-02 | யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தில் 70 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 8.53 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 90,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-03 | யா/சங்கானை சிவப்பிரகாசா ஆரம்ப பாடசாலையில் 50 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.22 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 65,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-04 | யா/தையிட்டி கணேசா வித்தியாலயத்தில் 50 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.22 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 65,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-05 | யா/தையிட்டி சிவகுருநாதர் வித்தியாலயத்தில் 50 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.22 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 65,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-06 | யா/ஒட்டகபுலம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 50 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.22 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 65,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-07 | யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 50 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.08 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 64,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-08 | யா/தனங்கிளப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 50 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.14 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 64,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-09 | யா/கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் 90 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 11.65 | 77 | 150 நாள்கள் | C6 அல்லது C5 (கட்டடங்கள்) | 122,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-10 | யா/கரம்பன் மேற்கு சண்முகானந்தா மகா வித்தியாலயத்தில் வகுப்பறைக் கட்டடம் மற்றும் மண்டபம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.27 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 66,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-11 | யா/வேலணை மத்திய கல்லூரியில் விடுதி புனரமைத்தல் | 2,500.00 | 8.48 | 77 | 120 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 89,000.00 | 16.08.2017 வரை |
| DS/JF/RESETTLE/2017-12 | யா/காங்கேசன்துறை நடேஸ்வரா கல்லூரியில் 50 x 25 x 2 வகுப்பறைக் கட்டடம் நிர்மாணித்தல் | 2,500.00 | 6.22 | 77 | 150 நாள்கள் | C7 (கட்டடங்கள்) | 65,000.00 | 16.08.2017 வரை |

நா.வேதநாயகன்
மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர்
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்,

## (4ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாமும் துன்பப்பட்டோம். தற்போது உங்களோடு இணைந்து செயற்படகிடைத்தமையையிட்டு நான் மகிழ்வடைகின்றேன் - என்றார்.

ஊறணி, மயிலிட்டித்துறை கடற்கரைப் பக்கமாக உள்ள காணிகளை மக்கள் நேற்றுச் சந்தோசத்துடன் பார்வையிட்டனர்.

மயிலிட்டித்துறைப் பகுதியில் காணி விடுவிக்கப்பட்டபோதும் மக்களின் வீடுகள் உடைக்கப்பட்டுள்ளதுடன் சில வீடுகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்படவில்லை.

முட்கம்பி வேலிகள், முகாம்கள் தற்போது அகற்றப்பட்டு வருவதோடு புதிய தடுப்பு வேலிகளை அமைக்கும் பணியிலும் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

ஊறணிப் பிரதேசம் கடந்த வருட இறுதியில் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டபோதும் அங்குள்ள மயானப் பகுதி மட்டுமே விடுவிக்கப்பட்டது. மயானப் பகுதிக் கடற்கரையில் இறங்குதுறை ஒன்றை அமைத்து அது தான் ஊறணி இறங்குதுறை என்றுகூறி மீனவர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது. ஆயினும் உண்மையான ஊறணித் துறைமுகம் நேற்றே விடுவிக்கப்பட்டது.

"நல்லிணக்கபுர மக்களுக்கு அமைத்துக் கொடுத்தது போன்று எமக்கும் படகுத் துறையும் அமைத்துத் தரப்படவேண்டும். நாமே பூர்வீகக் கடற்றொழில் புரிபவர்கள். எமது வாழ்வாதாரம் கடல் மட்டுமே. நாங்கள் 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்துபோகும் போது ஒவ்வொருவரும் பல லட்சம் ரூபா பெறுமதியுடைய படகுகள் மற்றும் கடற்றொழில்உபகரணங்களைக் கைவிட்டே சென்றோம். அவற்றைப் பெறுவதற்கான பணத்தையும் அரசு தர வேண்டும். இடித்தழிக்கப்பட்ட எமது கல் வீடுகளுக்குப் பதிலாக புது வீடுகள் கட்டித் தரப்பட வேண்டும். விடுவிக்கப்படாதுள்ள ஊறணி எமிலியானுஸ் இடைநிலை வித்தியாலயம் மற்றும் ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தின் எஞ்சிய இடங்கள் என்பவற்றையும் விரைவாக விடுவிக்க வேண்டும். நாம் சாதாரண வாழ்க்கையைத் தொடங்க அரசு உதவ வேண்டும்" என்று நேற்று விடுவிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்ற மக்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

(த-4-101- 555)

## தேவை

கச்சேரியை அண்மித்த பகுதியில் இயங்கி வரும் உணவகம் ஒன்றுக்கு கொத்து தயாரிப்பவர்.பிறைற் றைஸ் தயாரிப்பவர்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப் படும். தொடர்புகளுக்கு. 0778469173

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

07.04.2017 | 2118 | சிவப்பு

07 21 50 55

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2, 000, 000/=

2017.04.09 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்.



## புங்கன்குளம் வில்வையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

08.04.2017 எண்ணெய்க்காப்பு சாற்றுதல் காலை 8.15 மணிமுதல் மாலை 6.00 மணிவரை அடியார்கள் யாவரும் எண்ணெக்காப்பு சாற்றலாம்.

09.04.2017 மகா கும்பாபிஷேகப் பெருவிழா காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

ஆலய அறங்காவலர்.

## மணவாளக் கோலத்திருவிழா 2017

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய மணவாளக்கோலத்திருவிழா நாளை (09.04.2017) ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாடுகளுடன் கிரியைகள் ஆரம்பித்து அம்பாளுக்கு 1008 சங்காபிடேகமும் .பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிடேகமும் பூசைகளும் இடம் பெற்று அம்பாள் உள் வீதி.வெளி வீதி .உலாவந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.

பரிபாலனசபை
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம், கொக்குவில்

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினர். **திருமதி த . சிவபாக்கியநளினி** அவர்களின் பாசமிகு தாயார்.


**திருமதி செல்வராணி யோகர்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு .அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம், சாவகச்சேரி பிரதேச சபை.**

## மரண அறிவித்தல்

### வினாசித்தம்பி பரமேஸ்வரன்



கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி பரமேஸ்வரன் (07.04.2017) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - இரத்தினம்மா தம்பதியரின் கனிஸ்ர புத்திரனும் காலஞ்சென்றவர்களான முத்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவமலரின் அன்புக்கணவரும் சிவகுமார் (இலங்கை மின்சாரசபை- சாவகச்சேரி), பமீலா (ஆசிரியர் -யா/வயாவிளான் மத்திய கல்லூரி), வரதராஜன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் நெடுந்தீவு, பிரதேச செயலகம்), சுஜிவன் (நில அளவையாளர், ஓமான் ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 921 6782, 077 911 7939

## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

தவிசாளர், பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளரால் யாழ் மாவட்டத்திற்கு உட்பட்ட குளங்கள் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தகாரரை தெரிவு செய்தல் - 2017 எனும் செயற்பாட்டிற்காக தகமையுடையோரிடமிருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

விலைக் கேள்வி அறிவித்தல் - நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள்

1. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
2. தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
3. பொதுநிதிச் சுற்றறிக்கை 4/2016 ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது வடமாகாணத்திற்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 11.04.2017 திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரை விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசோதனை செய்ய முடியும் என்பதுடன் மேலதிக மாவட்டச் செயலாளர்(காணி), மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: 021 221 2631, 021 222 4029) அவர்களிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.
5. விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றினை மீள்குடியேற்ற அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றினைச் சமர்ப்பித்து 11.04.2017 ம் திகதி முதல் 04.05.2017 ம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து மாலை 3.00 மணிவரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாக்ச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.
6. பூர்த்திசெய்யப்பட்டு பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் "தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு **05.05.2017** ம் திகதியன்று பி.ப **3.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிடல் வேண்டும்.
7. காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறும் விலைக்கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் தபாலுறையின் இடதுமேல் மூலையில் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும், பிரதி தனியாகவும் இரு உறைகளில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
8. விலைக்கேள்விகள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 05.05.2017 ந் திகதி பி.ப. 3.00 மணிக்கு நேரடியாக வருகை தரும் கேள்வியாளர்கள் அல்லது கேள்வியாளரால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வி கோரப்பட்ட விடயம் தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் 24.04.2017 அன்று மு.ப 10.30 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும், நிராகரிப்பதும், பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கமைவானதாகும்.

| இல | வேலை விபரம் | அமுலாக்கும் திணைக் களம் | மதிப்பீட்டுத் தொகை (VAT நீங்கலாக) மில்லியன்) | தேவையான தராதரம் (CIDA) | கேள்வி பிணை விபரம் | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| 1 | நெடுந்தீவு நெலுவினி குளம் புனரமைப்பு | கமநல அபிவிருத்தி திணைக்களம் | 2.92 | C8 | 29,290.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 2 | உடுவில பெரியதம்பிரான் குளம் மற்றும் கால்வாய் புனரமைப்பு | | 3.8 | C8 | 38,050.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 3 | தெல்லிப்பளை தையிட்டி குளம் புனரமைப்பு | | 3.73 | C8 | 37,375.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 4 | தெல்லிப்பளை கும்பாலைக் குளம் புனரமைப்பு | | 2.46 | C8 | 24,700.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 5 | கோப்பாய் ஊரலைக் குளம் மற்றும் சாவகச்சேரி தச்சன்தோப்புக்குளம் புனரமைப்பு | | 5.9 | C8 | 59,065.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 6 | கரவெட்டி கிராய் குளம் புனரமைப்பு | | 3.12 | C8 | 31,220.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 7 | கரவெட்டி விராச்சி குளம் மற்றும் கால்வாய் புனரமைப்பு | | 3.69 | C8 | 36,950.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 8 | மருதங்கேணி வண்ணான் குளம் மற்றும் பூலன் தோப்பு குளம் புனரமைப்பு | | 4.92 | C8 | 49,200.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 1 | ஊர்காவற்துறை காளிக்குளம் புனரமைப்பு | நீர்ப்பாசனத் திணைக்களம் | 5.13 | C7 | 49,800.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 2 | சாவகச்சேரி முள்ளி ,நாவற்காடு , கரம்பைக்குறிச்சி , குடம்பியன் மற்றும் மிருசுவில் வடக்கு வெள்ளத்தடுப்பணை புனரமைப்பு | | 0.43 | C9 | 4,300.00 | 06.08.2017 | 30 நாட்கள் |
| 3 | காரைநகர் சிவன் கோவிலடி உவர் நீர்தடுப்பு அணை புனரமைப்பு | | 2.52 | C8 | 24,500.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 4 | தெல்லிப்பளை அம்பனை குளம், பூதன்குளம், கட்டுவயல்குளம் புனரமைப்பு | | 5.43 | C7 | 45,600.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 5 | கரவெட்டி முட்கிளுவை கீரது வெள்ள நீர்த்தடுப்பணை மற்றும் வழிச்சீராக்கி புனரமைப்பு | | 4.54 | C8 | 44,700.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 6 | வேலணை சோலணேடை உவர் நீர்தடுப்பு அணை வழிச்சீராக்கி மற்றும் வெள்ள நீர்த்தடுப்பணை புனரமைப்பு | | 5.04 | C7 | 49,800.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 7 | நல்லூர் அரியாலை கிழக்கு உவர் நீர்தடுப்பு அணை மற்றும் வழிச்சீராக்கி புனரமைப்பு | | 5.13 | C7 | 49,800.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 8 | உடுவில் வண்ணான் குளம்,கந்தரோடை குளம் மற்றும் சண்டிலிப்பாய் ஆலங்குளாய் குளம்,முதலியார் குளம் மற்றும் தெல்லிப்பளை பிணாய்க்காய் குளம் புனரமைப்பு | | 4.3 | C8 | 43,000.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 9 | சண்டிலிப்பாய் மாதக்ல் சம்பில்துறை மூன்று வழிச்சீராக்கி, கலிங்கு, தடுப்புச்சுவர் புனரமைப்பு மற்றும் தெல்லிப்பளை சேந்தாங்குளம் மூன்று வழிச்சீராக்கி மற்றும் கம்பிகட்டப்பட்ட கொங்கிறீட் வாய்க்கால் புனரமைப்பு | | 5.13 | C7 | 51,300.00 | 06.08.2017 | 90 நாட்கள் |
| 10 | நல்லூர் அரியாலை வெள்ள நீர்த்தடுப்பணை மற்றும் வழிச்சீராக்கி, கோப்பாய் நீர்வேலி வெள்ளநீர்தடுப்பு அணை புனரமைப்பு | | 7.58 | C7 | 74,700.00 | 06.08.2017 | 90 நாட்கள் |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
மாவட்டச்செயலகம்
யாழ்ப்பாணம்

## சிரியா...

அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. இந்த முறுகல் நிலை மூன்றாம் உலகப் போரின் தொடக்கப் புள்ளியாக அமையலாம் என்று இராஜதந்திரிகள் தெரிவித்துள்ளதுடன், சமூக வலைத்தளங்களில் காரசாரமான பதிவுகள் வெளிவந்தவண்ணம் உள்ளன.

மத்திய தரைக்கடலில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் போர்க் கப்பல்களில் இருந்து 59 ஏவுகணைகள் சிரிய வான் படைக்குச் சொந்தமான சாய்ரத் படைத் தளத்தை பதம்பார்த்தன. இந்தத் தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கி 7 வருடங்கள் ஆகின்றன. இதுவரை அந்த அரசுக்கு எதிராக அமெரிக்கா இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கவில்லை. இதன்னால் இந்த விவகாரம் கடும் விளைவுகளைக் கொண்டுவரலாம் என்று கருதப்படுகிறது.

சிரிய உள்நாட்டுப் போர் விவகாரத்தில் சிரியாவுக்கு ஆதரவாக ரஷ்யாவும் ஈரானும் உள்ளன. இவை இரண்டும் அமெரிக்காவுடன் முரண்பாடு கொண்டுள்ள நாடுகள். எனவே அமெரிக்காவின் இந்தத் திடீர் நகர்வு உலகப் போரைக் கொண்டுவரலாம் என்று எதிர்வுகூறப்படுகிறது. இதற்கு அச்சாரமாக அமெரிக்காவின் தாக்குதலுக்கு ரஷ்யா கடும் கண்டனம் விடுத்துள்ளது.

அத்துடன், சிரியாவின் மீது நடுவானில் மோதல்களை தவிர்க்க போடப்பட்டுள்ள உடன்படிக்கையையும் ரஷ்யா இடைநிறுத்தியுள்ளது.

இந்த நிலையில், முன்னர் இரசாயன ஆயுதங்களை வீசி தாக்குதல் நடத்திய இடத்தில் சிரிய அரச படை அல்லது சிரிய அரசின் ஆதரவு பெற்ற படை நேற்று மீண்டும் வான்வழித் தாக்குதல் நடத்தியது. எனினும் இந்தத் தாக்குதலை நடத்தியது சிரியாவுக்குச் சொந்தமான போர் விமானமா?, அல்லது ரஷ்யாவுக்குச் சொந்தமான போர் விமானமா? என்பது தொடர்பான உறுதியான தகவல் ஏதும் வெளியாகவில்லை.

இந்த தாக்குதலில் உயிரிழப்பு மற்றும் பொருள் சேதம் தொடர்பான விவரங்களும் நேற்று இரவு வரை கிடைக்கவில்லை. (தொடர்புடைய மற்றொரு செய்தி பக்கம்14) (வ-ம)

## பணம்...

துஷ்பிரயோகம் செய்து ஊழல் செய்யக் கூடியவர்களாகவுமே உள்ளனர்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசுன தெரிவித்தார்.

முன்னாள் தலைமை அமைச்சர் அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்காக அரச தலைவர்மைத்திரிபால சிறிசேன நேற்றுச் சபைக்கு வருகை தந்திருந்தார்.

அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கான ஒத்திவைப்பு அனுதாபப் பிரேரணை கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. எனினும், குறித்த தினத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ரஷ்யாவுக்குச் சென்றிருந்தமையாலும், மேலும் சில மூத்த அமைச்சர்கள் சபைக்கு வருகை தராத காரணத்தாலும், இந்த அனுதாபப் பிரரேணையை வேறு ஒரு தினத்திலும் சபைக்குக் கொண்டு வருமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அமைச்சர்கள் சிலர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அதற்கமைய நாடாளுமன்ற வரலாற்றில் முதன் முறையாக அனுதாபப் பிரரேரணை இரண்டாவது தடவையாகவும் நேற்று வெள்ளிக்கிழமை சபைக்குக் கொண்டுவரப்பட்டது.

இதில் கலந்து கொள்வதற்காக 11 மணியளவில் சபைக்கு வருகை தந்த அரச தலைவர் முன்னாள் தலைமை அமைச்சர் அமரர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தார்.

இதன்போது, ஜே.ஆர். ஜெயவர்த்தன அரச தலைவராக இருந்தபோதே ரட்ணசிறி விக்கிரமநாயக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தார். அந்தக் காலகட்டமானது சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசியல் ரீதியாக பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தது. இதனால் அது மூன்று பிரிவுகளாக பிளவடைந்து மூன்று கட்சிகளாக உருவாகியது. கட்சியைத் தோற்றுவித்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாராநாயக்கவின் குடும்பத்தில் இருந்தவர்கள் சிலரே வேறு கட்சிகளை ஆரம்பிக்க முன்னின்றனர் எனச் சுட்டிக்காட்டியதோடு, அன்று கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தும், அதன் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பல்வேறு பதவிகளை வகித்தபோதும் அவர் எமக்குக் காட்டித் தந்த வழிகாட்டல்கள், இன்றைய புதிய அரசியல் தலைமைகளுக்கும், மூத்த தலைமைகளுக்கும் முன்னுதார ணமாக அமையும்.

களுத்துறை மாவட்டத்தில் அதிக காணிகளையும், வீடு, யானைகள் என பல்வேறு சொத்துக்களையும் வைத்திருந்த விக்கிரமநாயக்க குடும்பத்தினர் அரசியலுக்காக அவற்றை இழந்தனர்என்றார்.

உரையாற்றிய பின்னர் 11.25 மணியளவில் சபையிலிருந்து வெளியேறினார். அத்துடன், இந்த அனுதாபப் பிரேரணையில் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா, அமைச்சர் ஜோன் செனவிரத்ன, பொது எதிரணி உறுப்பினர் மகிந்தனந்த எம்.பி. மற்றும் விதுர விக்கிரமநாயக்க ஆகியோர் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## மன்னிப்புச் சபை...

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பன்னாட்டு மன்னிப்புச் சபையின் கிளையொன்று கொழும்பில் அமைக்கப்படுவதற்கு எனக்கு எந்த விருப்பமும் கிடையாது. இவ்வாறான காரியாலயமொன்று இலங்கைக்குத் தேவையில்லை.

நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கும்போது எமக்குப் பன்னாட்டு மன்னிப்புச் சபையின் கிளைக் காரியாலயம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியம் என்ன? என நான் அரசிடம் கேள்வி எழுப்புகின்றேன்-என்றார். (த-10)

## ஆவா ...

தகவல் கிடைத்தது. இதனை அடுத்து கைதடியில் நேற்று அதிகாலை 4 மணியளவில் களமிறங்கிய பொலிஸார் அனைவரையும் கைது செய்தனர் என யாழ்ப்பாணப் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஸ்ரெனிஸ்லஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் ஆவா குழு எனத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட சிலர் யாழ்ப்பணத்தில் பல்வேறு இடங்களில் வாள்வெட்டுச் சம்பவங்களை மேற்கொண்டிருந்தனர். அந்தக் குழுவில் இருந்த பலரை நாம் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினோம். அதேபோல சன்னா குழு எனப் பல குழுக்கள் இயங்கி வந்தன. அவற்றில் உள்ளவர்களையும் கைது செய்துள்ளதுடன் ஏனைய சில நபர்களைத் தேடி வருகின்றோம்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக எனது தலைமயிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்தநிலையில்19தொடக்கம்21வயது உடைய பாடசாலையைவிட்டு விலகிய இளைஞர்கள் 5 பேரைக் கைது செய்தோம். அதில் சிலரை அவர்களின் வீடுகளில் வைத்தும் சிலரை அவர்கள் மறைந்திருந்த நண்பர்கள் வீட்டில் வைத்தும் கைது செய்தோம். இவர்களிடம் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின்படி இவர்கள் ஆவா குழுவில் இருந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வாள்வெட்டுக் குழுக்களின் அட்டகாசங்களைப் பொலிஸார் அடக்கி வரும் நிலையில் மீண்டும் வாள்வெட்டுக் கலாசாரத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஆவா குழுவினர் செயற்படுகின்றனர்.

இவர்களுடன் முரண்படுபவர்களைக் குழுக்களாகச் சென்று வெட்டுவது, அடிப்பதுதான் இவர்களின் வேலை என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்களிடம் இருந்து ஆயுதங்கள் எவையும் இதுவரை கைப்பற்றப்படவில்லை. எனினும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். அத்துடன் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையையும் எடுத்துள்ளோம்-என்றார். (த-4, 8)

## போரில்...

எனவும் தெரிவித்தது. நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி பதில் நேரத்தில் ஒழுங்குப் பத்திரத்தில் எழுப்பப்பட்டிருந்த கேள்விக்கான பதிலைச் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் சபையில் ஆற்றல்படுத்தியிருந்தார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடந்த காலப் பகுதியில் இடம்பெற்ற போர் காரணமாக பலர் அவயவமிழந்தனர். அதில் முள்ளந்தண்டுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் காரணமாக இடுப்புக்குக் கீழ் பகுதி செயலிழந்துள்ள குறிப்பிட்டதொரு தொகையினரும் உள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள இவர்களில் பெரும்பாலானவர்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதோடு இன்னும் சிலர் இதுவரை மீள்குடியேற்றப்படவில்லை.

இவர்களுக்கு 2016ஆம் ஆண்டு எமது அமைச்சின் ஊடாக 1360 வீடுகளும், 953 கழிவறைகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அத்தோடு, கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விசேட தேவையுடையவர்களுக்காக விசேட கழிவறைகள் 2016 நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டத்தை 2017ஆம் ஆண்டும் அபிவிருத்தித் திட்டத்துக்கு அமைய முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம். ஒரு கழிவறைக்கு ஒன்றரை இலட்சம் ரூபா செலவாகின்றது - என்றார். (த-4)

## புதிய...

ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்ததாவது:

"தேர்தல் தொகுதிகளின் அடிப்படையில் உள்ளூராட்சி சபைக்கான தேர்தல் முறைமை உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும் தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் ஆணைக்குழு தனது கடமைகளை சரிவர மேற்கொள்ளாதமையின் பெறுபேறுகளையே இன்று நாம் அனுபவிக்கிறோம்.

தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் செயற்பாடுகள் பக்கச்சார்பின்றியும், சுயாதீனமாகவும் நடைபெறாமையே உள்ளூராட்சி சபைத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான முக்கிய காரணமாகும். எனினும் கூட்டு அரசு பதவியேற்றதன் பின்னர் எல்லை நிர்ணயக் குழுவொன்றை நியமித்து தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் பணிகள் மீள ஆரம்பிக்கப்பட்டன. இந்த விடயம் தொடர்பாக எத்தகைய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட போதும் நாட்டில் மேற்கொள்ளப்படவேண்டிய அரசியல் மற்றும் சமூக மறுசீரமைப்புகளுக்கு அவசியமான தொடக்கமாகவே நான் இதனைக் கருதுகின்றேன்.

1978ஆம் ஆண்டின் அரசமைப்பால் ஏற்படுத்தப்பட்ட விருப்பு வாக்கு முறைமையால் கட்சிகளின் அரசியல் கொள்கைகள் மற்றும் தத்துவங்கள் மறைக்கப்பட்டு தனிநபர்களின் செல்வாக்கு மேலோங்கியது.

அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நாட்டின் மாற்றத்துக்கான யுகமொன்றின் ஆரம்பமாகும். 18ஆவ்து திருத்தத்தின் ஊடாக இந்த நாட்டின் அரசமைப்பில் மன்னராட்சி போன்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டமையாலேயே 19ஆவது திருத்தைத மேற்கொள்ள நேர்ந்தது. நீதிபதிகள், சட்டத்தரணிகள், பொலிஸ்மா அதிபர், தேர்தல் ஆணையாளர் மற்றும் ஆணைக் குழுக்கள் உள்ளிட்ட நாட்டின் பொறுப்பு வாய்ந்த சுயாதீன பக்கச்சார்பற்ற பதவிகளுக்காக உரியவர்களை நியமிக்கும் தனி அதிகாரம் அன்று அரச தலைவருக்கே இருந்தது.

இவ்வாறான நிலமையில் மக்கள் மேற்கொண்ட எதிர்ப்புக்களின் பெறுபேறாகவே 19ஆவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது என்றார்.

"புதிய உள்ளூராட்சி சபை தேர்தல் முறையுடன் புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்புவோம்" எனும் தலைப்பில் இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மார்ச் 12 இயக்கத்தின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். (வ-5)

## இராணுவம்...

பிரதிநிதி திருமதி டேசிடெல்லிடம் சுட்டிக்காட்டியதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அகதிகளுக்கான ஐ.நா. தூதரகப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போதே மேற்கண்டவாறு தான் சுட்டிக்காட்டியதாக முதலமைச்சர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் பலவற்றில் இராணுவத்தினர் இன்னமும் உள்ளனர். அந்த மக்களோ வீதிகளில் அமர்ந்திருந்து தமது சொந்த மண்ணை மீட்பதற்காகத் தொடர்ந்து போராடி வருகின்றனர். இந்த அவல நிலைக்கு உடன் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

இந்தியாவில் இருந்தும் மக்கள் வருகை தந்துகொண்டிருக்கின்றார்கள். எமது நாட்டு மக்கள் திரும்பி வருவதை வரவேற்கின்றோம். ஆனால், அவர்களுக்குரிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அவ்வாறு நாட்டுக்குத் திரும்பி வரும்போது, அவர்களின் காணிகள் வேற்று இன மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிலமை காணப்படுகின்றது. இதனால், அவர்கள் பெரும் பிரச்சினைகளுக்கு உள்ளாகின்றார்கள். குடியமர்த்தியவர்களை வெளியேற்றாமல், அந்த மக்களுக்கு மாற்றுக் காணி தருவதாகக் கூறி வருகின்றார்கள். இவை அனைத்தும் பலவிதமான பிரச்சினைகளை உண்டுபண்ணுகின்றன.

நாட்டில் அகதிகள் இல்லாத நிலை ஏற்படுகின்றதா என்பது பற்றி, அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் அவதானிக்கவேண்டும். இந்தியாவில் இருந்து வருகை தரும் இலங்கை அகதிகளுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரகமும் முன்வர வேண்டும் என்று அவர்களிடம் கூறினேன் - என்றார். (த-4, 8)

## மாவாவுக்குத் தடை...

விதிக்கப்படும் என அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமுன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகார சபையின் ஒழுங்குவிதிகளை அங்கீகரிப்பதற்கான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிகரெட் பெட்டிகளில் 80 வீத எச்சரிக்கைப் புகைப்படம் கொண்டுவரப்பட்டுள்ளது. மீதமுள்ள 20 பகுதிகளில் பெயரை மட்டுமே குறிக்கும் வகையில் ஏற்பாடு இடம்பெறும். அத்துடன், தனி சிகரட் விற்பனைக்கு தடை விதிக்கப்படும். அதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் உள்ள பகுதியின் 500 மீற்றர் வரையான தூரத்தில் சிகரட் விற்பனை செய்வதற்கும் மதுபானம் விற்பதற்கும் தடை விதிக்கப்படும்-என்றார். (த-4)

## மோ. சைக்கிள்...

கிடந்ததனை அந்தச் சாலை ஊடாகப் பயணித்தவர்கள் கண்டுள்ளனர். அதன் அருகே ஒருவர் காயங்களுடன் வீழ்ந்து கிடந்தார். அவரை மீட்டு வாகனமொன்றின் உதவியுடன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அவர்கள் சேர்த்தனர். வைத்தியசாலையில் அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இயற்றாலைச் சேர்ந்த சின்னத்தம்பி தேவராசா (வயது-50) என்ற குடும்பத்தலைவரே உயிரிழந்தவராவார்.

சாலையில் பயணித்த வாகனம் மோதியதா? அல்லது மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்து அவர் காயமடைந்தாரா? என்பது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன" என்றுகொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-9)

## விமலுக்கு...

50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று உத்தரவிட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த விமல் வீரவன்ஸ அம்புலன்ஸில் நேற்று நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தார்.

தேசிய வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சராக இருந்தபோது, 2011, 2014ஆம் ஆண்டு காலப்பகுதியில், தனது அமைச்சுக்குக் கீழிருந்த, அரச பொறியியல் கூட்டுத்தாபனத்துக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட 40 வாகனங்களைத் தமது அரசியல் மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்தி, 91 மில்லியன் ரூபா அரச நிதியை மோசடி செய்ததாக நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் குற்றஞ்சாட்டப்பட் டிருந்தது.

கடந்த ஜனவரி மாதம் 10ஆம் திகதி கைதுசெய்யப்பட்டிருந்த அவர், நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-4-10)



# உன்னால் முடியும்

தவளைகளுக்கான ஓட்டப் பந்தயத்துக்கு நாளும் குறிக்கப்பட்டு விட்டது. தவளைகளின் இப்பந்தய ஓட்டத்தைக் காண பல ஊர்வன உள்ளிட்ட விலங்குகள் எல்லாம் கூடியிருந்தன. பந்தயத்தில் பத்து தவளைகள் கலந்து கொண்டன. போட்டி விதி . அருகிலுள்ள உயரமான ஒரு கோபுரத்தின் உச்சியை அடைதலாகும். முதலில் அடைபவர் வெற்றியாளர்.

போட்டி ஆரம்பமானது. கோபுரத்தின் அடித்தளப் பகுதியில் இருந்து தவளைகள் ஓட ஆரம்பித்தன. கூடி இருந்த விலங்குகள் யாவும் கை தட்டி பெரும் ஆரவாரம் செய்தன. தவளைகள் கொஞ்சத் தூரம் தாண்டியிருக்கும். அப்போது "இது நீங்கள் நினைப்பது போல சுலபமான போட்டி இல்லை. உங்கள் எவராலும் பாதித் தூரத்தையே அடைய முடியாது" என்று கூச்சலிட்டன சில விலங்குகள். "பாதியே தாண்ட முடியாதென்றால் உச்சியையாவது இவர்கள் அடைவதாவது" "ஆமையோ அல்லது முயலோ ஓடியிருந்தால் நம்பலாம். தவளைகளா? என்று வாய்விட்டு சிரித்தன சில. "தத்தித் தத்தித் தாவும் இவர்களுக்கு ஏன் இந்தப் பேராசை"கூட்டத்தில் இருந்த விலங்குகள் இப்படியாக தங்கள் கோஷங்களைத் தொடர்ந்த வண்ணம் இருந்தன. ஒவ்வொரு கோஷமும் காதில் விழ விழ தவனைகளுக்கு கோபுர உச்சி விண்வெளி தாண்டும் தூரமாக வெகு தொலைவில் தெரிய ஆரம்பித்தது. இப்போது தவளைகள் ஒவ்வொன்றும் போட்டியிலிருந்து படிப்படியாக பின் வாங்கிக் கொண்டிருந்தன.

இறுதியில் மூன்று த்வளைகள் மட்டும் சிரமத்துடன் முன்னேறிக் கொண்டிருந்தன். சிறிது வேளையில் அவற்றில் இரண்டு தட்டுத் தடுமாறி விழுந்தன. அப்போது "இனி ஓடியது போதும், விழுந்த படியே எழுந்து திரும்பி ஓடி வாருங்கள்" என்று சிரித்து ஆரவாரத்துடன் கோஷமிட்டன சில விலங்குகள். மனம் சோர்ந்துபோன இரு தவளைகளும் வருத்தத்துடன் பின் வாங்கின. இப்போது ஒரே ஒரு சிறிய தவளை மட்டும் உச்சியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தது. சில வினாடிகளில் அந்த சின்னத் தவனள உச்சியைத் தொட்டு வெற்றி கண்டது.

அனைத்து விலங்குகளும் வியந்து கை தட்டி ஆரவாரம் செய்தன. இந்தச் சின்னத் தவளையால் இது எப்படி முடிந்தது என ஆளுக்காள் வினவத் தொடங்கின. அப்போது தான் தெரிந்தது. அந்த சின்னத் தவளைக்கு காது கேட்காது என்ற சங்கதி.

**தம்மால் முடியாததைப் புலர் "உன்னால் முடியாது" என்று சொல்வார்கள். சொல்லுபவர்கள் சொல்லட்டும். அவர்களிடம் நீ காது கேளாதவன் போல இருப்பதே சில நேரங்களில் பொருத்தமானது.**

**முயன்று பார்; முடியாததென்று எதுவுமில்லை.**




# நூலகங்களின் வரலாறு

நூலகங்கள் உலகில் இன்று நேற்று உருவானவையல்ல. உலகில் காகிதம் தயாரிப்பதற்கு முன்னதாகவே நூலகங்கள் உருவாகி விட்டதற்கான வரலாற்றாதாரங்கள் உள்ளன. ஆரம்பத்தில் களி மண் தட்டுகள், மரப் பட்டைகள், புற்கள், மெழுகு பூசப்பட்ட மரப்பலகைகள் என்பவற்றில் நூல்கள் தயாரிக்கப்பட்டன. இன்று நூல்களுக்கு நாம் பயன்படுத்தும் காகிதம் பப்பிரஸ் என்ற தாவரத்திலிருந்து தயாரிக்கப்பட்டது. இதனைக் கண்டு பிடித்தவர்கள் சீனர். அத்தாவரத்தின் பெயரை அடிப்படையாகக் கொண்டே பேப்பர் என்ற சொல் வழக்கில் வரலாயிற்று.

இன்று நகரம் முதல் கிராமம் ஈறாக நூலகங்கள் சேவையாற்றி வருகின்றன. ஆரம்ப காலங்களில் இவை அரண்மனைகள், மடாலயங்கள், கோயில்கள் என்பவற்றிலேயே இயங்கி வந்தன. பின்னர் படிப்படியாக வளர்ச்சி பெற்று அரச தாபனங்களின் நிருவாகத்தின் கீழ் இயங்கத் தொடங்கின.

உலகின் முதலாவது நவீன நூலகம் ஐக்கிய அமெரிக்காவில் பொஸ்டன் நகரில் 1754ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் நூலக வரலாறு கி.மு.103-77 ஆண்டு காலப் பகுதிகளில் கோயில் நூலகங்களாக ஆரம்பமானது. எனினும் இங்கு நவீன நூலகங்கள் பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலேயே உருவாகின. இலங்கையின் முதல் நவீன நூலகம் 19ஆம் நூற்றாண்டில் கொழும்பில் உருவாக்கப்பட்டது. 1813ஆம் ஆண்டு இராணுவத்தினரின் பாவனையின் பொருட்டு யுனைட்டட் சேர்விஸ் நூலகமும், 1824இல் கொழும்பு நூலகமும், 1829இல் சட்டத்தரணிகள் பாவனைக்காக பெட்டா நூலகமும் ஆரம்பிக்கப்பட்டன.



யுனைட்டட் சேர்விஸ் நூலகம் தொடர்ந்து இயங்குவதில் ஏற்பட்ட பிரச்சினையால் 1874இல் கொழும்பு நூலகத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. அப்போதிலிருந்து முதலாவது உலக யுத்தம் வரையான காலப்பகுதியில் இரு நூலகங்களும் அரச மானியம் பெற்று இயங்கின. முதலாம் உலக யுத்தத்தை அடுத்து இந்த மானியம் நிறுத்தப்பட 1924 இல் சேர் சந்திர சேகர நிதியம் என்ற அமைப்பிடம் இவை ஒப்படைக்கப்பட்டன.

பின்னர் 1925 இல் இருந்து இந்த நிறுவனத்திடமிருந்து 2000 நூல்களுடன் இரு நூலகங்களையும் கொழும்பு மாநகர சபை பொறுப்பேற்றது. இது இன்று கொழும்பு பொது நூலகம் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் 1842இல் பொது நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. பிரதான நீதிமன்றச் செயலாளர் எஸ்.சீ.சிரினியரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகம் பெரும்பாலும் சட்டத் தரணிகளாலேயே பயன்படுத்தப்பட்டது. இன்றைய யாழ்.பொது நூலக அமைப்பு 1933ஆம் ஆண்டில் உருவானது. இலங்கையில் 1945இல் இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்கு வந்த பின்னர் பொது நூலகங்களும் பாடசாலை நூலகங்களும் தத்தம் சேவைகளை விரிவு படுத்த வேண்டிய கட்டாய நிலைக்குள்ளாகின. 1960ஆம் ஆண்டளவில் பாடசாலைகள் நூலகங்கள் தொடர்பான முதலாவது சட்ட மூலம் இலங்கையில் இயற்றப்பட்டது. பின்னர் 1967இல் இலங்கையின் கல்வி நூற்றாண்டை முன்னிட்டு அனேக பாடசாலை நூலகங்கள் உருவாக்கப்பட்டு வளர்ச்சி அடையலாயின.


# மேரி கியூரி அம்மையார்



ரேடியம் ஓர் அற்புதமான பொருள். இதனைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர் மேரி கியூரி அம்மையார். 1847இல் வார்சோ நகரில் பிறந்த இவர் இளவயதில் கணிதத்தையும் விஞ்ஞானத்தையும் விரும்பிப் படித்தார். குடும்ப வறுமை காரணமாக 15 வயதில் படிப்பை நிறுத்தி செல்வந்தர் வீட்டு குழந்தையைப் பராமரித்து வந்தார். நான்கு ஆண்டுகள் கழிய படிப்பின் மேல்கொண்ட பற்றினால் சிறுசிறு வேலைகளைச் செய்து கொண்டு படிப்பைத் தொடர்ந்தார். தனக்கு விஞ்ஞானம் கற்றுத் தந்த பியரி என்ற ஆசிரியரை மணந்து அவருடன் சேர்ந்து பல ஆராய்ச்சிகளில் ஈபடுபட்டார்.

முதலில் யுரேனியம், பின்னர் அதனை விட ஆற்றல் கூடிய டோரியம் அதன்பின் அதனையும் விட ஆற்றல் மிகுந்த போலோனியம், போன்றவற்றைக் கண்டு பிடித்தார். 1898ஆம் ஆண்டு போலோனியத்தையும் விட ஆற்றல் மிகுந்த ரேடியத்தைக் கண்டு பிடித்தார். இது இவர் கண்டு பிடிப்புகளில் மிகவும் பயனுள்ளதாக கருதப்பட்டது. ரேடியம் பிற பொருள்களிலிருந்து வெப்பத்தைப் பெறாது, தானாகவே வெப்பத்தை ஆக்கிக் கொள்ளும். இடைவிடாது ஒளி விட்டுக் கொண்டே இருக்கும். கறிஉப்புப் போன்ற வெண் பொடியாக இருக்கும். இது எத்தகைய கடின பொருளையும் துளைக்கும் ஆற்றல் கொண்டது. நீரைப் பிரிக்கவும், கண்ணாடியை நிறமுடைய தாக்கவும் வைரங்களைப் பல நிறமாக ஒளி வீசச் செய்யவும் கூடிய ஆற்றல் ரேடியத்துக்குண்டு. புற்று நோய் என்னும் கொடிய நோய்க்கு சிகிச்சை முறையாக ரேடியம் பயன்படுத்தப்படுகிறது. இவர் 1903 இல் பௌதீக விஞ்ஞானத்துக்கும், 1911 இராசயனத்துக்குமான நோபல் பரிசுகளைப் பெற்றார். தம் வாழ்நாளில் இரண்டு தடவைகள் நோபல் பரிசு பெற்றவர் இவர் ஒருவரேயாவார்.

# மரத்திலுள்ளகிளிகளை எண்ணுவோம் எழுத்துகளில் எழுதுவோம்



கிளிகள் ..................................ஆகும்

# நேதாஜி அணி அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 8
வல்வை விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் வல்வை நேதாஜி வி.கழகம் சம்பியனானது.
வல்வை வி.கழக மைதானத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில், நேதாஜி அணியை எதிர்த்து இளங்கதிர் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல்கள் எவையும் பதிவாகாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் நேதாஜி அணி சம்பியனானது. (ம-108)

# மாகாண மட்ட பூப்பந்தாட்டம்

கரணவாய், ஏப். 8
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் மாவட்ட அணிகளுக்கு இடையிலான மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடர் மன்னார் பொது விளையாட்டரங்கில் இன்று சனிக்கிழமை முதல் இரு தினங்கள் இடம்பெறவுள்ளன. (ம-108)





# கிளி. விளையாட்டுத் தொகுதியின் கட்டுமானத் திட்டங்கள் மந்த கதியில்

கிளிநொச்சி, ஏப். 8
இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சினால் கிளிநொச்சியில் அமைக்கப்படும் பன்னாட்டுத் தரத்திலான விளையாட்டுத் தொகுதியின் கட்டுமானப் பணிகள் இன்னும் முழுமையடையாமல் மந்த கதியில் நடைபெற்று வருகின்றன என்று விளையாட்டு ஆர்வலர்கள் விசனம் தெரிவித்தனர்.
கடந்த 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கட்டுமானப் பணிகள் இன்னும் முழுமையடைந்தபாடில்லை. நீச்சல் தடாக கட்டுமானம், தலைமை மண்டபத்தின் கட்டுமானம், உள்ளக விளையாட்டரங்கின் கட்டுமானம் என மூன்று பிரிவுகளாகத் தற்போது அவை நடைபெற்று வருகின்றன.
நீச்சல் தடாகம் மற்றும் உள்ளக விளையாட்டரங்கின் கட்டுமானப் பணிகள் ஓரளவு நிறைவடைந்துள்ள போதிலும் அதற்கான மின் இணைப்பு இன்னும் பொருத்தப்படாத நிலையில் உள்ளது. தலைமை மண்டபத்தின் கட்டுமானத்தில் இன்னும் ஏராளமான வேலைத்திட்டங்கள் எஞ்சியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் கிரிக்கெட், தடகள மைதானம் ஆகியவற்றுக்கான வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கடந்த வருடம் வடக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேசியமட்டப் போட்டிகள் சிலவற்றை இந்த மைதானத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டபோதிலும் கட்டுமானங்கள் பூர்த்தியாகாத காரணத்தால் கடைசி நேரத்தில் வேறு மாவட்டங்களுக்கு போட்டிகள் மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-6-23)



# 7.30க்கு பாடசாலை ஆரம்பிப்பதால் விளையாட்டுப் பயிற்சிகளில் சிரமம்

யாழ்ப்பாணம், ஏப். 8
காலை 7.30மணிக்குப் பாடசாலை ஆரம்பிப்பதனால் விளையாட்டுப் பயிற்சிகளை வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது என்று பயிற்சியாளர்களும் உடற்கல்வி ஆசிரியர்களும் குற்றஞ் சாட்டுகின்றனர்.
கடந்த காலங்களில் பாடசாலைகள் 8 மணிக்கு ஆரம்பித்தன.
இதனால் விளையாட்டில் ஈடுபடும் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு காலை, மாலை என்று இரு நேரமும் பயிற்சி வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகம் இருந்தன. ஆனால் தற்போது இந்த நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டு பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகின்றன. இதனால் காலைப் பயிற்சிகள் பெரும்பாலான பாடசாலைகளில் படிப்படியாகக் கைவிடப்பட்டு வருகின்றன.
1.30 மணிக்குப் பாடசாலை நிறைவடைகின்ற காரணத்தால் பாடசாலைகள் முடிவடைந்ததும் அங்கேயே தங்கிநின்று பயிற்சி எடுத்து வந்த நீண்ட தூரங்களில் இருக்கும் மாணவர்கள், மாலைப் பொழுதுக்காகக் கூடுதலாக அரை மணிநேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவை பயிற்சிகளை வெகுவாகப் பாதிக்கிறது என்பதே உடற்கல்வி ஆசிரியர்களினதும் பயிற்றுநர்களினதும் கருத்து.
குறிப்பாக வீராங்கனைகளுக்கான பயிற்சிகளைக் காலையில் வழங்குவதில் அதிகளவான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது வீராங்கனைகளுக்குப் பயிற்சி வழங்கும் போது பெண் ஆசிரியர் ஒருவர் அருகில் நிற்க வேண்டும் என கல்வி அமைச்சால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
இதனால் பாதுகாப்புக்காக வரும் ஆசிரியைகளையும் அழைத்து பயிற்சி எடுப்பதென்பது காலையில் சாத்தியமற்றதாகின்றது என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.
கடந்த கால பெருவிளையாட்டுக்களிலும் தடகளத்திலும் வடக்கு சொல்லிக்கொள்ளும் படியான பெறுபேற்றை வெளிப்படுத்தவில்லை. இந்த நிலையில் பயிற்சி பெறுவதிலும் வழங்குவதிலும் ஏற்பட்டுள்ள மந்தநிலை மேலும் பின்னடைவைக் கொடுக்கலாம் என்று விளையாட்டு ஆர்வலர்கள் விசனம் தெரிவித்தனர். (ம-422)



இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனம் 23 வயதுக்குட்பட்ட தேசிய அணிக்கான அணித்தெரிவுப் பயிற்சி முகாம்களை இலங்கையின் பல பாகங்களிலும் குறிப்பாக ஒவ்வொரு கால்பந்தாட்ட லீக்குகளிலும் நடத்தி வருகிறது. யாழ்ப்பாணம், வலிகாமம் லீக்குகளில் உள்ள வீரர்களுக்கான அணித் தெரிவு முகாம் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 8

**யாழ். மாவட்ட துடுப்பாட்டம்**

யாழ்ப்பாணம் மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவினருக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

**கே.ஸி.ஸி.ஸியின் துடுப்பாட்டம்**

கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் றொஜின்போ விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**அக்கினிச் சிறகுகளின் கால்பந்தாட்டத் தொடர்**

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வெற்றிக் கிண்ணத்துக்காக அக்கினிச் சிறகுகள் வி.கழகம் வடக்கு, கிழக்கு ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் வடமராட்சி பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்குகளில் உள்ள அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் நெற்கொழு கழுகுகள் வி.கழக மைதானத்தில் இன்று காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளன.
காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி வி.கழகத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் வி.கழகமும் காலை 9.30 இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் நக்கீரன் வி.கழகத்தை எதிர்த்து வல்வை ஆதிசக்தி வி.கழகமும், காலை 10.30 மணிக்கு பலாலி விண்மீன் வி.கழகத்தை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் வி.கழகமும், காலை 11.30 மணிக்கு மணற்காடுசென். அன்ரனிஸ்வி.கழகத்தை எதிர்த்து நெடியகாடு இளைஞர் வி.கழகமும் மோதவுள்ளன. தொடர்ந்து 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் வி.கழகத்தை எதிர்த்து கரணவாய் கொலின்ஸ் வி.கழகமும் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கழகமும் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய வி.கழகத்தை எதிர்த்து கம்பர்மலையங்கம்பன்ஸ் வி.கழகமும் மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி வி.கழத்தை எதிர்த்து கரவெட்டிநவசக்திவி.கழகமும்மோதவுள்ளன. (ம-422-108-23)









## அளவெட்டி மத்தி. இறுதிக்குத் தகுதி

கரணவாய், ஏப். 9

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகத்தின் துடுப்பாட்டத் தொடரில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடைபெற்றுவரும் இந்தத் தொடரின் அரையிறுதி ஆட்டம் அளவெட்டி விநாயகர் வி.கழக மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை கலையொளி விளையாட்டுக் கழகமும் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அளவெட்டி மத்திய அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கலையொளி 8.4 பந்துப்பரிமாற்றத்தில் சகல இலக்குகளையும் இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி. 6.4 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மட்டும் இழந்து 28 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## ஐக்கியம் ஜசிந்தா இறுதியில் பலப்பரீட்சை

திக்கம் சனசமூக நிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு உதயன் பத்திரிகையின் அனுசரணையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் நடத்தும் கபடித் தொடரில் பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து பண்டத்தரிப்பு ஜசிந்தா அணி நாளை மாலை 5.30 மணிக்கு மோதவுள்ளது.

திக்கம் இளைஞர் வி.கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கிய அணி மோதியது. பருத்தித்துறை ஐக்கிய அணி 9:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு ஜசிந்தா அணியை எதிர்த்து கிளிநொச்சி உழவர் ஒன்றிய அணி மோதியது. இதில் பண்டத்தரிப்பு ஜசிந்தா அணி 48:39 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிக்குச் சென்றது. (ம-422)

# பற்றிக்ஸ்-மத்தி. இறுதிக்குத் தகுதி



யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றிபெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இறுதியாட்டம் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. (ம-23)

## கொல்கத்தா அணி பதற்றமற்ற வெற்றி

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் குஜராத்தை சிறு பதற்றமும் இன்றி வீழ்த்தியது கொல்கத்தா அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அணி 22 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் ஜேசன் றோய். மக்கலம் இரு சிக்சர்களுடன் 35 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். மத்திய வரிசையில் நிலைத்துநின்று அரைச்சதம் கடந்தார் ரெய்னா. இந்த அரைச்சதத்துக்காக அவர் 41 பந்துகளை எடுத்துக்கொண்டார். ஒட்டுமொத்தமாக அவர் குறித்த 68 ஓட்டங்களுக்காக 51 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். இத்தனை பந்துகளுக்கு 80 முதல் 90 வரையிலான ஓட்டங்களைக் குவித்திருக்க வேண்டும் இதுவும் ஓர் வகையில் பின்னடைவே. டினேஸ் கார்த்திக் 25 பந்துகளுக்கு 47 ஓட்டங்களைக் குவித்தார். முடிவில் 4 இலக்குகள் இழப்புக்கு 183 ஓட்டங்களைக் குவித்தது குஜராத்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தாவுக்கு ஆரம்ப வீரர்களான கம்பீர் மற்றும் கிறிஸ்லின் பலமான அடித்தளத்தை அமைந்து வெற்றிநடையை மிடுக்கோடு கொண்டுசென்றனர். கிறிஸ்லின் அடிக்கடி சிக்சர்களை விளாசி அமர்க்களப்படுத்தினார். அரைச் சதத்துக்காக அவருக்கு 19 பந்துகளே தேவைப்பட்டன. சுழல், வேகம் என அத்தனை பந்துவீச்சாளர்களையும் பரிசோதித்துப் பார்த்தாயிற்று இலக்குச் சரிவு ஏற்பட்ட பாடில்லை. முடிவில் 31 பந்துகள் மீதமிருக்க 10 இலக்குகளால் வென்றது கொல்கத்தா. கம்பீர் 76 ஓட்டங்களுடனும், லின் 91 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். (ம)



## சென். தோமஸ் ஏ, பி அணிகள் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 8

திக்கம் சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் உதயன் பத்திரிகையின் அனுசரணையில் நடத்தும் வடமாகாண ரீதியிலான கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை சென். தோமஸ் 'பி', சென். தோமஸ் 'ஏ' அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

திக்கம் இளைஞர் வி.கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் சென். தோமஸ் 'பி' அணியை எதிர்த்து கிளிநொச்சி உழவர் ஒன்றிய அணி மோதியது. 20:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென். தோமஸ் 'பி' அணி வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் சென். தோமஸ் 'ஏ' அணியை எதிர்த்து மன்னார் எவர்கிறின் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை சென். தோமஸ் ஏ அணி 66:28 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-422)



## சாந்தி அக்ரோ நீட்ஸ்

### விவசாய நண்பர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு !

விவசாயத் தேவைகளைப் பூர்த்திசெய்வதில் முன்னணியில் திகழும் திருநெல்வேலி **சாந்தி அக்ரோ நீட்ஸ்** தனது 10 ஆவது அகவை நிறைவை முன்னிட்டும் தமிழ்ப்புத்தாண்டை முன்னிட்டும் அதிரடி விலைக்கழிவில் விவசாய உள்ளீடுகள் மற்றும் தெளிகருவிகளும் அதன் உதிரிப்பாகங்களையும் விற்பனை செய்யவுள்ளது !

இச் சலுகை எதிர்வரும் ஏப்ரல் 10 முதல் 15 ஆம் திகதிவரை மட்டுமே! உங்கள் தேவைகளுக்கு உடன் விரையுங்கள்.

No. 50, Palaly Road,
Thirunelvely.

Proprietor : T.Ragendiran
077 881 4228, 021 222 0306

## அனெக்ஸ் வாடகைக்கு

வைமன் வீதிக்கு அண்மையில் நாவலர் வீதியில் இரண்டு பேர்மட்டும் வசிக்கக் கூடிய வீட்டின் பகுதி தனிவழியுடன் வாடகைக்குண்டு. 0776663200

# விதியை மீறினார் எம்.எஸ்.டோனி


ஐ.பி.எல். தொடரில் வீரர்களின் நடத்தை விதியை புனே அணியின் இலக்குக் காப்பாளர் டோனி மீறினார் என்று குற்றஞ்சாட்டப் பட்டது.

நடைபெற்றுவரும் ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் புனேயும் மும்பையும் மோதின. புனே வெற்றிபெற்றது. மும்பை துடுப்பெடுத்தாடிய போது ஆட்டத்தின் 15ஆவது பந்துப் பரிமாற்றத்தில் தாகிர் வீசிய பந்து பொலார்டின் கால்காப்பைத் தாக்கியது. மறுபரிசீலனை முறையில் ஆட்டமிழப்பு என்று தெளிவாகத் தெரிந்தது. நடுவர் ஆட்டமிழப்புக் கொடுக்கவில்லை. உடனே டோனி மறுபரிசீலனை செய்வது போல் சைகை காட்டினார். ஐ.பி.எல். தொடரில் மறுபரிசீலனை முறை இல்லை என்பதால் இது வீரர்களின் நடத்தை விதியை மீறிய செயல் என்று கருதப்படுகிறது. (ம)

## வேலை வாய்ப்பு

web offset இயந்திர இயக்குநர் மற்றும் பழக விரும்புபவர்கள் தேவை.

ஆர்வமுள்ளவர்கள் 10.04.2017 திங்கட்கிழமை காலை 10.00மணி தொடக்கம் 2.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.



**குறிப்பு:- வெளிமாவட்டத்தவர்களுக்கு தங்குமிட வசதி செய்து கொடுக்கப் படும்.**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

Cocker Spaniet நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

077 361 4339
077 215 5221

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் அரச தொழில்புரியும் குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

076 586 6485

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் திருமதி விஜயகாந்தன் பாமதி அவர்களின் அன்புத் தந்தை **கனகசபை சதாசிவம்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய உத்தியோகத்தர்,**
**நலன்புரிக்கூட்டுறவுச்சங்கம்.**

## 30 ஆம் ஆண்டு நினைவலைகள்



**சற்குணநாதன் நந்தகோபன்**

ஆண்டுகள் முப்பது ஆனாலும்
உன் புரிப்பு வதனம் பூப்போல
தோன்றி மறையுதடா
நந்தன் என்றும் நாமம் மறைந்ததோ
உன் பிரிவால் வாடும்
அம்மா,அக்காமார்,தம்பி,தங்கை,
மற்றும் உறவினர்கள்.

மலர்வு. 17.09.1969
உதிர்வு.08.04.1987

திருமதி இ.சற்குணநாதன்
மீசாலை மேற்கு ,மீசாலை.

## விற்பனைக்கு

கட்டட இடிபாடுகள் மற்றும் விறகு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 077 677 0474

## செக்கியூரிட்டி வேலையாள்கள் தேவை

- யாழ்ப்பாணம் JSO 10 பேர்
- சுன்னாகம் JSO 03 பேர்
- திருநெல்வேலி JSO 03 பேர்
- சகலவிதமான சமையல் ஆள் தேவை - 01
- Manager - 01
- சுத்திகரிப்பாளர் - 01

தங்கியிருந்து வேலை செய்பவர்களுக்கு முன்னுரிமை.
வரும்போது,
3 ID Size படம்,
ID Copy,
குடும்பப்பதிவுப் பிரதி - 1

தொடர்புகளுக்கு- 077 891 9367, 076 706 0095
8.9.10ஆம்திகதிகளில்மட்டும்மு.ப. 10மணியிலிருந்து மாலை 5 மணிவரை

பரமேஸ்வரி ரெஸ்ட் இன், கைதடி றோட், மருதனார்மடம்.

## 2 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

கலாபூசணம் கலைவாரிதி
**இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை**



அன்னை மடியில்
22 . 09 . 1944

மண்ணின் மடியில்
08 . 04 . 2015

மரக்கிளையில் இருந்து
ஒற்றைப் பறவையாய்
மீண்டும் காணமுடியா
நெடுந்தூர பயணத்தில்
இணைந்து விட்ட
எங்கள் இலவிளக்கே...

தொலைக்கக் கூடாததை
தொலைத்துவிட்டது போல்
இழக்கக்கூடாததை
இழந்துவிட்டது போல்
துயரம் நாளும் வாட்ட
நாள்கள் இன்று நகர்கின்றன...

திசைகாட்டியும் இன்றி
மீகாமனும் இன்றி
பயணப்படும் கப்பல் போல
தடுமாற்றத்துடன் எங்கள்
பயணம் இன்னமும்
இங்கே தொடர்கின்றது...

காலத்தின் நீட்சியில்
மாறுகின்ற உலகத்தில்
மாறாத உங்கள் அன்பு
மீண்டும் ஏழை வந்து
சேராதோ என்று இன்றும்
ஏங்குகின்றோம்...


வேர்களில் இருந்து கசியும்
நீராய் உங்கள் நினைவுகள்
என்றும் எங்கள் பயணம்
இன்றும் தொடர்கின்றது
மறக்கமுடியா உங்கள்
நினைவுகளைச் சுமந்தபடி...

பண்ணாகம்,
சுழிபுரம்

உங்கள் நினைவில்
அம்மா, மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சிசிலியா (செல்லமணி) அந்தோனிப்பிள்ளை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிசிலியா (செல்லமணி) அந்தோனிப்பிள்ளை கடந்த (06.04.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின் - தங்கம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து - செல்லாச்சி தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சவிரிமுத்து அந்தோனியாப்பிள்ளையின் ஆருயிர்மனைவியும் காலஞ்சென்ற ராசமணியின் அன்புச்சகோதரியும் எட்வேட், டேவிற், பேணாட், காலஞ்சென்ற சாள்ஸ் மற்றும் வசந்தி ஆகியோரின் அன்புத்தாயும் கிப்பொலிற்றா, குயீன் அன்ஜலின், செல்வறாணி காலஞ்சென்ற இம்மனுவேல் ஆகியோரின் அன்புமாமியும் றொஷாணி, சிறோமி, தயானி, வினோத், தயாளன், பிரசாத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.04.2017) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் இல. 56/3 பழைய பூங்காவீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து திருப்பலிக்காக புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 56/3, பழைய பூங்கா வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**021 221 9010, 077 618 3102**

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம்

**(சின்னத்தங்கச்சி Dr. அன்ரி)**



பிறப்பு 15.12.1933 | இறப்பு 07.04.2017

யாழ். தட்டாதெரு, காங்கேசன்துறை வீதியைப் பிறப்பிடமாகவும்நீர்வேலி தெற்கு, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (07.04.2017) வெள்ளிக் கிழமை நண்பகல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**396/570, K.K.S, Road,**
**Jaffna.**

**தகவல்:**
**இராசசுப்பிரமணியம் (கணவர்)**
**021 222 3359, 077 639 6305**

யாழில்
## உங்களுடன் நேரடியாக...

தனது ஒரே ஒரு வியாபார பங்காளருடன் இணைந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருட்களுக்கும் அள்ளி வழங்குகிறது

**ஏராளமான பரிசுப்பொருட்கள்**


hp யின்
## மாபெரும் வீதிவிழா

**08.04.2017 சனிக்கிழமை**

பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (நளின் காட்சியறைக்கு முன்பாக)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வவுனியா கோவில்குளம்
# …ண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர்
# திருக்கோவில்
# … சிறப்பு மலர் -08.04.2017



… மணிக்கு ஆரோகணிப்பார்.

### …தீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி

…றைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம் பொருளான …னியாவிலே கோயில்குளம் எனும் பதியிலே அகிலாண்டேஸ்வரி …டேஸ்வரராக எழுந்தருளி வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார். …ளின் அல்லல் நீக்கியருளும் அகிலாண்டேஸ்வரருக்கு இன்று …லே ஆரோகணித்து வீதிவலம் வரும் அழகு காணக் கிடைக்காத …அடியார் பெருமக்கள் அனைவருக்கும் அருள் புரியும் … பணிந்து எல்லோரும் சுகமே வாழ வகை செய்யுமாறு அருளாசி …தியருளி மகிழ்கின்றோம்.

…என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**…ந்லஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**…ரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை ஆதீனம்.**

### … கோயிற் குளத்தில் அருளாட்சி செய்யும் …வருக்கும் இறைவனான சிவன் தேரேறி வருகின்றான்

… துன்ப துயர் ஒழிப்போக சிவன் தாள் பணிந்து வணங்கும் … இருள் அகன்று மெஞ்ஞான ஒளிவீச வாழ்த்துகின்றேன்.

**கௌரவ. ஈ.சரவணபவன்**
**…யாணம், கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.**



## வவுனியா கோயிற்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலின் தல வரலாறு

(அருள்மிகு மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் பூசகர் பரம்பரையில் அநாதியாக விளங்கிய பட்டர் மரபில் வந்தவரும், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் பரம்பரைத் தர்மகர்த்தாவாகவும், ஆதிப்பூசகராகவும் விளங்கிய நயினாப்பட்டரின் வழிவந்த ஸ்ரீமான் முத்துக்குமாருவின் மகனான காசிப்பிள்ளை ஆறுமுகம் அவர்களின் ஐந்தாவது தவப் புதல்வராக உதித்தவரும், வவுனியா கோயில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலின் பரம்பரைத் தர்மகர்த்தாவாகவும், கௌரவ செயலாளராகவும் விளங்கும் உயர் திரு.ஆ.நவரெத்தினராசா அவர்கள் எழுதியது இத்தல வரலாறு)

வவுனியா மத்திய பஸ்நிலையம், புகையிரத நிலையம் இரண்டு பாதை வழியும் வந்திறங்கியவர்கள். அதிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் வீதியில் முதலாம் கட்டையை அடைந்தால் (இத்தூரம் நடந்து செல்லலாம்) தென்படுவது மூன்று பாதைகள் கொண்ட முச்சந்தி. இதிலிருந்து பிரிந்து செல்வதுதான் அந்தத் தவப்பேறு பெற்ற கோயில் குளக்கிராமம். இந்தக் கிராமத்தின் முகப்பிலே தென்படுவதுதான் அண்டசராசரங்களைத் தன் வயப்படுத்தும் அகிலாண்டேஸ்வரர் திருக்கோயில்.

ஆலய முகப்பில் வழிப்பிள்ளையாராகக் காட்சி கொடுத்துக் கொண்டு இருப்பவர் சித்தி விநாயகர். அந்த ஆலயம் தான் அங்கு வாழ்ந்த மக்களின் மனதைக் குடிகொண்டு இன்று வானளாவிய தூபிகளையும் மாடங்களையும் கொண்டு பார்ப்போர் பரவச நிலையடையும் வண்ணம் அருள்பாலிக்கும் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோயிலாக விளங்குகின்றது. முடிக்குரியவர்களால் அன்றைய கால கட்டத்தில் சைவ ஆலயத்துக்காக வழங்கப்பட்டது இந்தக் காணி. காணியின் விஸ்தீரணம் 3 ஏக்கர் பேர்ச்சாக இருந்தது. தற்போது 2 ஏக்கர் 6 பேர்ச்சாக உள்ளது. இந்தக் காணியில் 1956 ஆம் ஆண்டு அளவில் தற்போது வழிபட்டு வரும் விநாயகரை ஸ்தாபித்து ஆராதித்து வந்துள்ளார்கள். இவர்களில் சின்னத்தம்பி ஐயா அவர்கள் தான் ஆலயத்தைப் பராமரித்தும் பூசை செய்தும் வந்துள்ளார். (ஆலய குடமுழுக்கு வரை).

சித்திவிநாயகர் பரிபாலனத்தை 1987 ஆம் ஆண்டளவில் பொறுப்பேற்ற நாங்கள் இந்தப் பணியைப் பரிசீலனை செய்து "சிவாலயத்திருப்பணி என்றபோதே பின்னடைவு எய்திய உறுப்பினர்களை விடுத்து தனிமனித முயற்சிதான் இதற்கு வேண்டும் என்ற பேராவலுடன் அடியேனும் மறைந்த திரு.நா.இராமநாதன், திரு.இரா.சண்முகம், திரு.ஆறுமுகம் உமாதேவன் ஆகியோர் முன்னிற்க அடியார்கள் ஊக்கமும் ஒத்தாசையும் வழங்கிவர, காஞ்சிப் பெரியவரின் பூரண ஆசீர்வாதத்தின் மத்தியில் 18.08.1989 அதிகாலை 4 மணியளவில் எனது மூத்த சகோதரரும், நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவரும், தீவுப்பகுதி உதவி அரச அதிபருமான ஆறுமுகம் தியாகராசா அவர்களால் சங்குஸ்தாபனம் செய்விக்கப்பட்டது.

இந்தப்பணி சிறப்புற நடந்துவரும் நிலையில் 1993ஆம் ஆண்டு மார்கழிமாதம் காஞ்சிப் பெரியவரின் ஆஞ்ஞைப்படி காசியில் இலிங்கம் பெற்று வரும்போது 1994ஆம் ஆண்டு தை மாதம் 6ஆம் திகதி வாரணாசியில் நா.இராமநாதன் அவர்களுக்குச் சிவபதப்பேறு வாய்க்கப் பெற்றது. அதைத் தொடர்ந்து திருப்பணி சிறப்பாக நாளுக்கு நாள் புதுப்புது மெருகுடன் நடைபெற்று வந்தது. இதற்கான மற்ற மூலவிக்கிரகங்களைத் தமிழ்நாடு ஸ்ரீரங்கம் பழனியப்பன் ஸ்தபதியாரும், உற்சவ விக்கிரகங்களைத் தமிழ்நாடு சுவாமிமலை தேவசேனாதிபதி ஸ்தபதியாரும் தங்கள் கைவண்ணங்களைச் சிலைவண்ணங்களாக வார்த்துத் தந்தார்கள். அவையாவும் மனதைக் கொள்ளைகொள்ளும் பொலிவு கொண்டவை. இவற்றை எல்லாம் நாங்கள் எப்படிச் செய்கின்றோம் என்று கூட நாங்கள் இடைக்கிடை வியப்படைவது உண்டு. எல்லாம் அவனருள்தான் என்று சாந்தி அடைவோம். இவற்றை நானும் இந்தக்கோயிலின் தர்மகர்த்தாவும் தலைவருமான உயர்திரு. இரா.சண்முகம் ஜே.பி அவர்களுமாக இந்தியாவுக்குச் சென்று எடுத்து வந்தோம். இவற்றுக்கான பூரண ஒத்துழைப்பை வவுனியா அரச அதிபர்களாக இருந்த திரு. லங்காநேசன், திரு.தில்லைநடராசா, திரு.கே.கணேஷ் ஆகியோரும் இந்துக் கலாசார அமைச்சராக இருந்த கௌரவ பி.பி.தேவராஜ், அமைச்சுச் செயலாளராக இருந்த கா.தயாபரன், தற்போதைய கலாசார அமைச்சின் செயலாளர் திரு.யோகநாதன் இந்து சமயத் திணைக்களப் பணிப்பாளர் திரு.க.சண்முகலிங்கம், உதவிப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், திறைசேரி அதிகாரி சண்முகலிங்கம் போன்றோர் பெருந்துணை புரிந்தார்கள். இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து குடமுழுக்கைச் செய்வதற்காக கும்பாபிஷேகக் குழு ஒன்றை, சிவனடியார்களையும், திருப்பணிக்கு வாரி வழங்கிய கொடை வள்ளல்களையும், அனுபவமிக்க ஆலயபரிபாலன சபையினரையும், தத்துவநூல்களைக் கற்றுணர்ந்த கல்விமான்களையும் ஒருங்கு கூட்டி அமைத்து அதன்படி மகாகும்பாபிஷேக பிரதம குருவாக நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வராக் குருக்களைக் கொண்டு கடந்த 01.05.1996 இல் ஆவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத்தையும் இனிதே நடத்தி முடித்தோம். இவையாவும் "முன்னவன் முன்னின்றால் முடியாதது ஒன்றுமில்லை" என்பது போல் கருணைக்கடலாம் சித்தி விநாயகர் பேரருளோடும், அம்மையப்பனின் கருணைக் கடாட்சத்தாலும் தான் இனிது நிறைவெய்தின என்பதில் எமக்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை. எனக்குப் பக்கபலமாக இருந்த என் உடன்பிறவா அண்ணர் இரா.சண்முகம், ஜே.பி அவர்களும் உடன்பிறப்பான திரு.ஆறுமுகம் உமாதேவனும், மறைந்தும் மறவாமல் என்னிடத்தே வந்து நினைவூட்டி வரும் திரு.நா.இராமநாதனும் அவர் குடும்பத்தினரும், நிலையங்கள் எடுக்கும்போது ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தி செய்து ஊக்கமளித்த திரு. சின்னத்தம்பிஜயா இவர்கள் துணையோடு இந்தச் சிவன்கோயில் திருப்பணியைத் தொடர ஒரு கைகொடுப்பதை மற்றக் கைக்குக் கூடத் தெரியக் கூடாது என்ற மனநிலையில் வாரிவழங்கினார்கள். புண்ணியசீலர்கள். அந்த நிதியில் உயர்ந்தது தான் இந்த சிவாலயம். இதை இங்கு வரும் அடியவர்கள் யாவரும் அறிவார்கள். அப்படி அவர்கள் வழங்கிய நிதியைக் கொண்டு ஆலயத்தை அமைத்து தற்போது காலப்பூசை செய்வதற்கான ஒழுங்குகளும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் துணையுடன் மேற்கொண்டுள்ளோம். ஏனைய திருப்பணிகள் (கோபுரங்கள், தீர்த்தம், திருத்தேர்கள், உள்வீதிக் கூரைத் தள நிர்மாணங்கள், நால்வர் சந்நிதி உட்பட அறுபத்து நால்வர் திருவுருவச்சிலைப் பிரதிஷ்டை, வாகனசாலை நிர்மாணம், பூந்தோட்டம், அமுதசுரபி மண்டபம், திருக்கல்யாண மண்டபம், திருமுறை மண்டபம்) பற்றியும் தங்கள் முன் விரைவில் அறியத் தருவோம். தாங்கள் அவற்றிற் பங்குகொண்டு நாம் பிறந்த பிறப்பின் பயனை உணர்ந்து செயற்படுவீராக. (1996 ஆம் ஆண்டு "சிவதத்துவ மலரில்" வெளியிடப்பட்டது)

S.K.
…ADERS
…r Kulam,
…149
…918

SATHEES MOTORS & WELDING WORKSHOP
All Kind of Motor Cycles and Gates, Grills Welding
223/69,
7th LANE KOVILPUTH KULAM
VAVUNIYA.
077 493 3604

VIJAYAS
விஜயாஸ்
Dealers in All Kind of Furniture
No. 306, Horavapothana Road,
Vavuniya.
T.P: 077 901 6946, 024 222 1848

J.P.K.
144, பஜார் வீதி, வவுனியா.
024 222 2570
K.P.K. 24, பஸ்நிலையம்,வவுனியா.
024 222 0295

யாழுகி
ஐஸ்கிரீம்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
077 023 2328

…ன்
…ைத.
…15

கனகரத்தினம் கனகேஸ்வரன்
நாதன் சிற்பக்கலைக் கூடம்
எல்லப்பர் மருதங்குளம்,
வவுனியா.

NEW VELMURUGAN JEWELLERS
Dealers in pure 22 kt Genuine Gold Jewellery
நியூ வேல் முருகன் ஜுவலர்ஸ்
186, பஸார் வீதி, வவுனியா
186, BAZAAR STREET, VAVUNIYA
E.mail: nvmjewellers@gmail.com
TEL: 024 222 8157

S.THAMBIRAJAH
GNANAMS CAFE
No.25, Kanthasamy Kovil Road,
Vavuniya.
T.P.024 222 2083

NEW ARUMUGAM STORES
82, Bazaar Street,
Vavuniya.
024 222 2325



# யாழ்ப்பாண

## ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ

# தேர்த்திருவிழா சிறப்பு

### வண்ணை

வண்ணை வைத்தீஸ்வரன் கோயில், கோபாலச் செட்டியாரின்
என்பவரால் இற்றைக்கு இருநூற்றுப்பதினொரு வருடங்களுக்கு
பெரும் பொருள் ஈட்டி தனவந்தரான வைத்திலிங்கச் செட்டியார் தன
போது கூழங்கைத்தம்பிரான் செட்டியாரிடம் உன்னை இந்த நி
வைத்தியநாதப் பெருமானுக்கும் தையல் நாயகித் தாயாருக்கு
வேண்டும் என்று கூறினார். செட்டியார் அதற்குச் சம்
சைவசமயத்தினரைத் துன்புறுத்தியும் தங்கள் சமயத்
சைவத்தையும் தமிழையும் வளர்க்க முற்பட்ட
செல்வாக்கினைப் பாவித்து வண்ணை
ஒல்லாந்த அரசிடம் அனுமதியைப் பெற்ற
இல் வேலை யினைப் பூர்த்தி செய்து,
மானுக்கான பரிவாரக் கோயில்களையும்
சாதாரண வருடம் சித்தரை மாதம்
நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம்
கிரமமாக நடைபெற்றுவரச் செய்தா
ஆலயத்தை தாமே இனிது
ஸ்ரீகோபாலச் செட்டியார், ஸ்ரீகந்தப்
விட்டுத் தமது அந்திம காலத்தைக்
காலம் சீவித்த பின், திருவருளால்
கருங்கல்லினால் ஒரு தொட்டி அமைப்பித்து, அத் தொட்டியில்
இவர் போன்ற மகா புண்ணிய புருஷர் உலகில் முன்னும் பின்னும் இ
கோபாலச் செட்டியார், கந்தப்பச் செட்டியார், பொன் னுச்சாமிச்
ஆகியோர் பரிபாலித்து, சில காலம் வைத்தியலிங்கச் செட்டியாரி
ஆச்சி அவர்களாலும், பின்னர் அவர்களது புதல்வர் கந்தப்புச்
வைத்திலிங்கச் செட்டியார் அவர்களால் 1805 ஆம் ஆண்டு
(வழித்தோன்றல்களால்) தொடர்ந்தும் பரிபாலிக்கப் பட்டு வருகின்



### நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசி

இன்று ஒரு பொன்னான நன்னாள்-யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் அம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் ஆலயத்தில் இன்று தேர்த்திருவிழா அழகிய ஐந்து ரதங்களில் எம் பெருமானது திருக்கோலத்தை அழகுறக் காணலாம்.

முதலில் விநாயகரும் பின்பு முருகனும் வள்ளி தெய்வானையும் அடுத்து சிவனும் உமையும் பாலமுருகனும் விளங்கும் சோமஸ்கந்த மூர்த்தமம் பின்பு அம்பிகையும் அடுத்து சண்டேஸ்வரருமாக ஐந்து ரதங்களும் அடுக்கடுக்காய் அசைந்து வரும் அருட்காட்சியின் திறம் சொல்லுந்தரமன்று.

மஹோற்சவத்திலே தேர்த்திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். இவ்வுலகில் நடைபெற்று வருகின்ற அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்க எம்பெருமான் வைத்தீஸ்வரன் தேரிலே புறப்படுகின்றான். ஆதலால் வைத்தீஸ்வரனை வழிபாடு செய்கின்ற அடியவர் கூட்டம் ஆனந்த கோலாகலத்துடன் பக்திப் பரவசத்துடன் இன்பமயத்திலே இணைந்து நிற்கும் அற்புதக் காட்சியை இன்று இங்கே காணலாம். ஆகவே இன்றைய பொன்னாளிலே வைத்தீஸ்வரனை வழிபடும் அடியவர்கள் அனைவரும் சகல வித்தகைகளும் நிறையப் பெற்று சந்தோஷ மயமான வாழ்க்கை வாழ உளமாரப் பிரார்த்தித்து அருளாசி நல்கி வாழ்த்தி வணங்குகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை ஆதீனம்.**



### மகோற்சவ பிரதம குவின்

இந்து சமுத்திரத்தின் முத்துப்போல் விளங்கும் இலங்கைத் திருநா
அணிமித்ததாய் விளங்கும் வண்ணையம்பதியிலே கோயில் கொ
வைத்தீஸ்வரப் பெருமானின் வருடாந்த நைமித்திய துர்முகி வருட
உலகெல்லாம் உணர்ந்து ஓதற்கரியவானகிய சிவப்பெருமான் ம
வருத்தம் எல்லாம் நீறாகப் போக நின்னருள் புரியவென்று ஸ்ரீமத்
சோமஸ்கந்த மூர்த்தமாக ரதத்தில் எழுந்தருளி ஆரோகணிக்கும் அற்
ஆன்ம விடுதலையின் பொருட்டு மனிதனாகப் பிறந்த உயிர்கள் அனைத்தும் இறை
மெஞ்ஞான ஒளியை பெறும் வழியை ஏற்படுத்துவதே தேர்த்திருவிழாவாகும்.
பிடிக்கலாம்" எனக் கூறிக்கொள்வர். அந்த வகையில் இன்றைய பஞ்ச ரத பவனியில்
பெற்று சீரோடும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத
ஆசிகூறி அமைகின்றேன்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வா
சிவஞான சாகர ஈசான சிவாச்சாரியார் சிவ
மகோற்சவ குருவும் தேவஸ்தான பிரதம கு
வண்ணை வைத்தீஸ்வரம், யாழ்ப்பாணம்

வட-மாகாணத்தில் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

**கிருபா லேணர்ஸ்**

(அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதி பயிற்சிப் பாடசால)
மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்.




தலைமைக் காரியாலயம்:
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353/ 021 492 3200/
077 722 5292

A9 வீதி, கிளிநொச்சி
(கச்சேரி முன்பாக)
021 228 5505, 071 454 695

216, A9 வீதி, வவுனியா
(வசந்தி திரையரங்கு முன்பாக)
024 222 7777, 077 710 0444

**முக்கிய அறிவிப்பு**

பரிமளா ஸ்ரோர்ஸ் V.S.P. நல்லெண்ணெய்
போலிகளைக் கண்டு ஏமாறாமல் V.S.P. நல்லெண்ணெய் வாங்கும் போது தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்

**பரிமளா ஸ்ரோர்ஸ்**

26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரியைப் பார்த்து வாங்கவும்
அன்பான வாடிக்கையாளர்களே உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பினும்
எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்
021 222 9165, 021 222 4135




aaa Meta



கொடி மரம், கலசல
அங்கிகள், விளையாட்டு
கதிர்ப்பாத்திரம், நற்கரு
நிறைவுக்கல் என்பன

**ஜெகன் களஞ்சியம்**

இல.477,
காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 5055

**சண்முகம்**

சைவ உணவகம்
கன்னாதிட்டி
(சிவன் கோயிலடி)
யாழ்ப்பாணம்.

**கிருஷ்ணா நகை மாளிகை**



தங்கப் பவுன் நகை வியாபாரம்
அசல் 22 கரட் தங்க நகைகள்
உத்தரவாத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
இல.09, கன்னாத்திட்டி வீதி,
யாழ்ப்பாணம்
கிளை - கிருஷ்ணா அடகு கடை
370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**குகன் நகைத் தொழிலகம்**

தங்கப்பவுண் நகை வியாபாரம்
உங்கள் இளமைக்கு மேலும்
மெருகூட்டும் கண்கவர் 22 CT
தங்க நகைகளை குறித்த தவணையில்
பெற்றிட சிறந்த ஸ்தாபனம்
இல.264, (380) சிவன்கோயிலடி,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
077 500 4696 / 077 272 7717
/ 021 490 0607



Dulux PH
Ha
Branches:
SIVAKUMARAN ENT
No. 75, STANTLEY RO
JAFFNA.
Tel: +94 21 222 4117, +9
SHIVAN MOTORS



**உமா களஞ்சியம்**

378, (269), கே.கே.எஸ். வீதி,
(சிவன் கோயிலடி), யாழ்ப்பாணம்.

**சிவாஸ் நகையகம்**

இல.8, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவசக்தி களஞ்சியம்**

01,கன்னா திட்டி வீதி,
சிவன்கோயிடி யாழ்ப்பாணம்.



# ணம் வண்ணை

## ீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானம்

## பு மலர் – 08.04.2017



### ண வைத்தீஸ்வரன் கோயில்

டியாரின் திருமகனான வைத்திலிங்கச் செட்டியார் களுக்குமுன் (கி.பி 1790) கட்டுவிக் கப்பட்டது. டியார் தனக்கென ஒரு மாளிகை அமைக்க எண்ணிய ந்த நிலைக்குக் கொண்டு வந்த பரம பிதாவாகிய யாருக்கும் யாழ்ப்பாணத்தில் ஆலயம் அமைக்க குச் சம்மதித்தார். சைவ ஆலயங்களை இடித்தும், ர் சமயத்தை பரப்பி வந்த ஒல்லாந்தர் மத்தியில் பட்ட வைத்திலிங்கச் செட்டியார் அவர்கள் தனது ணை வைத்தீஸ்வரன் கோயிலை கட்டுவதற்கு ப் பெற்றார். 1787 ஆம் ஆண்டில் ஆரம்பித்து 1790 செய்து, வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெரு களையும் அமைத்து, அதே ஆண்டி லேயே (1790) மாதம் பூர்வபட்ச சப்தமி யோடு கூடிய புனர்பூச ஷேகம் செய்வித்தார். நித்திய நைமித்தியங்கள் செய்தார்.

இனிது பரிபாலித்த பின், தமது புத்திரர்களான ஸ்ரீகந்தப்பச் செட்டியார் அவர்களி டத்து ஒப்புவித்து த்தைக் காசியிற் கழிக்க விரும்பி அங்கு சென்று சில ருளால் தமது உடல் நிரியாணத்தை உணர்ந்து டியில் ஆரோகணித்துக் கங்கையில் இறங்கினார். ன்னும் இருந்ததில்லை என்றால் மிகையாகாது. பின் துச்சாமிச் செட்டியார், வைத்திலிங்கச் செட்டியார் ட்டியாரின் மனைவியார் திருமதி வை.கண்ணம்மா ந்தப்புச் செட்டியாராலும் கோபாலன் செட்டியார் ஆண்டு வரையப்பட்ட சாசனத்தின்படி அவரது வருகின்றது. நல்லைநகர் ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார். அவர்களுக்கு பின் வித்துவ சிரோன்மணி பொன்னம் பலபிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப் பையர் சுவாமிகள் செய்து வந்தார்கள். நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன நிறுவுனர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் ஸ்வாமிகள், துறவு பூணும் வரை முத்தமிழ் மணி சி.எஸ் எஸ். மணிபாகவதர்என்ற பூர்வாஸ் சிரம நாமத்துடன் சமயப் பிரசங்களை இவ்வாலய வசந்த மண்ட பத்திலே செய்து வந்தார்கள். இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றது. இத் தலத்திற்கு தீர்த்தம் வண்ணை மேற்கிலுள்ள வில்லூன்றி என்னும் சமுத்திர சங்கம தீர்த்தமாகும். இலங்கையின் ஏனைய பாகங்களிலும் யாழ்ப் பாணத்திலும் உள்ள சைவத் தலங்களெல்லாம் இவ்வாலயத்தைப் பின் பற்றி நித்திய நைமித் தியங்கள் நடத்துவதற்கு இக் கோயிலே ஆதாரமாக விளங்கி யது. இத் தலத்தில் உலக மாதாவாகிய பாலாம் பிகை (தையல்நாயகி) அம்பாளோடு வைத்தீஸ்வரப் பெருமான் கோயில் கொண்டெழுந் தருளி சைவ நன் மக்களுக்கு கருணை சுரந்தருளுகிறார்.

2002 ஆம் ஆண்டு கும்பபிஷேக மலரின் பிரதியாக்கம்

### குவின் ஆசிச் செய்தி

கத் திருநாட்டின் வடக்கே அமைந்துள்ள யாழ்ப்பாண நகரினை ாயில் கொண்டருளாட்சி செய்கின்ற ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத முகி வருட மஹோற்சவத்தின் பஞ்சரத உற்சவம் இன்றாகும். ருமான் மாறாப் பிணியில் அகப்பட்டு வருந்தும் அடியார்களின் ன்று ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் ரிக்கும் அற்புதக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ந்தும் இறைவன் பால் அன்பு கொண்டு அஞ்ஞான இருளை நீக்கி ளாவாகும். இதனாலேயே "வடம் பிடித்தால் வானத்தில் இடம் பவனியில் அடியவர்கள் கலந்துகொண்டு சகல ஐஸ்வரியங்ளும் ா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் பாதாரங்களை வேண்டி

லாரும் வாழ்க"

ரியார் சிவப்பிரம்மஸ்ரீ சொ.இ.விக்கினேஸ்வர குருக்கள்
ன பிரதம குருவும்.
ழ்ப்பாணம்.



### ஆசிச் செய்தி

அன்பருக்கு அன்பனாய் ஆறுதல் தருபவனே
இன்பமய ஜோதியாய் ஈறிறில் மிளிர்பவனே
உன்பாதம் சரணடைந்தால் ஊன்றுகோல் ஆகிடுவாய்
என்றும் எதிலும் ஏகாந்தமானவனே
ஐங்கரனுக்கும் ஆறுமுகனுக்கும் அப்பனுமானவனே
ஒளி மயமாய் உலகை ஆள்பவனே ஐயனே
ஓங்காரத்துவ உபதேசத்தை உணர்ந்தவனே
ஔகேனத்தின் கருப்பொருளாய் காட்சி தருபவனே
வண்ணையில் பிணி நீக்கும் வைத்தீஸ்வரராக
யாழ் மண்ணின் துயர் துடைக்க இன்று பாரிலே
தேரேறி வருகின்றார் வாலாம்பிகை சமேதராய்
வாரீர் அன்பர்களே! அடியார்களே!
அவனருள் பெற்றிடவே வடம் பிடித்து
இழுத்திடுவோம் வையகத்தில் வாழ்வாங்கு
வாழ்ந்திடுவோம் இன்பமயமாக.

ஈஸ்வரபாதம் சரவணபவன்
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ், கிளிநொச்சி மாவட்டம்.

அகிலாண்டேஸ்வரரே அருள் புரிய வேண்டும்!
ஆதிபரமூர்த்தியே! ஐயனே! அகிலலோக நாயகனே!
அகிலாண்டேஸ்வரரே அருள்புரிய வேண்டும் ஐயா
நீதியை நிலைநாட்டி நிம்மதியால் நாம் வாழ
சோதி மயமானவரே! தேரேறி வாருமையா!
நாதியற்ற எங்களுக்கு நல்லருள் புரிந்து காத்து
பீதிபோக்கி இந்நாட்டில் சமாதானம் நிலவ
பாதியுமைக்குக் கொடுத்து பரமபதம் அளித்தவரே!
மீதியிருக்கும் எமக்குத் திருவருள் புரியுமையா!

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்.

etal Works
ம், கலசலங்கள், திருவாசிகள், கிரீடங்கள்,
விளையாட்டு பரிசளிப்பு உபகரணங்கள் மற்றும்
ிரம், நற்கருணைப் பாத்திரம், நினைவுக்கல்,
ல் என்பன ஒடருக்கு செய்து கொடுக்கப்படும்.
NO. 443, K.K.S. Road,
வண்ணார்ப்பண்ணை,
யாழ்ப்பாணம்.

68/c கண்ணாதிட்டியில் அமைந்த
பிரணகா நகைத்தொழிலகம்
இல.11, கண்ணாதிட்டியில்
நியூ பிரணகாஸ் நகைத்தொழிலகமாக
புதுப் பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
நியூ பிரணகாஸ் நகைத் தொழிலகம்
நியூ பிரணகாஸ் யுவல்லறி & வேக்சொப்
No:11, கண்ணாதிட்டி றோட்,
(சிவன் கோவில் முன்பாக) யாழ்ப்பாணம்.






SARANGA
MONEY EXCHANGE (PVT) Ltd.
NO.157/1, Kasthuriyar Road, Jaffna.



Saaranga Jewellery 021 222 6972

PHILIPS
sense and simplicity
Harris
RAN ENTERPRISES
TLEY ROAD,
2 4117, +94 21 222 4183
MOTORS STORES

K.K.J. WORK SHOP & SALES CENTER
புதுவருடத்தை முன்னிட்டு
அனைத்துத் தளபாடங்களும்
விசேட கழிவுடன் பெற்றுக்
கொள்ளலாம்
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
தொழிலகம்: இல.11,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே. 077 9037 203



கிருஷ்ணா
சிற்பத் தொழிலகம்
சக்தி ஆச்சாரி கிருஷ்ணசாமி
தொ. 077 946 8382 / 021 492 1785
E.mail: krishna.mettral.work@gmail.com
470, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
81, B.A தம்பிலேன்,
ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.



ராஜகோபுரம், பண்டிகை, தேர்கலசங்கள்,
பித்தளை, எவர்சில்வர், திருவாசிகள், கொடிஸ் தம்பம்,
வெள்ளி, செம்பு, அங்கிகள், கிரீடம், கருங்கல், மைம்பொன்
விக்கிரகங்கள் மற்றும் கோவில் உபகரணங்கள் குறித்த
தவணையில் சிறந்த முறையில் செய்து தரப்படும்.

ம்
ஷாம்பவி பதிப்பகம்
Prop: S.Puvindren
No.267, 269, Kasthuriyar Road,Jaffna.
Tel: 021 222 4143 Mobile: 077 618 4425
Email: Shampavi 2009@gmail.com
Branch:
Karanthan Road,
Neervely.






நல்லூர்க் கந்தன்
திருமண சேவை
எல்லா மதம், எல்லா இனம்,
வெளிநாடு, உள்நாடு
ஆகிய சகல திருமணங்களும்
எம்மால் செய்து கொடுக்கப்படும்.
இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
வி.ஜெயந்தி
தொ.பே. 077 973 3183,
021 227 1468





# வவு
# அருள்மிகு அகிலான
# தேர்ச் சி

## காலை 8.00 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து சுவாமி தேரில் காலை 9.00 மண

### குருக்களின் ஆசி உரை



எல்லாம் வல்ல அகிலாண்டேஸ்வரி உடனுறை அகிலாண்டேஸ்வரர் சுவாமியின் பாத கமலங்களைப் பணிந்து பாலில் நெய் யாக இருக்கும் இறைவனை ஆன்மாக்கள் வழிபடும் பொருட்டு வவுனியா நகரின் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கோயிற்குளப்பதியில் அருளாட்சி செய்து வருகின்றது அகிலாண்டேஸ்வரப் பெருமானுக்கு மஹோற்சவம் என்று சொல்லப்படுகின்றது பெரு விழாவிலே தேர்த் திருவிழாவில் இறைவனின் ஐந் தொழில்களில் அழித்தல் தொழிலை உணர்த்தும் உற்சவத்தை கண்டுகளித்து ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை நீக்கி இப் பூவுலக மக்கள் அனை வரும் சகல செல்வங்களும் பெற்றுவாழ எம்பெருமானை என்றென்றும் வணங்கி எமது நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ. இரகுநாத. கமலேஸ்வரக் குருக்கள்**
**திருக்கோயில் பிரதமகுரு**

### வாழ்த்துரை



திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பெற்ற ஈழ மணித் திருநாட்டில் வவுனியா, கோயில்குளம் என்ற சிறப்புப் பெயரைக் கொண்ட இடத்தில் 18.08.1989 இல் ஒரு சிவாலயம் அமைக்கத் திருவருள் கூடியது. இத்தினத்தில் சங்குஸ்தாபனம் செய்த இப்பணியை ஆரம்பித்து வைக்கும் திருவருள் எனக்குக் கிடைத்தது. அன்று முதல் ஆரம்பமான தெய்வீகப் பணி. ஆகம விதிப்படியான முறையில் அமையப்பெற்ற ஒரு சிவாலயமாக நிறைவுற்றது. காஞ்சிப் பெரியார் இத் திருத்தலத்துக்கு அருள்மிகு அகிலாண்டேஸ்வரர் சமேத அகிலாண்டேஸ்வரி திருக்கோயில் என்ற நாமத்தைச் சூட்டி மூல மூர்த்தியாகிய சிவலிங்கப் பெருமானையும் அம்பாளையும் தமது ஆசியுடன் பிரதிஷ்டை செய்வதற்கு கிடைத்தது இத் தலத்துக்கு ஒரு தனிச்சிறப்பாகும். 01.05.1996 இல் முதலாவது மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து முடிந்தது. பங்குனி உத்தரத்தைத் தீர்த்தமாகக்கொண்டு சிவனின் பத்து நாள் பெருவிழாவும் ஆடிப்பூரத்தைத் தீர்த்த விழாவாகக்கொண்டு பத்து நாள் பெருவிழா அம்பாளுக்கும் 1997 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் 12.02.2013 இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமான சிவனுடைய பெருந் திருவிழா இன்றைய தினம் தேர்த் திருவிழாவுடன் சிறப்புறுகின்றது. இன்று வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் அடியார்களுக்கு எம் பெருமானின் தேர் விழாக் காணக் கிடைத்தது ஒரு பெரும் பேறான நாளாகும். தேர் வீதியுலா வரும் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப் பெருமானை நினைத்து வழிபடும் அனைவருக்கும் அருள்புரிவாராக என்று வாழ்த்தி வணங்கிப் பிரார்த்திக்கின்றேன். தந்தையும் தாயும் ஆகிய வளர்த்தனை போற்றி.

**ஆ.தியாகராசா (பரம்பரை அறங்காவலர்),**
**ஸ்ரீ. நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு**

### நல்லை ஆதீன கு



உலகெல்லாம் நிறைந்து வ
சிவபெருமான் வவுனியாவிலே
சமேத ஸ்ரீஅகிலாண்டேஸ்வரர்
வழிபடும் அடியார்களின் அ
தேர்த்திருவிழா. அழகிய ரதத்திலே ஆரோ
ஒன்று. வவுனியா வாழ் அடியார்
அகிலாண்டேஸ்வரரின்அருட்பதம் பணிந்து
நல்கி வந்தித்து சேவித்து. வாழ்த்தியருளி ம

"என்றும் கே
**ஸ்ரீலஸ்ரீ தே**
**இரண்டாவ**

### வவுனியா கோயி
### எந்நாட்டவருக்கு



ஊர் கூடி தேர் இழுத்து துன்ப து
இந்நாளில் அஞ்ஞான இருள் அ

**யாழ்ப்பாணம்,**


## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**ஆதி**
**திருமண மண்டபம்**



சொர்க்கத்தில் நிட்சயிக்க பூமகள்
பிரசவிக்க உள்ளத்தால் ஒன்றுபட்ட
'உங்களை' உலகறிய வாழவைக்கும் ஆதியாய் விளங்கிடும்
ஆதி திருமண மண்டபம் திருமண பந்தத்தில் கரங்களை
இணைத்திட பூப்புனித நீராட்டை மகிழ்வுடன் நிகழ்த்த,
பிறந்த நாளினை பெருமையுடன் கொண்டாட சிறப்பான
ஒழுங்கமைப்பை பெருமையுடன் வழங்கும்
**ஆதி திருமண மண்டபம்**
ஹொரவப் பொத்தான வீதி, சின்ன புதக்குளம், வவுனியா.
தொடர்புகளுக்கு- 024 222 1153, 024 222 1344,
077 137 2137, 077 978 5676, 077 137 0356.



**கீர்த்தி**
**அரிசி ஆலை**
சி.விவேகானந்தன்
உரிமையாளர்
இலக்கம்: 552, 554,
ஹொறோவபொத்தான வீதி,
வெளிக்குளம், வவுனியா.
தொலைபேசி: 077 306 7014
காரியாலயம்: 024 492 8460



**வரதன்**
**அரிசி ஆலை**
ஹொறோவபொத்தான வீதி,
நம்பைக்குளம்,
வவுனியா.



**T.S.K**
**TRADE**
No. 41, Susaipillaiyar Kulam,
Vavuniya.
Tel: 024 222 6149
Mob: 077 758 5918

மங்கையர் மனங்கவரும்
தரமான தங்கநகைகளின் அரங்கம்
**நியூ காஞ்சனா ஜுவலர்ஸ்**
அசல் 22 கரட் ஆபரணங்களை குறித்த
தவணையில் விரும்பிய



டிசைன்களில் செய்து
கொள்ள நாடுங்கள்
148/A, பஸார் வீதி, வவுனியா.
கிளை: **வெஸ்டன் ஜுவலர்ஸ்**
71 A, பஸார் வீதி, வவுனியா.
தொ.பே: 024 222 1020

**KUGAN'S**
AUTOMOBILE SPARES
DEALERS IN MOTORS
CYCLE SPARE PARTS
TWO WHEEL TRACTOR PARTS
&WATER PUMP PARTS



110,
BAZAAR STREET,
VAVUNIYA
T.P. 024 222 2475,
FAX: 024 222 2474



**PRINCE HOTEL**
#111,Kandy Road,
Vavuniya.
T.P. 024 222 7834
077 600 0800

**லக்ஸ்சான்**



**சிற்பக் கலைக் கூடம்**
844/16
அளுத்மாவத்தை,
கொழும்பு – 15